வாழ்வதும் நாவாலே, சாவதும் நாவாலே

செய்தி : சகோதரர் ஜான்சன்

"வாழ்வதும் நாவாலே, சாவதும் நாவாலே" நீதிமொழிகள் : 18:21. நம்முடைய வார்த்தையில் ஜீவன் இருக்கிறது. வாழ்வு இருக்கிறது. நம்முடைய வார்த்தையிலே மரணமும் இருக்கிறது. வாழ்வதும் நாவாலே, நீ சாவதும் நாவாலே; உன்னுடைய வார்த்தையில் தான் வாழ்வும் இருக்கிறது. சாவும் இருக்கிறது. உன்னுடைய வார்த்தையில் தான் ஆசீர்வாதமும் இருக்கிறது. சாபமும் இருக்கிறது. கடவுள் நம்முடைய நாவிலே தான் ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் வைத்திருக்கிறார். நம்முடைய நாவிலே தான் வாழ்வையும் சாவையும் வைத்திருக்கிறார். நாம் என்ன பேசுகிறோமோ, அதனுடைய விளைவுகளை நாம் அனுபவிக்கிறோம். நிறைய பேர், நான் ஜெபிக்கிறேன் ஆனாலும் ஒன்றும் நடக்கவில்லை, கடவுள் உதவி செய்யவில்லை என்கிறார்கள். கடவுள் கவனிக்கவில்லை என்கிறார்கள். நாம் ஜெபிப்பதை கடவுள் கவனிக்கிறார். அவர் அதைக் காது கொடுத்துக் கேட்கிறார். ஆனால் அதே சமயத்தில் ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் மனிதர்களுடைய நாவிலே வைத்திருக்கிறார். அப்போது நீங்கள் எவ்வளவு தான் ஜெபம் செய்தாலும், நீங்கள் நாவிலே பேசக்கூடிய வார்த்தைகள் சரியாக இருந்தால் தான் உங்கள் வாழ்விலே ஆசீர்வாதங்கள் வரும். நாவிலே பேசுகிற வார்த்தைகள் சரியில்லை என்றால் தேவனுடைய ஆசீர்வாதங்கள் வராமல், மரணமும் சாபமும் நம்முடைய வாழ்வில் வருகிறது.

ஆண்டவருடைய பிள்ளைகள் அடிக்கடி திரும்பத் திரும்ப நீங்கள் பேசுகிற வார்த்தைகளைக் கவனித்துப் பார்க்க வேண்டும். யோசித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இரவு தூங்கச் செல்லுமுன் யோசித்துப் பார்க்க வேண்டும். என்ன வார்த்தைகளை பேசியிருக்கிறோம்? எப்படிப் பேசியிருக்கிறோம்? பேசிய வார்த்தைகள் கடவுளுக்கு பிரியமானதாக இருந்ததா? என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது பேசிய வார்த்தைகள் சரியாக இருந்தால், நாம் பேசிய வார்த்தைகளால் நாம் ஆசீர்வாதத்தை அனுபவிக்க முடியும்.

செக்கரியா என்று சொல்லக்கூடிய ஒரு குரு இருந்தார். அவர் நேர்மையாளர் என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஜெபிக்கக் கூடியவராக இருந்தார். ஆண்டவர் பார்வையில் உண்மையுள்ளவராக இருந்தார். அவருடைய வாழ்க்கையில் குறைகள்

எதுவும் இல்லை. கடவுளை முழுவதுமாக நம்பி, ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்து தான் வாழ்ந்தார். ஆனாலும் பல வருடங்கள் அவருக்கு குழந்தை இல்லை. இதனால் ஆண்டவரிடம் ஜெபிக்கிறார். வயதான பிறகு கூட அவர் அந்த ஜெபத்தை விடவில்லை. குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிந்த பிறகு கூட, செக்கரியா ஜெபம் செய்கிறார். செக்கரியாவிடம் எந்தக் குற்றத்தையோ, குறையையோ நாம் பார்க்க முடியாது. அவர் ஜெபித்த ஜெபத்திற்கு ஆண்டவர் பதில் கொடுக்க விரும்பினார். ஆண்டவர் ஒரு வானதூதரை அனுப்பினார். அவர் பலி செலுத்தும் வேளையில், அவருக்கு முன்பாக கபிரியேல் வானதூதர் அங்கு வந்து நின்று, செக்கரியா உன்னுடைய ஜெபம் கேட்கப்பட்டது. உனக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்று சொல்கிறார். அந்தக் குழந்தை எப்படி எல்லாம் இருப்பார்? அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார். பலரை நல்வழிக்குக் கொண்டு வருவார் என்று சொல்லும் போது, செக்கரியா அதை மாற்றிச் சொல்கிறார். வானதூதரிடம், எனக்கும் வயதாகி விட்டது. என் மனைவிக்கும் வயதாகி விட்டது. ***எப்படி இது நடக்கும்*** என்கிறார். யோசித்துப் பாருங்கள். செக்கரியா என்ன ஜெபம் செய்கிறார்? ஒரு குழந்தை வேண்டும் என்று ஜெபம் செய்கிறார். ஆண்டவர் ஒரு குழந்தையைத் தருகிறேன் என்று சொல்கிறார். ஆனால் செக்கரியாவின் வாய் என்ன சொல்கிறது? எனக்கும் வயதாகி விட்டது. என் மனைவிக்கும் வயதாகி விட்டது.

நிறையக் கிறிஸ்தவர்கள் உங்களுடைய தேவைகளுக்காக, உங்களுடைய பிரச்சனைகளுக்காகத் தேவ சமுகத்தில் பாரத்தோடு ஜெபிக்கிறீர்கள். தேவனுடைய பிரச்சனை என்ன? உங்களுக்கு எப்படியாவது பதில் கொடுக்க வேண்டும். ஜெபிக்கிறவர்களுக்கு உங்கள் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். மனிதர்கள் கூக்குரலிடும் போது அவர்கள் கூக்குரல் கேட்கப்பட வேண்டும். நீங்கள் விரும்புகிறீர்களோ இல்லையோ ஆண்டவர் அதிகம் விரும்புகிறார். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று உங்களை விட ஆண்டவர் அதிகம் அக்கறை உள்ளவராக இருக்கிறார். உங்கள் ஆசீர்வாதத்திற்காக நீங்கள் சிலுவையைச் சுமக்கவில்லை. உங்கள் ஆசீர்வாதத்திற்காக, இயேசு சிலுவையைச் சுமந்தார். உங்கள் ஆசீர்வாதத்திற்காக இயேசு இரத்தத்தைச் சிந்தினார். நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்காகவே சிலுவையில் தன் ஜீவனைக் கொடுத்தார். அதனால் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவதை, நீங்கள் விரும்புவதை விட இயேசு அதிகமாக விரும்புகிறார்.

இப்போது பிரச்சனை என்ன? ஆண்டவர் செக்கரியாவை ஆசீர்வதிப்பதற்காக ஒரு வானதூதரை அனுப்புகிறார். வானதூதரும் குழந்தையைப் பற்றி அவர் ஒரு

தீர்க்கதரிசி. மெசியாவின் முன்னோடி. கடவுளின் பார்வையில் பெரியவராய் இருப்பார் என்று சந்தோஷமான செய்தியைச் சொல்கிறார். செக்கரியாவிடம் ஒரு மனிதரோ ஊழியரோ சொல்லவில்லை. வானதூதரே வந்து சொல்கிறார்.

கடவுள் யார் மூலமாகவும் நம்முடன் பேசலாம். ஒரு மனிதன் மூலமாகப் பேசலாம். ஊழியர் மூலமாகப் பேசலாம். சிறு பிள்ளைகள் மூலமாகக் கூட பேசலாம். ஒரு வானதூதர் மூலமாகப் பேசலாம். இறைவார்த்தை வழியாகப் பேசலாம். ஒரு காட்சி மூலமாகப் பேசலாம். கனவு மூலமாகப் பேசலாம். கடவுளே நேராக வந்தும் பேசலாம். நடக்கிற சில சம்பவங்கள் வழியாகப் பேசலாம். எந்த விதத்திலும் தேவன் மனிதர்களோடு இடைப்பட விரும்புகிறார். அவருடைய செய்தியை மனிதர்களுக்கு புரியக் கூடிய விதத்தில் சொல்லவே ஆண்டவர் விரும்புகிறார்.

செக்கரியாவிடம் வானதூதர் வந்து, உனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று சொல்கிறார். இந்தச் செய்தியைச் சொன்ன உடன் செக்கரியா, சந்தோஷத்தில் நன்றி ஆண்டவரே என்று சொல்லவில்லை. அதற்கு மாறாக, எனக்கும் என் மனைவிக்கும் வயதாகிவிட்டது. பின் எப்படி குழந்தை பிறக்க முடியும் என்று சொல்கிறார். இப்போது வானதூதர் சொல்கிறார்: நான் தேவசமுகத்தில் நிற்கும் வானதூதர். ஆண்டவரிடத்திலிருந்து உனக்குக் கொண்டு வந்தச் செய்தியை நம்பாததால், இந்தச் சம்பவம் நடக்கிற வரைக்கும் நீ ஊமையாக இரு. உனக்குப் பேச முடியாமல் போய் விடும் என்று சொல்கிறார். செக்கரியா வாயை மூடி விடுகிறார். அதன் பிறகு வாயைத் திறக்க முடியவில்லை.

நன்றாகக் கவனியுங்கள். இந்த வானதூதரை ஆண்டவர் எதற்காக அனுப்புகிறார் என்று சொன்னால், ஒரு காரியத்தை சொல்வதற்காக அனுப்புகிறார். என்ன காரியத்தைச் சொல்வதற்காக அனுப்புகிறார்? செக்கரியாவுக்கு ஒரு மகன் பிறப்பார். அவர் மூலம் என்னென்ன ஆசீர்வாதங்கள் வரும் என்பதைச் சொல்வதற்காக அனுப்புகிறார். ஆனால் செக்கரியா நீதிமானாக இருந்தார். ஜெபிக்கக் கூடியவராக இருந்தார் பக்தி உள்ளவராக இருந்தார். யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாத நல்மனம் படைத்தவராக இருந்தார். ஆனாலும் அவருடைய வார்த்தையில் ஒரு அவிசுவாசம் உண்டானது. இங்கு தான் தேவன் நம்மோடு பேச விரும்புகிறார்.

நீ வாழ்வதும் நாவாலே; நீ சாவதும் நாவாலே; நீங்கள் யாராக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும் சரி, ஏழையாக இருந்தாலும் சரி, நீ படித்திருந்தாலும் சரி, படிக்கவில்லை என்றாலும் சரி. நீ வாழ்வதும் நாவாலே, நீ சாவதும் நாவாலே; நீ யாராக இருந்தாலும் சரி, உன்னுடைய ஆசீர்வாதம் நாவிலே தான் இருக்கிறது. செக்கரியா ஆண்டவரின் வார்த்தைக்கு மாற்றிப் பேசுகிறார். தன்னுடைய விசுவாசத்தை அறிக்கை செய்வதற்குப் பதிலாக, அந்த விசுவாசத்திற்கு எதிராக, இது எப்படி நடக்கும் என்ற வார்த்தைகளைக் கேட்கிறார்.

இந்த வார்த்தைகள் என்ன செய்யும்? ஒரு மனிதனுக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்களைக் கெடுத்து விடும். கடவுள் நிறைய வாக்குறுதிகளை மனிதர்களுக்குக் கொடுக்கிறார். அந்த வாக்குறுதிகளை நம்ப வேண்டும். அந்த வாக்குறுதிகளுக்கு எதிரான சில வார்த்தைகள் அவன் வாயில் வரும்போது, அது, தேவன் அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிற ஆசீர்வாதங்களை அழித்து விடுகிறது. இன்றைக்கு நிறைய பேர் ஆசீர்வதிக்கப்பட முடியாமல் போவதற்குக் காரணம், அவர்கள் மிக மோசமானவர்கள் என்பதனால் அல்ல. அவநம்பிக்கையான வார்த்தைகளைப் பேசுகிறதினால் தான். ஏனென்றால் உங்கள் நாவில் தான் ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார். நீ பேசும் போது அந்த ஆசீர்வாதங்கள் உனக்கு வருகிறது. அதையே மாற்றி நீ பேசும் போது, உனக்கு வர வேண்டிய ஆசீர்வாதங்களை அதுவே அழித்து விடுகிறது. இரண்டையுமே மனிதருடைய நாவிலே வைத்திருக்கிறார்.

வானதூதர் செக்கரியாவைப் பார்க்கிறார். அவர் செய்ய வேண்டிய வேலையை, இந்த செக்கரியாவை வைத்துச் செய்ய முடியாது. ஏன்? செக்கரியாவுக்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு பிரச்சினை என்ன? பொல்லாத வாய். பொல்லாத வாய் என்றால், அவர் யாரிடமும் ஒன்றும் பேசவில்லை. தவறாக நடக்கவில்லை. கோபப்பட்டுச் சண்டை போடவில்லை. ஆனால் தேவனுடைய வார்த்தைக்கு மாற்றிப் பேசுகிறார். ஆண்டவருடைய வார்த்தையை மறுத்துப் பேசுகிறார். அல்லது மாற்றிப் பேசுகிறார். வானதூதர் ஒன்றைச் சொல்லும் போது, செக்கரியா, வயதாகி விட்டது என்று சொல்கிறார். இது நடக்க முடியாது என்கிறார். இப்படி மாற்றிப் பேசும் போது தான் வானதூதர் பார்க்கிறார். இவர் வாய் இப்படி இருந்தால் இவருக்கு குழந்தையைக் கொடுத்தாலும் அவர் வார்த்தையால் ஆசீர்வாதத்தைக் கெடுத்து விடுவார். அதனால் குழந்தை பிறக்கும் வரை ஊமையாக இரு என்கிறார்.

நிறைய ஆசீர்வாதங்களை நம்முடைய வார்த்தையினால் கெடுத்து விடுகிறோம். தேவன் நீங்கள் பேசுகிற வார்த்தைகளைக் கவனிக்கிறார். உங்கள் அருகிலிருந்து என்ன பேசுகிறீர்கள் என்று கவனிக்கிறார். அப்படி கவனிக்கிறதுனாலே, நீங்கள் பேசுகிற வார்த்தைகளை மீறி பெரும் பாலும் ஆண்டவர் செயல்படுவதில்லை. செக்கரியாவுக்கு வயதாகி விட்டது. இன்னும் கூட மாற்றி தான் பேசுகிறார். இன்னும் தாமதம் செய்தால் இயேசு வரமுடியாது. அதனால் வானதூதர் பார்க்கிறார். குழந்தை பிறக்கும் வரையாவது பேசமுடியாமல் இரு என்கிறார். கடவுள் ஒரு காரியத்தைச் செய்கிறார் என்றால் ஒரு காரணமும் இல்லாமல் அதைச் செய்வது இல்லை. ஏதோ ஒரு காரணம், எப்போதும் அதில் மறைந்திருக்கிறது.

இன்றைக்கு நாம் பேசுகிற வார்த்தைகளை எல்லாம் கவனித்துப் பாருங்கள். எத்தனை வார்த்தைகள் இறை வார்த்தைக்கு எதிராக நாம் பேசுகிறோம். அந்த இறைவார்த்தைக்கு எதிராக நீங்கள் பேசும்போதெல்லாம் நீங்களே உங்களுடைய ஆசீர்வாதத்தைத் தடுக்கிறீர்கள். வேறு யாரும் அதைத் தடுக்க வேண்டியது இல்லை. அதாவது இன்னும் ஒரு மொழியில் சொல்லப் போனால், பிசாசு செய்ய வேண்டிய வேலையை நீங்களே செய்து விடுகிறீர்கள்.

பிசாசின் வேலை என்ன? நீங்கள் ஆசீர்வதிக்கப்படக்கூடாது என்பது தான் பிசாசின் விருப்பம். எப்போது நீ தேவனுடைய வார்த்தையை விட்டு விட்டு வேறு ஒரு வார்த்தையை மாற்றிப் பேசுகிறாயோ, வார்த்தைக்கு எதிராக நடக்கின்றாயோ, அப்போது நீ என்ன செய்கிறாய்? **பிசாசு செய்ய வேண்டிய வேலையை நீயே செய்து முடித்து விடுகிறாய்.** அதற்கு வேலை மிக எளிதாகி விட்டது.

இறைவார்த்தையை நீங்கள் திரும்பத் திரும்ப அறிக்கையிடும் போது, தேவனோடு நீங்கள் இணைந்து செயல்படுகிறீர்கள். அதனால் காரியங்கள் எளிதாகிறது. உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்கள் தடையில்லாமல் வருகிறது. ஆனால் இறை வார்த்தைக்கு எதிராக சில காரியங்கள் நீங்கள் பேசப் பேச, பிசாசோடு நீங்கள் செயல்படுகிறீர்கள். அப்படிச் சேரும் போது தேவன் கொடுக்கக் கூடிய ஆசீர்வாதங்களை பிசாசு கூட சேர்ந்து நீங்களே தடுத்து விடுகிறீர்கள்.

ஆண்டவர் ஒரு முறை என்னிடம் சொல்லும் போது இதைத் தான் சொன்னார். கடவுள் ஒரு மனிதனை பயன்படுத்த வேண்டும் என்றால், அந்த

மனிதனுடைய நாவைத் தான் பயன்படுத்துவார். நாம் பேசுகிற வார்த்தைகளை தேவன் பயன்படுத்துகிறார். நாவை பயன்படுத்துகிறார். அதைப் போலத்தான் பிசாசு ஒரு மனிதனைப் பயன்படுத்தும் போது அவனுடைய நாவைத்தான் பயன்படுத்துகிறது என்று ஆண்டவர் சொன்னார். அதுவும் பக்தி உள்ளவர்கள் நாவைத்தான் பயன்படுத்துகிறதாம். பிசாசின் முதல் வேலை அது தான். அது உங்களைச் சுற்றி சுற்றி வந்து முதலாவது உங்கள் நாவைத் தான் அது பயன்படுத்துகிறது. உங்கள் நாவைப் பிசாசால் பயன்படுத்த முடியுமானால், உங்களுடைய ஆசீர்வாதங்களையும் பிசாசால் திருட முடியும். நிறையக் கிறிஸ்தவர்கள் அவர்கள் வீட்டிற்கு வர வேண்டிய ஆசீர்வாதங்களை அவர்களே தடுத்து விடுகிறார்கள். அங்கே தடுத்து விட்டு மிகவும் நல்ல பிள்ளையாக ஜெபக்கூட்டத்தில் வந்து ஜெபிக்கிறார்கள். ஆண்டவரைத் தேடுவது நல்லது. ஆனால் ஆசீர்வாதங்கள் தடுக்கப் பட்டதற்கு யார் காரணம்? 'ஆண்டவரே என்னை ஆசீர்வதியும்' என்று நிறைய பேர் ஆண்டவரிடத்தில் மோதுகிறார்கள்..

தேவனுடைய வார்த்தைகளை நாம் அறிக்கை செய்யச் செய்ய ஆண்டவரோடு இணைந்து வேலை செய்கிறோம். அப்படி ஆண்டவரோடு இணைந்து வேலை செய்யும் போது, உங்கள் வாழ்க்கையில் வரவேண்டிய ஆசீர்வாதங்கள் தானாக வர ஆரம்பிக்கிறது. எப்போதெல்லாம் கடவுளுடைய வார்த்தைக்கு எதிராக நீங்கள் பேசுகிறீர்களோ, அப்பொதெல்லாம் பிசாசோடு கை கோர்த்துக் கொள்கிறீர்கள். பிசாசு உங்கள் ஆசீர்வாதங்களை அழிக்க, திருடத்தான் விரும்புகிறது. அந்த வார்த்தைக்கு எதிராக நீங்கள் பேசுகிற போதெல்லாம், நீங்கள் பிசாசோடு இணைந்து கொண்டு உங்களுக்கு வர வேண்டிய ஆசீர்வாதங்களை நீங்களே அழித்து விடுகிறீர்கள். அதனால் தான் நிறையக் கிறிஸ்தவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் நல்லவராக இருந்தாலும், ஒருவேளை கடவுளுக்கு பயந்து தீமை செய்யாமல் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும், செக்கரியா ஒரு நீதிமானாகத் தான் இருந்தார். ஆனாலும் கூட அவரின் வார்த்தைகள் தேவனின் வார்த்தைகளோடு ஒத்துப் போகவில்லை. அதனால் தான் வேத வசனம் சொல்கிறது நீ வாழ்வதும் நாவாலே, நீ சாவதும் நாவாலே.

கடவுள் ஒரு மனிதனுடைய நாவை பயன்படுத்துவார் என்று சொன்னால், அவரைத் தான் நாம் தேவனுடைய ஊழியர் என்று சொல்லுவோம். அதைப் போல பிசாசு ஒரு மனிதனுடைய நாவை பயன்படுத்துமானால், அவர்கள் பிசாசின் ஊழியர்கள். யாராவது ஒருவர்

நம்முடைய நாவை பயன்படுத்த விரும்புகிறார். ஆண்டவரும் நம்முடைய நாவை பயன்படுத்த விரும்புகிறார். நம்முடைய நாவை ஆண்டவர் பயன்படுத்துவாரானால் நாம் தேவனுடைய ஊழியராக இருக்கிறோம். பிசாசு நம்முடைய நாவை பயன்படுத்துமானால் நாம் பிசாசுக்கு ஊழியர்களாக இருக்கிறோம். நிறைய பேர் வீடுகளில், குடும்பங்களில் இந்த பிசாசின் ஊழியத்தை நன்றாகச் செய்கிறார்கள். இப்படிச் செய்து விட்டு உங்கள் குடும்பங்களில் இருக்கிற சில பிரச்சினைகள், கஷ்டங்கள் தீமைகள் மாறாமல் இருக்கிறது என்றால், எப்படி மாற முடியும்? அந்தப் பிரச்சனைக்குக் கடவுள் காரணம் அல்ல. உன்னுடைய நாவு தான் காரணமாக இருக்கிறது. நீங்கள் பேசுகிற வார்த்தைகள் தான் காரணமாக இருக்கிறது. அதை நீங்கள் கண்டுபிடித்து சரி செய்வீர்களானால், அந்த பிரச்சனைகள் உங்கள் வாழ்வை விட்டு விலகிப் போகும். அதைச் சரி செய்யாமல் எவ்வளவு ஜெபித்தாலும், அதைச் சரி செய்யாமல் அந்த ஆசீர்வாதங்கள் உங்கள் வாழ்க்கையில் வர முடியாமல் போய்விடும்.

இன்றைக்கு நிறைய பேர் கஷ்டபடுவதற்குக் காரணம், அவர்கள் நாவு தான். அந்த நாவு சரியில்லாததால் அவர்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை இழந்து கொண்டிருக்கிறார்கள். அல்லது திரும்பத் திரும்ப பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து பிரச்சனையைக் கொடுக்கிறவர் அல்ல. கடவுள் சமாதானத்தின் தெய்வம். கடவுள் சமாதானத்தைக் கொடுக்கவே விரும்புகிறார். கடவுள் ஆசீர்வாதங்களின் தெய்வம். ஆசீர்வாதங்களைக் கொடுக்கவே விரும்புகிறார். ஆனால் நாம் பேசுகிற வார்த்தைகள் அந்த ஆசீர்வாதங்களைத் தடை செய்து விட்டு தீமைகளைக் கொண்டு வருகிறது. ஒரு மனிதன் தேவனுக்கு ஊழியம் செய்வானானால் - அவன் தேவனுடைய வார்த்தைகளையே எப்போதும் பேசிக் கொண்டிருப்பானானால் - அவன் தான் தேவனுடைய ஊழியன். மேடையில் நின்று மைக்கை பிடித்துப் பேசினால் தான் ஊழியர் என்றல்ல. ஒரு மணி நேரம் இறைவார்த்தை பேசிவிட்டு, மீதி 23 மணி நேரமும் அதற்கு எதிராகப் பேசிக் கொண்டிருந்தால் கடவுளுடைய ஊழியர் அல்ல. நீங்கள் பேசும் போதெல்லாம் தேவனுடைய வார்த்தையை ஒட்டியே பேசுவீர்களானால் தேவன் உங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்று பொருள். மற்றவர்கள் உணராவிட்டாலும் நீங்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று பிசாசுக்கு நன்றாகத் தெரியும்.

யார் வேண்டுமானாலும் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய முடியும். அதற்கு ஒரு மைக்கோ, கூட்டமோ அவசியம் இல்லை. எந்த இடத்தில் எந்த சூழ்நிலையிலும்

நீங்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய முடியும். ஏனென்றால் நீங்கள் பேசுகிற வார்த்தைகள் இறைவார்த்தையோடு ஒத்து இருக்கிறதுமானால் நீங்கள் கடவுளுடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதற்கு எதிரான வார்த்தைகளை நீங்கள் பேசுவீர்களானால், பிசாசின் ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒரு நாள் வரும். மரண வேளை. அப்போது கண்களை மூடுவோம். அப்படி மூடும் பொழுது யாருக்கு நாம் ஊழியம் செய்தோமோ, அவர்கள் நம்மை அழைத்துக் கொண்டு போக வருவார்கள். நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்வீர்களானால், தேவன் உங்களை அழைத்துச் செல்ல வருவார். அவருடைய தூதர்கள் வருவார்கள். நீங்கள் பிசாசுக்கு ஊழியம் செய்வீர்களானால், அந்த பிசாசுகள் உங்களை அழைத்துக் கொண்டு போக வரும். ஆகையினால் தான் நீங்கள் பேசக்கூடிய வார்த்தையில் தேவன் ஆசீர் வாதங்களையும் சாபங்களையும் வைத்திருக்கிறார். உங்கள் வார்த்தையில் வாழ்வையும் மரணத்தையும் வைத்திருக்கிறார். எத்தனை பேர் நான் தேவனுக்குத் தான் ஊழியம் புரிகிறேன் என்று முழுமனதுடன் சொல்ல முடியும்?

செக்கரியாவால் வானதூதர் சொன்ன தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவருடைய அறிவுக்கு வானதூதர் சொன்னது எட்டவில்லை. **சில இறைவார்த்தைகள் மனிதனின் அறிவுக்கு எட்டாது.** இயேசுவோடு 72 சீடர்கள் இருந்தார்கள். அவர்களோடு இயேசு ஒரு நாள் திவ்யநற்கருனையைக் குறித்துப் பேசும் போது, என் உடலை உண்டு என் இரத்தத்தைக் குடித்தாலொழிய அவனுக்குள் ஜீவன் இருக்காது என்று சொன்னார். இவ்வுலகம் வாழ்வதற்காக நான் என் உடலையே கையளிக்கிறேன். என் உடல் மெய்யான உணவு. எனது இரத்தம் மெய்யான பானம் என்று சொன்னார். இதைச் சொல்லும் போது இயேசுவுடைய 72 சீடர்களில் 60 பேருக்கு அது விகாரமாகப்பட்டது. இதை எப்படிச் சாப்பிடுவது? இந்தப் பேச்சு மித மிஞ்சிப் போகிறது என்றார்கள். விவிலியத்தில் வாசிக்கிறோம்: அந்த அறுபது பேர் அன்றே ஆண்டவரை விட்டு விலகிப் போனார்கள். அந்த பன்னிரெண்டு பேரைப் பார்த்து இயேசு கேட்டார்: நீங்களும் போய் விட மனதாய் இருக்கிறீர்களா என்று. அதற்குப் பேதுரு ஆண்டவரே யாரிடத்தில் நாங்கள் போவோம். வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் மட்டுமே உள்ளது என்றார். பேதுரு படித்தவர் அல்ல, ஒரு சாதாரண மீனவர். ஆனால் ஒரு காரியத்தை - வாழ்வைக் கொடுக்கக் கூடிய அந்த வார்த்தை இயேசுவிடம் மட்டும் தான் உண்டு என்று- அவர் கண்டு கொண்டார். பேதுரு கண்டுபிடித்தார். இயேசு சொன்னதைப் பல நேரங்களில் பேதுரு புரிந்து கொள்ளவில்லை. ஆனாலும் பேதுருவுக்கு ஒன்று தெரியும். வாழ்வு தரும் வார்த்தைகள் இயேசுவிடம் மட்டும் தான்

உண்டு என்று. ஒருவேளை அதை நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். அறிவுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கலாம். ஆனால் தேவனுடைய வார்த்தைகள், அது ஜீவனைக் கொடுக்கிற வார்த்தைகள். அந்த அறுபது பேருக்கும் அது புரியவில்லை. இயேசு சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. அது வித்தியாசமாகத் தோன்றுகிறது. ஆனால் ஒரு காரியத்தை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. ஜீவனைக் கொடுக்கிற வார்த்தைகள் இயேசுவிடம் மட்டும் தான் உண்டு.

தேவனுடைய வார்த்தைக்கு ஜீவனைக் கொடுக்கக் கூடிய ஆற்றல் உண்டு.அந்த வார்த்தைகளை யாரெல்லாம் பேசுகிறார்களோ, அந்த வார்த்தை அவர்களுக்கும் ஜீவனைக் கொடுக்கிறது. யாரெல்லாம் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையைப் பேசுகிறார்களோ, அவர்களுக்குள் அந்த ஜீவன் வருகிறது. யாரெல்லாம் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை மாற்றிப் பேசுகிறார்களோ அல்லது அதற்கு எதிராகப் பேசுகிறார்களோ, அங்கெல்லாம் ஜீவன் போய் விடுகிறது. தேவன் உங்கள் வீட்டை ஆசீர்வதிக்க விரும்புகிறார். குடும்பங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். எப்படி ஆசீர்வதிக்க விரும்புகிறார். உங்கள் வார்த்தையினால் ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆனால் பலருடைய வார்த்தைகள் தேவன் விரும்புகிற வார்த்தைகளாக இல்லை. அதனால் அந்த ஆசீர்வாதங்கள் வரமுடியாமல் இருக்கிறது. உங்களை நீங்கள் யோசித்துப் பாருங்கள். உங்கள் வார்த்தைகள் எப்படிப் பட்டதாக இருக்கிறது.

அந்தக் காலத்தில் மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் தங்களுடைய வார்த்தையினால் தான் பேச முடியும். பின் கொஞ்சம் நாள் ஆனது. மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்குக் கடிதங்களை பயன்படுத்தினார்கள். அந்தக் கடிதங்களைக் கூட நிறைய பேர் கெட்ட காரியத்திற்கு தான் பயன்படுத்தினார்கள். நேர்மையான காரியத்திற்குக் கொஞ்சம் பேர் தான் பயன்படுத்தினார்கள். இப்போது எல்லாருக்கும் செல்போன் வந்து விட்டது. நேராக பார்க்க வேண்டும் என்று அவசியம் இல்லை. பக்கத்தில இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. போன் செய்து பேசினால் யாராவது கேட்டு விடுவார்கள். அதனால் ஒரே சேட்டிங்(chatting). பிசாசு இவைகளையெல்லாம் பயன்படுத்தும்படி மனிதர்களைப் பயன்படுத்துகிறது. தவறான வழிகளில் பயன்படுத்துகிறது. பிசாசு உங்களை இப்படி பயன்படுத்தும் போது, தேவன் உங்களை எப்படி ஆசீர்வதிக்க முடியும். நிறைய ஆசீர்வாதங்கள் இதனால் தடையாகிறது. யாருமே கவனிக்கவில்லை என்று நீங்கள் நினைக்கலாம். கடவுள் பார்க்கிறார். உங்கள் தூதர்கள் கவனிக்கிறார்கள்.

நீங்கள் பேசியது, அனுப்பியது எல்லாம் பதிவாகிறது. செல்போன் இணைப்பாளர்களிடம், ஏதாவது ஒரு பிரச்சினை, பேசியது, அனுப்பியது வேண்டும் என்றால் போய் பதிவுகளை எடுத்து கொள்ளலாம். உலகத்தில் உள்ள அற்ப மனிதனின் அறிவே பார்க்க முடியும் என்றால், தேவாதி தேவன், இருள் கூட அவருக்கு இருட்டாக இல்லை. தண்ணீருக்கு அடியில் அவன் படுத்துக் கொண்டாலும் அதைத் தேவன் பார்க்கிறார். ஆகாயத்திற்கு ஏறிப் போனாலும் அங்கேயும் அவர் இருக்கிறார். எந்த மூலையில் ஒரு மனிதன் பெருமூச்சு விட்டாலும் கூட அதை கவனிக்கக் கூடிய தெய்வம், நீ பேசுகிற ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டே இருக்கிறார். அதனால் தான் இயேசு சொல்கிறார்: மறைவானதைக் காண்கிற பிதா வெளிப்படையாக உனக்கு பதில் கொடுப்பார். உன் மறைவான வாழ்க்கை தூய்மையாக இருக்கிறதுமானால், வெளிப்படையான வாழ்க்கையில் ஆசீர்வாதங்கள் உண்டாகும். மறைவான வாழ்க்கையில் வேறு ஒன்று இருக்கிறதுமானால், வெளிப்படையான வாழ்க்கை ஆசீர்வதிக்கப் படமுடியாது.

Facebook எல்லாம் பயன்படுத்துவது யார்? நிறைய மனிதருக்குள் Facebook வழியாக பிசாசுகள் வருகிறது. WhatsApp வழியாக பிசாசு வருகிறது. ஞானம் இல்லாவிட்டால் அதைக் கண்டுபிடிக்க முடியாது. பிசாசுக்கு இடம் கொடுக்கிறார்கள். அது அவர்கள் வாழ்க்கையை அழிக்கிறது. உங்கள் நேரத்தை எல்லாம் காலி பண்ணுகிறது. பரிசுத்த ஆவி கிரியை செய்வது வார்த்தையினால் தான்.

பிசாசு கிரியை செய்வதும் வார்த்தையினால் தான். தூய ஆவியானவர் மனிதர் பேசுகிற வார்த்தை மூலமாகவே செயல்படுகிறார். அசுத்த ஆவிகளும் அப்படித்தான் செயல்படுகிறது. பேசுகிற வார்த்தையின் வழியாக செயல்படுகிறது. மூன்று விதங்களில் அது செயல்படுகிறது. முதலாவது நாம் பார்க்கிறதனாலே செயல்படுகிறது. சில காரியங்களை பார்க்கிறதனாலே, இன்டர்நெட்டில் (Internet) இருக்கிற எல்லாவற்றையும் நீங்கள் பார்க்கக் கூடாது. சில காரியங்கள் உங்களை கடவுளிடம் கொண்டு போகும். சில காரியங்கள் பிசாசிடம் கொண்டு போகும். பிசாசுகளே சில காரியங்களை இன்டர்நெட்டில் வைத்திருக்கிறது. ஆண்டவரும் அவருடைய பிள்ளைகளுக்காக சில காரியங்களை வைத்திருக்கிறார். சில காரியங்களைப் பார்க்கிற போது பிசாசு உங்கள் வாழ்க்கையில் செயல்படுகிறது.

சில வருடங்களுக்கு முன் தன்னுடன் படிக்கும் சக மாணவனை, மற்றொரு மாணவன் கொலை செய்து விட்டான். கொலை செய்த மாணவனை போலிஸ் பிடித்து விசாரிக்கும் போது அவன், தான் **ஒரு சினிமா படம் பார்த்த போது, அதில் கொலை செய்வது போல கொலை செய்ய ஆசை வந்தது** என்றான். படத்தைப் பார்க்கும் போது அசுத்த ஆவி இவனுக்குள் வந்து விட்டது. அது கொலை செய்கிற அளவுக்கு அவனைக் கொண்டு போகிறது. அந்தப் பிசாசு அவனுடைய வாழ்க்கையை அழித்தது. அவனை ஜெயிலில் போட்டு விட்டார்கள். இன்னொரு பையன், ஒரு தப்பும் செய்யாத சக மாணவனின் வாழ்க்கையையும் அழித்து விட்டது. அதனால் தான் ஆண்டவர் சொல்கிறார்: பிசாசு கொல்லவும் அழிக்கவும் திருடவும் அன்றி வேறு எதற்காகவும் வரவில்லை.

முதலாவது பார்வை. இயேசுவின் வாழ்க்கை, புனிதர்களின் வாழ்க்கையைப் பார்க்கும் போது, தூய ஆவியானவர் நமக்குள் கிரியை செய்கிறார். எனக்கு கார்மேல் மடத்து சகோதரி ஒருவரைத் தெரியும். அவரிடம் இந்த அடைபட்ட, வெளித் தொடர்பு இல்லாத மடத்தில் சகோதரியாக எப்படி தேர்ந்தெடுத்தீர்கள் என்று கேட்ட போது அவர்கள், Brother, நான் சின்ன பிள்ளையாக இருக்கிறதும் போது எங்க ஊரில் மரிய கொரட்டி நாடகம் போடுவார்கள். அதைப் பார்த்த உடனே நான் அருட்சகோதரியாக போவேன் என்று முடிவு செய்தேன் என்றார்கள். சில காரியங்களை நாம் பார்க்கும் போது தேவனிடத்தில் நாம் இழுக்கப்படுகிறோம். சில காரியங்களை நாம் பார்க்கும் போது அங்கே பிசாசுகள் தேவனிடத்தில் இருந்து நம்மை இழுத்துக் கொள்கிறது.

இரண்டாவது வார்த்தைகள். தூய ஆவியானவர் தேவனுடைய வார்த்தைகளை எடுத்துப் பேசுகிற பொழுது, அதைக் கேட்கிறவர்களின் உள்ளங்களில், தூய ஆவியானவர் அந்த தூண்டுதலைக் கொடுக்கிறார். அவர்களுக்குள் தூய ஆவியானவர் செயல்படுகிறார். அவர்களுக்குள் ஒரு மனமாற்றத்தைக் கொடுக்கிறார். தேவனைக் குறித்து ஒரு தாகத்தைக் கொண்டு வருகிறார். அதைப் போலத் தான் டீவியில் வரும் சிரியல்களில், அருவருப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள். அசுத்த ஆவிகளுக்கு இடம் கொடுத்து, இச்சைகளுக்கு இடம் கொடுத்த ஒரு வாழ்க்கை. அருவருப்பான, கசப்பான வார்த்தைகளைக் கேட்கும் போது அந்த உள்ளத்தில் பிசாசு வரும். அங்கே பழிவாங்கக் கூடிய, கசப்பு நிறைந்த, சூழ்ச்சி மிக்க வார்த்தைகள் - விவிலியத்தில் நாம் பார்க்கிறோம் பிசாசு சூழ்ச்சி மிக்கது என்று. இந்த வார்த்தைகளை நீங்கள் கேட்கக் கேட்க அங்கே பிசாசின் தூண்டுதல் உண்டாகும்.

மூன்றாவது தொடுதல். பரிசுத்த ஆவியானவரை உள்ளே வைத்துக் கொண்டு ஒருவரை நாம் தொடும் போது, அவர்களுக்குள் அந்தத் தூண்டுதல் உண்டாகும். அதனால் தான் சிலரை நாம் தொடும் போது அவர்களுக்கு சுகம் உண்டாகும். எலிசா என்ற ஒரு இறைவாக்கினரை நாம் விவிலியத்தில் வாசிக்கிறோம். எலிசா மரித்துப் போனார். அவர் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தார். அவர் இறந்த பிறகு அவரை அடக்கம் செய்து விட்டார்கள். இந்த இஸ்ரயேல் ஜனங்களில் ஒரு வாலிபன் இறந்து விட்டான் என்று சொல்லி அந்தப் பிணத்தைத் தூக்கிக் கொண்டு போவார்கள். அப்படிப் போகும் போது எதிரிகள் படையெடுத்து அங்கிருந்து வருவார்கள். உடனே அந்த வாலிபன் பிணத்தை அப்படியே போட்டு விட்டு ஓடி விடுவார்கள். அந்த வாலிபன் பிணம் கீழே விழும் போது, எலிசாவின் எலும்புகள் மீது விழுந்து விடும். அப்படி எலிசாவின் எலும்பு மீது பட்ட உடன், இறந்து போன வாலிபனுக்கு உயிர் வந்து விடும். எலிசா இறந்த பிறகும் கூட அந்த அபிஷேகம் அவரின் எலும்புகளில் இருந்தது. இதைத் தான் பவுலுடைய வாழ்க்கையில் வாசிக்கிறோம். பவுல் உபயோகித்த அந்தக் கச்சை அல்லது கைக்குட்டை, இதைக் கொண்டு போய் ஒரு நோயாளி மீது போட்டால், உடனே நோய் சுகமாகி விடும். பேய் பிடித்தவர்களிடமிருந்து பேய் ஓடி விடும். அவர்கள் தொடக்கூடிய பொருட்களில் கூட அபிஷேகம் ஒட்டிக் கொண்டு இருக்கிறது. அதைப் போலத் தான் அசுத்த ஆவிகளுக்கு இடம் கொடுத்து வாழக்கூடியவர் பயன்படுத்திய உடைகளில் கூட அந்த அருவருப்புகள் ஒட்டிக் கொண்டிருக்கும். அதனால் தான் அசுத்த ஆவி இருப்பவர்கள் மற்றவர்களை கட்டிப் பிடிக்கின்றார்கள். ஏன்? இங்குள்ளது அங்கே போய் விடும். இதனைத் தெரியாமல் நிறைய பேர் இருக்கிறார்கள்.

மிக மிக முக்கியமானது நாம் பேசுகிற வார்த்தை. இந்த வார்த்தைகளைக் கொண்டு தான், தேவன் உங்களை ஆசீர்வதிக்க முடியும். ஆனால் இன்று நிறைய பேர் வார்த்தைகள் சரியாக இல்லை. அதனால் ஆசீர்வதிக்கப் படமுடியாத ஒரு நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையோடு இணைத்துப் பேசுங்கள். உங்களுடைய பேச்சுகளில் தேவனுடைய வார்த்தைகளை மையமாக வையுங்கள். அதை மாற்றிப் பேசும் அளவுக்கு போய் விடாதீர்கள். அப்படிப் போகும் போது ஆசீர்வாதங்கள் தடைபடுகிறது. இன்றைக்கு யோசித்துப் பாருங்கள். நாம் பேசக்கூடிய எல்லா வார்த்தைகளும் தேவனுடைய வார்த்தைக்கு ஒத்துப்போகிறதா? அல்லது அந்த வார்த்தைக்கு மாறானதாக அல்லது எதிராக இருக்கிறதா? நூறு வார்த்தைகள் பேசினால் ஒரு ஐம்பது வார்த்தையாவது ஒத்துப் போகிறதா, இல்லை. இவ்வாறு, நாம் நிறைய வார்த்தைகளை பேசிவிட்டு

ஆண்டவரிடம் ஜெபிக்கும் போது, தேவன் நம்முடைய வார்த்தைகளைக் கவனிக்கிறார்.

இஸ்ரயேல் ஜனங்களை ஆண்டவர் எகிப்திலிருந்து விடுதலையாக்கி, கானான் தேசத்திற்கு நேராக அழைத்துக் கொண்டு வருகிறார். அப்படி கடவுள் அழைத்துக் கொண்டு வரும் போது அந்த கானான் தேசத்திற்கு, ஒரு பாலைவனத்தின் வழியாக கொண்டு வருகிறார். இந்தப் பாலைவனத்தை கடப்பதற்கு இரண்டு மாதங்களில் சென்று விடலாம். ஆனால் நாற்பது வருடமாக கடந்தார்கள். கானானுக்குள் போவதற்கு இரண்டு மாதம் தான் ஆகும். இஸ்ரயேல் ஜனங்கள் சீனாய் மலை அருகே வந்து விடுகிறார்கள். பொழுது விடிந்தால் கானானுக்குள் செல்ல வேண்டும். நடுவில் யோர்தான் என்ற ஒரு நதி ஓடிக் கொண்டிருந்தது. மோசே இஸ்ரயேல் ஜனங்களின் முக்கியமான பன்னிரெண்டு தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, ஒற்றர்களாக கானான் தேசத்திற்குள் அனுப்புகிறார். அந்தப் பன்னிரெண்டு பேரும் நாற்பது நாட்கள் அந்த தேசத்தைச் சுற்றிப் பார்த்து, அங்கே இருக்கக் கூடிய விலையுயர்ந்த பழங்களை எடுத்துக் கொண்டு திரும்பவும் மக்களிடத்திலே வருகிறார்கள். அது ஒரு மாலை நேரம். ஆறு லட்சம் இஸ்ரயேல் ஜனங்களும் அங்கே கூடியிருக்கிறார்கள். மோசேயும் யோசுவாவும் அங்கிருக்கிறார்கள். பன்னிரெண்டு ஒற்றர்களில் யோசுவாவும் காலேபும் உண்டு. அந்தப் பன்னிரெண்டு ஒற்றர்களும், தாங்கள் எடுத்து வந்த பழங்களை இஸ்ரயேல் ஜனங்களிடம் காண்பிக்கிறார்கள். ஆண்டவர் நமக்குக் கொடுப்பேன் என்று கூறிய பாலும் தேனும் பொழியக் கூடிய கானான் தேசத்தில் உள்ள கனிகள் என்றார்கள். கானான் தேசத்தில் எல்லாம் செழிப்பாக இருக்கிறது. இதைப் பார்த்த உடன் ஜனங்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். அந்தப் பன்னிரெண்டு பேரில் பத்துப் பேர், எல்லாம் நன்றாக இருக்கிறது. ஆனால் அங்கே இருக்கிறதும் ஆட்கள் அரக்கர்கள் போல உள்ளனர். அவர்கள் கூட நாம் சண்டை போடவே முடியாது. அவர்கள் முன் நாம் சிறு வெட்டுக்கிளி போல இருக்கிறோம். அவர்கள் கூட நாம் சண்டை போட முடியாது என்று சொல்லி விட்டார்கள். ஆனால் யோசுவாவும் காலேபும் தங்கள் உடைகளை கிழித்துக் கொண்டு, அய்யோ அப்படி இல்லை. ஆண்டவர் நம்மோடு இருப்பதால் அந்த தேசத்தை எளிதில் பிடித்து விடலாம் என்றார்கள்.

கிறிஸ்தவர்களுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, இயேசு உங்கள் கூட இருக்கிறதனாலே, எளிதாக உங்கள் பாவத்தில் இருந்து நீங்கள் விடுதலை பெற முடியும். எளிதாக உங்கள் வார்த்தைகளைச் சுத்திகரிக்க முடியும். தேவன் உன் வாழ்வை மாற்ற வல்லவர். இந்தப் பத்து பேர் இப்படிச் சொன்ன உடனே, இஸ்ரயேல்

ஜனங்கள் பத்து பேர் சொன்னதை நம்புகிறார்கள். பத்துப் பேர் உங்களைப் பார்த்து சினிமா பார்ப்பது தப்பு இல்லை என்று சொல்வார்கள். நீங்கள் தாராளமாக பாருங்கள். ஆனால் பிசாசு உங்கள் வாழ்வில் வந்து விடுவான். இந்த ஜனங்கள் அந்தப் பத்து பேர் சொன்னதை நம்பிக் கூச்சல் போட்டு அழுகிறார்கள். என்ன சொல்லி அழுகிறார்கள்?

உடனே மக்கள் கூட்டமைப்பு முழுதும் உரத்த குரலில் புலம்பிற்று; மக்கள் அன்றிரவு அழுது கொண்டே இருந்தனர் (எண். 14:1).

கானான் தேசத்திற்குள் சந்தோஷமாக நன்றி சொல்லி உள்ளே போக வேண்டியவர்கள், அழுது கொண்டிருக்கிறார்கள். அழுதது யார்? தேவனுடைய பிள்ளைகள். எந்த ஜனங்களுக்கு முன்பாக தேவன் பெரிய பெரிய அற்புதங்களைச் செய்து எகிப்திலிருந்து கொண்டு வந்தாரோ, அந்த ஜனங்கள் தேவனை நம்பாமல் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரயேல் மக்கள் அனைவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தனர்; மக்கள் கூட்டமைப்பிலுள்ள அனைவரும் அவர்களிடம், "எகிப்து நாட்டில் நாங்கள் இறந்திருந்தால் எவ்வளவோ நலம்! இந்தப் பாலைநிலத்தில் மடிந்தால் அதுவும் நலமே! வாளுக்கு இரையாகும்படியா ஆண்டவர் எங்களை இந்த நாட்டுக்கு அழைத்து வந்திருக்கிறார்? (எண். 14:2, 3)

சில பேர் நன்றாய்த் தான் ஜெபம் செய்து கொண்டிருப்பார்கள். யாராவது எதையாவது சொல்லி விட்டால், உடனே ஆண்டவர் எனக்கு எதற்கு தான் இப்படிச் செய்தாரோ, ஏன் இப்படிச் செய்தார் என்று சொல்வார்கள். அந்த இஸ்ரயேல் ஜனங்களுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? எவ்வளவோ அற்புதங்களைக் கண்ணால் பார்த்த அந்த இஸ்ரயேல் ஜனங்கள், வாளால் சாவதற்கா ஆண்டவர் எங்களை அழைத்து வந்தார். பாலை நிலத்தில் செத்தால் அதுவும் நல்லது என்றனர். இப்போது தான் ஆண்டவருக்கு கோபம் வருகிறது.

இவர்களில் ஒருவன் கூட இவர்கள் மூதாதையருக்குத் தருவதாக நான் வாக்களித்திருந்த நாட்டினைக் காணமாட்டான்; இப்பொல்லாத மக்கள் கூட்டமைப்பினர் எதுவரை எனக்கெதிராக முறுமுறுப்பர்? எனக்கெதிராக முறுமுறுக்கும் இஸ்ரயேல் மக்களின் முறுமுறுப்புகளை நான்

கேட்டேன். நீங்கள் அவர்களிடம் சொல்லவேண்டியது, "ஆண்டவர் கூறுவதாவது: என் உயிர் மேல் ஆணை! என் செவிகளில் படுமாறு நீங்கள் சொன்னதையே நான் உங்களுக்குச் செய்வேன்; (எண். 14:23, 27-28)

நீங்கள் பேசியதை எல்லாம் ஆண்டவர் கேட்கிறார். உங்கள் முறுமுறுப்புகளை எல்லாம் ஆண்டவர் கேட்கிறார். உங்களுக்கு ஏன் பிரச்சினை? நீங்கள் முறுமுறுத்ததை எல்லாம் ஆண்டவர் கேட்கிறார். ஆண்டவர் சொல்கிறார்: இவர்கள் பேசிய வார்த்தைகளையெல்லாம் நான் கேட்டேன். அதனால் இவர்கள் சொல்லியதையே இவர்களுக்குச் செய்யப் போகிறேன். யார் யாரெல்லாம் முறுமுறுத்தார்களோ அவர்களில் கடைசி ஆள் பிணமாக விழும் வரைக்கும், நாற்பது வருடம் பாலைநிலத்தை தான் சுற்றுவார்கள்.

.

அருமையான கிறிஸ்தவர்களே, நீங்கள் இருக்க வேண்டிய இடம் பாலைவனம் அல்ல. நீங்கள் போக வேண்டிய இடம் கானான். அது ஆசீர்வதிக்கப்பட்ட தேசம். ஆனால் நிறையக் கிறிஸ்தவர்கள் சாகும் வரைக்கும் பாலைநிலத்திலிருந்து செத்துப் போய் விடுகிறார்கள். இந்த ஜனங்கள் கானான் தேசத்திற்குள் போகவில்லை. பாலைவனத்தில் தான் சாகிறார்கள். ஆண்டவர் உன்னை பாலைநிலத்தில் இருப்பதற்காக அழைக்கவில்லை. ஆசீர்வதிக்கப்பட்ட தேசத்திற்குள் கொண்டு போகத் தான் உன்னை அழைத்தார். இஸ்ரயேல் ஜனங்கள் ஏன் உள்ளே போகவில்லை? அவர்களின் பொல்லாத வாய். ஆண்டவர், அவர்கள் பேசியதையே செய்வேன். சொன்னதையே செய்வேன் என்கிறார். இஸ்ரயேல் ஜனங்கள் ஏன் கானானுக்குள் போகவில்லை? எகிப்தில் இவ்வளவு அற்புதம் செய்த தெய்வம், கானானுக்குள் போகும் போதும் அற்புதம் செய்வார் என்று அவர்கள் நம்பவில்லை. ஆண்டவருக்கு எதிராகப் பேசி முறுமுறுத்தார்கள். அதனால் நாற்பது ஆண்டுகள் பாலைநிலத்திலேயே அவர்கள் நொந்து போனார்கள். அந்தப் பாலைநிலத்திலே கொள்ளிவாய்ப் பாம்புகள் இருந்தது. அந்தப் பாலைநிலத்திலே அவர்கள் கஷ்டப்பட்டார்கள்.

உன் வாழ்நாள் முழுவதும் நீ இப்படிக் கஷ்டப்பட வேண்டும் என்று தேவன் உன்னை உண்டாக்கவில்லை. இன்றைக்கு உன்னுடைய நாவைப் பார். நீ பேசக்கூடிய வார்த்தைகளைப் பார். அது உனக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறதா? வாழ்வைக் கொண்டு வருகிறதா? அல்லது வேதனையைக் கொண்டு வருகிறதா? என்று பார். உன் வார்த்தைகள் தான் உன் வாழ்க்கையில்

ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது. தேவசமுகத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் பேசிய வார்த்தைகளால் தான், கானான் தேசத்திற்குள் போக முடியாமல் பாலைநிலத்திலேயே மடிந்தார்கள். அடுத்த சந்ததி தான் கானானுக்குள் போக முடிந்தது. இப்போது உங்கள் நாவை ஒப்புக் கொடுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிக்கத் தான் விரும்புகிறார். ஆனால் நிறைய பேர் உங்கள் நாவினால் ஆசீர்வாதங்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் குடும்பங்களில் இதனால் ஆசீர்வாதங்கள் வர முடியாமல் தடையாக இருக்கிறது. இப்போது உங்கள் நாவை ஒப்புக் கொடுங்கள்.

வெற்றி பெற அறிக்கையிடுங்கள்

ஆனால் நம்பிக்கை வழியாய் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆதல் பற்றி சொல்லி இருப்பது இதுவே வார்த்தை உனக்கு மிக அருகில் இருக்கிறது உன் வாயில் உன் இதயத்தில் உள்ளது. இதுவே நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என நாங்கள் பறைசாற்றும் நற்செய்தி ஆகும். ஏனெனில், ' இயேசு ஆண்டவர் 'என வாயால் அறிக்கையிட்டு இறந்த அவரை கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்பு பெறுவீர்கள். இவ்வாறு உள்ளுற நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர். வாயார அறிக்கையிடுவோர் மீட்பு பெறுவர் உரோமையர் 10:6-7 ஆறாவது வசனம் சொல்லுகிறது. இங்கு மீட்பு என்கிற வார்த்தைக்கு கிரேக்க மொழியிலே சோட் சோ என்று பொருள். இந்த ஷோட் சோ என்ற வார்த்தைக்கு இரண்டு பொருள் ஒன்று மீட்பு, மற்றொன்று சுகமாதல். இங்கே நம்பிக்கை வழியாக எவ்வாறு நாம் கடவுளுக்கு ஏற்புடையவராக மாற முடியும்என்பதை குறித்து விவிலியம் நமக்கு சொல்லி இருப்பது, வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது. அந்த வார்த்தை உனக்கு மிக அருகில் இருக்கிறது. உன் வாயில் இருக்கிறது, உன் இதயத்தில் இருக்கிறது.இதுவே நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என நாங்கள் பறைசாற்றும் செய்தியாகும். இயேசு ஆண்டவர் என வாயாற அறிக்கையிட்டு இறந்த அவரை கடவுள் உயிர்த்தெழ செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்பு பெறுவீர்கள். உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆகிறார்கள். அறிக்கையிடுகிறவர்கள் மீட்பு பெறுகிறார்கள். இங்கு இரண்டு காரியங்கள் நாம் செய்ய வேண்டியதாக இந்த வேத வசனத்தில் பார்க்கிறோம். ஒன்று கடவுளுக்கு உகந்த விதமாய் மாறுவது. மற்றொன்று, தேவனிடமிருந்து விடுதலையை பெறுவது. ஒரு சுகத்தையோ, ஒரு அற்புதத்தையோ, ஒரு நன்மையையோ, ஒரு ஆசீர்வாதத்தையோ பெற்றுக் கொள்வது. இந்த இரண்டு காரியங்களையும் பெற்றுக் கொள்வதற்கு மேலும் இரண்டு காரியங்கள் விவிலியத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முதலாவது உள்ளூர விசுவாசிப்பது அதாவது இருதயத்திலே விசுவாசிப்பது. இரண்டாவது அறிக்கையிடுவது. விவிலியம் என்ன சொல்கிறதென்றால் வாயாற அறிக்கை செய்வது என்பது நன்றாக அறிக்கையை செய்வது என்றும் பொருள். திரும்பத் திரும்ப சொல்லுவது என்றும் பொருள். இந்த இரண்டு காரியங்களை நாம் செய்யும் பொழுது நாம் கடவுளுக்கு உகந்தவர்களாக மாறுகிறோம். அதே சமயத்தில் மீட்பு, விடுதலை, சுகத்தை பெற்றுக் கொள்கிறோம். ஆமென், அல்லேலூயா. இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கை செய்ய வேண்டும் என சொல்லப்பட்டிருக்கிறது. என்ன அறிக்கை செய்ய வேண்டுமென்றால், இயேசு தான் ஆண்டவர். இன்னொன்று அவர் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் இதை உள்ளத்திலே நாம் விசுவாசிக்க வேண்டும். இயேசு உயிர்த்தெழுந்தார் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். நமக்காக அவர் மரித்தார். நமக்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார். நமக்காக இந்த பூமிக்கு வந்தார். அவர் செய்த காரியங்கள் அனைத்தும் நமக்காக குறிப்பாக எனக்காக என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டும். எனக்காக அவர் உலகத்திற்கு வந்தார் எனக்காக அவர் பாடுபட்டார். எனக்காக அவர் சிலுவையிலே மரித்தார். எனக்காக அவர் உயிர்த்தெழுந்தார் இதை நாம் உள்ளத்திலே விசுவாசிக்க வேண்டும். இயேசுவே ஆண்டவர் என்று வாயார அறிக்கை செய்ய வேண்டும். திரும்பத் திரும்ப அறிக்கை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். இயேசுவே ஆண்டவர் என்றால் அர்த்தம் என்ன? எந்த ஒரு கடினமான சூழ்நிலையிலும், அல்லது நெருக்கடியான சூழ்நிலையிலும் 'இயேசுவே ஆண்டவர்' என அறிக்கையிடும்போது அவர்தான் முழு அதிகாரத்தையும் கையில் கொண்டிருக்கிறார், அவரால் எல்லாம் முடியும். அவரால் அந்த சூழ்நிலையை மாற்ற முடியும் என்பது பொருள். இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிடுவது என்பது என் பிரச்சனைகளை மாற்ற இயேசு வல்லவர். எனக்கு ஒரு விடுதலை கொடுக்க ஆண்டவர் இயேசு வல்லவர். என்னை சுகமாக்க இயேசு வல்லவர் என்று பொருளாகும். இப்படி திரும்பத் திரும்ப வாயார மறுபடியும் மறுபடியும் சொல்லும் போது நீங்கள் விடுதலை பெறுவீர்கள். இதற்காகத்தான் ஆண்டவர் கூறுகிறார் உன் அருகில் வார்த்தை இருக்கிறது. உன் கையில் உள்ள விவிலியத்தில் இருக்கிறது. உன் அருகில் கையில் இருக்கும் இந்த வார்த்தையை உன் வாயில் இருக்க வேண்டும். அதாவது, உன் வாயினால் அறிக்கை செய்ய வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "நான் உங்களுடனே இருக்கிறேன். உலகம் முடியும் வரை நான் உங்களுடனே இருக்கிறேன்" என்று கூறுகிறார்.இவ்வாறு நாம் திரும்பத் திரும்ப ஆண்டவரே நீர் என்னுடனே இருக்கிறீர் என்று அறிக்கையிடும் போது இந்த வார்த்தை வாயிலிருந்து உங்கள் உள்ளத்திற்குள்ளே அதாவது இருதயத்திற்கு உள்ளே செல்கிறது. நீங்கள் மறுபடியும் மறுபடியும் சொல்ல சொல்ல வாயில் இருக்கும் இந்த வார்த்தை உங்கள்

இதயத்திற்கு உள்ளே செல்கிறது. இதுதான் நாம் மீட்படைவதற்கு வழி. இப்படி, வாயார அறிக்கை செய்ய செய்ய ஒரு விடுதலையை நீங்கள் உணர்வீர்கள், உங்கள் சூழ்நிலைகள் மாறுவதை நீங்கள் கண்டு கொள்வீர்கள், மனதிலே விசுவாசம் இருக்கிறவர்கள் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆகிறார்கள், நீதிமான்கள் ஆக்கப்படுகிறார்கள், தூய்மை அடைகிறார்கள், சுத்திகரிக்கப்படுகிறார்கள். ஆனால், அது மட்டும் அவர்கள் விடுதலை பெறுவதற்கு போதாது அநேக மனிதர்கள் மௌனமாகவே இருப்பார்கள். அவர்கள் வாயிலிருந்து வார்த்தை வராது அதாவது." இயேசுவுக்கு நன்றி" என்று சொல்ல சொன்னால் கூட முனங்குவார்கள். வாயைத் திறந்து சத்தமாக அவர்கள் சொல்ல மாட்டார்கள். வாயைத் திறந்து நீங்கள் அறிக்கை செய்ய செய்ய விடுதலை பெற முடியும். மீட்பை பெற முடியும். பிரச்சனைகளில் இருந்து வெளியே வர முடியும். ஆமென், அல்லேலூயா. அப்படியானால், திரும்பத் திரும்ப இந்த வார்த்தைகளை நாம் சொல்ல வேண்டும். அநேக மனிதர்கள் வாயைத் திறந்து இந்த வார்த்தைகளை சொல்வதில்லை. ஆண்டவர் கூட இருக்கிறாரென்றால் கூட அதை நாம் வாயார அறிக்கையிட வேண்டும். ஆண்டவர் என்னுடன் இருக்கிறார் என்று விசுவாசத்துடன் சொல்ல வேண்டும், அவர் என்னை கைவிட மாட்டார் என்று சொல்ல வேண்டும். அவர் என்னை விட்டு விலக மாட்டார் என்று சொல்ல வேண்டும். நீங்கள் சொல்ல சொல்ல தான் இந்த வார்த்தைகள் உங்களுக்குள்ளே கிரியை செய்ய ஆரம்பிக்கும். தேவன் அந்த வார்த்தைகளை கவனிப்பார். நாம் பேசுகிற அந்த விசுவாச வார்த்தையின் பொருட்டு அவர் நம்முடைய வாழ்க்கையிலே அற்புதங்களை செய்வார். ஆமென், அல்லேலூயா. வாயிலே அறிக்கையிடாமல் நாம் அமைதியாக இருப்போமேயானால் இந்த விடுதலையை நாம் பெறுவதற்கு தாமதமாகும். அல்லது பெற முடியாமல் கூட போய்விடும். ஆனால், நீங்கள் வாயினாலே திரும்பத் திரும்ப அறிக்கை செய்யும்போது விடுதலை மிக சமீபமாக இருக்கும். 1 திமோத்தேயு 1ம் அதிகாரத்தில் 18,19 ஆகிய இரண்டு வசனங்களை நாம் வாசிக்கும் பொழுது (என் பிள்ளையாகிய திமோத்தேயூ உன்னைப் பற்றி முன்னர் சொல்லப்பட்ட இறைவாக்குகளுக்கு ஏற்ப நான் உனக்கு இடும் கட்டளை இதுவே, இந்த இறைவாக்குகளை துணையாக கொண்டு நம்பிக்கையோடும், நல்மனச்சான்றோடும் நன்கு போரிடு. சிலர் இம்மனசான்றை உதறித் தள்ளி விட்டதால் விசுவாசம் என்னும் கப்பல் உடைந்து போக செய்தார்கள்.) இந்த இறை வார்த்தையை கொண்டு நன்கு போரிடு என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில சூழ்நிலைகள் நமக்கு எதிராக வருகிறதென்றால் இந்த இறை வார்த்தைகளைக் கொண்டு நாம் போரிட வேண்டும். நாம் தோல்வி அடையக்கூடிய சூழ்நிலைகள் நம் வாழ்க்கையில் இருக்கலாம். ஆனாலும், உங்களுடைய விசுவாசத்தை நீங்கள் அறிக்கை செய்ய வேண்டும். தாவீதை பாருங்கள் யுத்தத்திற்கு போவதற்கு முன்பாக தன்னுடைய சகோதரர்களை

பார்ப்பதற்காகத்தான் அவர் யுத்த களத்திற்கு சென்றார். ஆனால், அங்கே அவர் கண்ட காட்சி என்ன? பெலிஸ்தியனான கோலியாத் மிக உயரமான பலசாலியாக இருந்தான். அவனுடைய கர்ச்சிக்கிற வார்த்தைகளை கேட்ட உடனே இஸ்ரவேல் போர் வீரர்கள் எல்லாம் பயந்து நடுங்கி ஓடி ஒலிவதை கண்டான். ஆனால், தாவீதிற்கு தெரியும் கோலியாத் மிக உயரமானவன், அவன் பலசாலி, அவனோடு ஈட்டியை கொண்டோ அல்லது வாலை கொண்டோ சண்டையிட முடியாது என்று தாவீதுக்கு நன்றாக தெரியும்.இந்த சூழ்நிலையிலே தாவீது அறிக்கை செய்கிறான். நான் அந்த பெலிஸ்டியனோடு யுத்தம் செய்து வெற்றி கொள்வேன். ஏனெனில், "அவன் ஈட்டியோடும் வாளோடும் என்னிடம் வருகிறான். நானோ சேனைகளின் ஆண்டவரின் பெயரால் போகிறேன்" என்று சொன்னான். ஆமென், அல்லேலுயா. இந்த விசுவாசத்தை நாம் அறிக்கை செய்ய வேண்டும். சவுல் தாவீதை பார்த்து நீ சிறு பையனாக இருக்கிறாய் உன்னால் வெற்றி பெற முடியுமா? என்று கேட்கிறார். அப்போது தாவீது கூறுகிறார் ஒரு சிங்கமோ கரடியோ என்னுடைய ஆட்டை கவ்விக் கொண்டு போகும்பொழுது நான் அந்த சிங்கத்தையும் கரடியையும் கொன்று அந்த ஆடுகளை விடுவித்திருக்கிறேன். அப்படி ஒரு கரடியை போல, ஒரு சிங்கத்தைப் போல இந்த கோலியாத்தை நான் மேற்கொள்வேன் என்று சொன்னார். ஆமென், அல்லேலூயா. தாவீது மனதிலே சோர்ந்து போகவில்லை.விசுவாசமான வார்த்தைகளை அவர் பேச ஆரம்பித்தார். கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே நீங்கள் பேசக்கூடிய வார்த்தைகளை எல்லாம் கவனித்து பாருங்கள். எத்தனை வார்த்தைகளை விசுவாசத்தோடு பேசுகிறோம், இன்று அனேகர் என்ன செய்வதென்றே தெரியவில்லை, என்ன ஆகும் என்றே தெரியவில்லை, இப்படிப்பட்ட எதிர்மறையான வார்த்தைகளை, அவிசுவாசமான வார்த்தைகளையே பேசி விடுகிறார்கள். உங்களுடைய குடும்பங்களிலேயே உங்கள் கணவரோ உங்கள் பிள்ளைகளோ அல்லது உங்கள் மனைவியோ மனம் திரும்ப வேண்டுமென்று நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கலாம்.ஆனால், நீங்கள் பார்க்கின்ற காரியங்கள் அதற்கு எதிர் மாறாக இருக்கலாம்,அவர்கள் மாறவே முடியாத அளவிற்கு கடின இதயம் உள்ளவர்கள் போல உங்களுக்கு காணப்படலாம் ஆனாலும், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை சில மனிதர்கள் நன்றாக ஜெபிக்கிறார்கள் ஜெபித்து விட்டு அவர்களுடைய கடினமான இருதயத்தை பார்க்கிறார்கள் பின் ஆண்டவரே வந்தாலும் கூட உன்னை மாற்ற முடியாது என்று அவிசுவாசமான வார்த்தைகளை பேசுகிறார்கள். எவ்வளவு ஜெபம்செய்தாலும் இவன் மாறவே மாட்டான் என்று எதிர்மறையான வார்த்தைகளை, விசுவாசத்திற்கு எதிரான வார்த்தைகளை பேசி விடுகிறார்கள். பிரியமானவர்களே விசுவாசமுள்ள வார்த்தைகளை நீங்கள் பேசும் பொழுது தான் உங்களுக்கு விடுதலை கிடைக்கும். ஆகவே தான் ஆண்டவர் சொல்லுகிறார்

இயேசுவே ஆண்டவர் என்று உன் வாயார அறிக்கை செய்தால் மீட்படைவாய். நாம் வாயார அறிக்கை செய்யும் பொழுது எவரையும் மாற மாட்டார்கள் என்று நாம் சொல்ல மாட்டோம். யாராலும் மாற்ற முடியாது என்று சொல்ல மாட்டோம் ஏனென்றால் இயேசு ஆண்டவர் என்று நீங்கள் அறிக்கை செய்வீர்களென்றால் இயேசு தான் அவரை மாற்ற முடியும் என்று அர்த்தம். ஆமென், அல்லேலூயா.இன்றைக்கு நிறைய பேர் ஜெபிக்கிறார்கள், பக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள்,ஆண்டவரே நம்புகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் பேசும் பொழுது அவிசுவாசமான வார்த்தைகளை பேசி விசுவாசத்திற்கு எதிராக பேசி விடுகிறார்கள். இதுதான் உங்களுடைய வாழ்க்கையிலே நிறைய அற்புதங்களை பெற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு தடையாக இருக்கிறது. ஆகையினாலே இயேசுவே ஆண்டவர் என்று உன் வாயினாலே அறிக்கை செய்ய வேண்டும். இந்த அறிக்கை மிக முக்கியம் வாயாற அறிக்கை செய்வதென்பது திரும்பத் திரும்ப அதை சொல்ல வேண்டும். சூழ்நிலைகள் எதிராக இருந்தாலும் கூட விசுவாசமான வார்த்தைகளை நாம் பேச அறிந்திருக்க வேண்டும். அதுதான் போரிடுவது பவுல் அப்படித்தான் கூறுகிறார் ஒரு கட்டளையாக கொடுக்கிறார். ஆலோசனையாக அல்ல ஒரு கட்டளையாகவே கொடுக்கிறார். கட்டளை என்றால் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்ன செய்ய வேண்டும்?.அந்த இறைவாக்குகளை துணையாக கொண்டு நல்ல மனதோடும் விசுவாசத்தோடும் போரிடு என்கிறார். அந்த வார்த்தைகளைக் கொண்டு எப்படி போரிடுவது திரும்பத் திரும்ப அந்த விசுவாசமான வார்த்தைகளை பேச கற்றுக் கொள்ளுங்கள். சில சூழ்நிலைகள் நீங்கள் பார்ப்பதற்கு நம்பிக்கைக்கு இடமே இல்லாமல் இருப்பதுபோல் நீங்கள் பார்க்கலாம்.அல்லது, கேள்விப்படலாம். ஆனால் உங்களுடைய விசுவாசமான வார்த்தைகளை நீங்கள் பேச ஆரம்பிக்கும் பொழுது அங்கே மாற்றங்கள் நடப்பதை நீங்கள் காண்பீர்கள். எப்படி பேச வேண்டும் என்றால் வாயால் அறிக்கை செய்து திரும்பத் திரும்ப அந்த வார்த்தைகளை, விசுவாச வார்த்தைகளை அறிக்கை செய்தாகும். ஒருவேளை நீங்கள் சில பாவங்களிலேயே விழுந்து கிடக்கிறீர்கள், இந்த பாவங்களில் இருந்து உங்களால் வெளியே வர முடியவில்லையென்றால் அதற்குரிய வசனங்கள் இருக்கிறது. கலாத்தியர் 5ம் அதிகாரம் 24 ஆம் வசனம் (கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள்) என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த வார்த்தைகளை திரும்பத் திரும்ப அறிக்கை செய்ய வேண்டும் என் இச்சைகள், என் இழிவுணர்ச்சிகள் எல்லாம் சிலுவையிலே அறையப்பட்டிருக்கிறது. ஆகையினாலே, பாவம் என்னை மேற்கொள்ள முடியாது என்று சொல்ல வேண்டும். திரும்ப திரும்ப இவ்வாறு சொல்ல வேண்டும் நீங்கள் சொல்ல சொல்ல உங்கள் வாயாற அறிக்கையிடும் போது விடுதலை பெறுவீர்கள் என்று விவிலியம் கூறுகிறது.

ஆமென், அல்லேலூயா. இயேசு என் பாவங்களை சுமந்து கொண்டார், என்னை விடுதலையாக்குவதற்கு தன் சொந்த இரத்தத்தையே கொடுத்திருக்கிறார். **உங்கள் மூதாதையர் இடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தை நின்று உங்களை விடுவிக்க கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்கு தெரியும்.அது பொன்னும் வெள்ளியும் போன்று அழிவுக்குட்பட்டது அல்ல மாறாக மாசு மருவற்ற ஆட்டுக்குட்டியை போன்ற கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள இரத்தமாகும் 1 பேதுரு 1:18 .** நீங்கள் வாயால் அறிக்கை செய்யுங்கள். அதற்கு பதிலாக நான் பெலவீனன் என்று அறிக்கை செய்தீர்களென்றால் பாவம் உங்கள் வாழ்க்கையில் இருந்து போகாது. உங்களுடைய அறிக்கை தான் உங்களை விடுதலையாக்க கூடியது.அதுவும் எப்படி அறிக்கை செய்ய வேண்டுமென்றால் வாயாற திரும்பத் திரும்ப அறிக்கை செய்ய வேண்டும். சில மனிதர்கள் என்னால் கோபப்படாமல் இருக்க முடியாது என்று கூறுகிறார்கள். இவ்வாறு நீங்கள் கூறுவீர்கள் என்றால் உங்கள் கோபத்திலிருந்து நீங்கள் விடுதலை பெற முடியாது. இயேசு என் பாவங்களை சுமந்து கொண்டார் என்று சொல்லுங்கள். அவர் என்னை விடுதலை ஆக்கியிருக்கிறார், எனக்காக ஒரு விடுதலையை கொடுத்திருக்கிறார், அவருடைய இரத்தம் விலையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையாலே, கோபம் என்னை மேற்கொள்ளாது என்று சொல்ல வேண்டும். திரும்பத் திரும்ப நீங்கள் அதை சொல்லுங்கள் இவ்வாறு நீங்கள் சொல்லும் போது உங்களுடைய கோபம் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். நீங்கள் கோபத்தை மேற்கொள்ள ஆரம்பித்துவிடுவீர்கள். ஆமென், அல்லேலூயா. எந்த பாவத்திலிருந்தும் உங்களை விடுவிக்க முடியாத அளவுக்கு ஆண்டவர் பலவீனமானவரல்ல, அவர் நம்மை விடுதலையாக்க வல்லவராகவே இருக்கிறார். நாளைக்கு அல்ல, இன்றைக்கே விடுதலையாக்க வல்லவராய் இருக்கிறார். ஆனால்,விடுதலை பெறுவதற்கும் மீட்பு பெறுவதற்கும் நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன?. அந்த இறை வார்த்தையை திரும்பத் திரும்ப அறிக்கை செய்ய வேண்டும். இங்கு நமக்கு தேவன் கொடுத்திருக்கிற அந்த வார்த்தைகளை கொண்டு போரிடு என்று கூறுகிறார். போர் என்றால் என்ன? போராட்டம், இன்னொருவரோடு நாம் போராடக் கூடியது. அதேபோல நாம் நமக்கு எதிரான அந்த சூழ்நிலைகளோடும், காரியங்களோடும் போராட வேண்டும். இறை வார்த்தைகளை கொண்டு போராட வேண்டும். அப்படி போராடி அதிலே வெற்றி பெற வேண்டும். இறைவார்த்தை தான் வெற்றிக் கொள்ளும். “விண்ணும் மண்ணும் ஒளிந்து போகும் ஆனால் ஆண்டவரின் வார்த்தை ஒருநாளும் ஒழியாது”என்று வாசிக்கிறோம். இதற்கு அர்த்தம் என்ன?நீங்கள் காண்கிறவைகள், நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிற அந்த எதிர்மறையான காரியங்கள், எல்லாம் ஒழிந்து போய்விடும் தேவனுடைய வார்த்தை

உயிர் பெற்று நிற்கும். அது நிலைத்து நிற்கும் அந்த வார்த்தையின்படியே உங்கள் வாழ்க்கை மாற ஆரம்பித்து விடும். ஆமென், அல்லேலூயா. சூழ்நிலைகள் மாற ஆரம்பித்து விடும் நீங்கள் பார்க்கிற காரியங்கள் மாற ஆரம்பித்து விடும்ஆகையினாலே இந்த வார்த்தைகளை நாம் அறிக்கை செய்வது மிக அவசியம். இதை தான் விவிலியம் கூறுகிறது வாயாற அறிக்கையிடும்போது உள்ளுக்குள்ளே இருக்கிறது விசுவாசம் தேவனிடத்தில் நம்மை நீதி மன்றங்களாக மாற்றும். வாயால் அறிக்கை செய்வது தான் நம்முடைய வாழ்க்கையிலே விடுதலை கொண்டுவரும். வேத வசனங்களை நாம் அறிக்கை செய்ய வேண்டும். நிறைய மனிதர்கள் இப்படி அறிக்கை செய்யாமலே இருந்து விடுகிறார்கள். 2 கொரிந்தியர் 4ம் அதிகாரம் 13 வது வசனம்(கடவுள் மீது நம்பிக்கையோடு இருந்தேன் ஆகையால் பேசினேன்) நம்பிக்கை கொண்டிருக்கிறவர்கள் பேச வேண்டும் எதை பேச வேண்டும். எதை நம்புகிறோமோ அதை பேச வேண்டும். அதுதான் வாயாற அறிக்கை செய்வது. தொடர்ந்து நீங்கள் அறிக்கை செய்யும்போது உங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் உண்டாகும். தானியேல் 3ம் அதிகாரத்தில் அரசன் ஒரு பெரிய சிலை ஒன்றை செய்விக்கிறான். அங்கே இஸ்ரவேலில் இருந்து நாடு கடத்தப்பட்ட மூன்று வாலிபர்கள் இருந்தார்கள்(சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகு) அரசன் ஒரு கட்டளை கொடுத்தான். அங்கு இசை கருவிகளை இசைக்கும் பொழுது எல்லா மனிதர்களும், எல்லா அதிகாரிகளும், அனைவரும் தெண்டனிட்டு அந்த சிலையை வணங்க வேண்டும் என்று கட்டளையிட்டார். ராஜா இப்படி கட்டளையிடும் போது இசைக்கருவிகள் இசைக்கப்பட்டது. எல்லோரும் தெண்டனிட்டு வணங்கினார்கள்.ஆனால், இந்த மூன்று வாலிபர்களுக்கும் கடவுள் யார் என்று தெரியும். ஆகையினால், அந்த சிலையை வணங்க மாட்டோம் என்று வணங்காமல் நின்று கொண்டிருந்தார்கள். உடனே இந்த செய்தி அரசனுக்கு தெரிவிக்கப்பட்டது அரசன் மூன்று வாலிபர்களையும் பார்க்கிறார் மூன்று பேரையும் பார்க்கும் பொழுது பரிதாபமாக இருந்தது. ஆகையால், இன்னொரு வாய்ப்பை உங்களுக்கு தருகிறேன். இன்னொரு முறை இசைக்கருவிகள் இசைக்கும் பொழுது நீங்கள் வணங்கா விட்டால் எரிகிற நெருப்புச் சூலையை ஏழு மடங்கு அதிகமாக்கி அதிலே உங்களை தூக்கிப் போடுவேன். என்று கூறுகிறார். அதற்கு இந்த மூன்று வாலிபர்களும் “இதற்கு நாங்கள் உமக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை இருந்தாலும் எரிகிற நெருப்புச் சூலையிலிருந்தும், அரசராகிய உம்முடைய கையிலிருந்தும் நாங்கள் வழிபடுகின்ற எங்கள் ஆண்டவர் எங்களை காப்பாற்ற வல்லவர்” என்று அறிக்கை செய்தார்கள். ஆமென், அல்லேலுயா. பாருங்கள் இந்த சூழ்நிலையில் ஒரு அரசனுக்கு முன்பாக அவர்கள் தைரியமாக அறிக்கை செய்தார்கள். நாங்கள் வழிபடுகின்ற எங்கள் ஆண்டவர் எரிகின்ற நெருப்புச் சூலையிலிருந்தும், அரசராகிய உம்முடைய கையில் இருந்தும் எங்களை

காப்பாற்ற வல்லவர் என்று சொன்னார்கள். கடவுள் நாம் பேசுகிற வார்த்தைகளை கவனமாய் கேட்கிறார். யார் இப்படி விசுவாசமாக அறிக்கை செய்கிறார்களோ அவர்களுக்கு உதவி செய்வதற்காகவே ஆண்டவர் இறங்கி வருகிறார். ஆமென்,அல்லேலூயா. இன்றைக்கு நிறைய மனிதர்கள் இவ்வாறு பேசுவதில்லை அவிசுவாசமான வார்த்தைகளை பேசி விடுகிறார்கள். என்ன ஆகுமோ? என்று புலம்புகிறார்கள்

இது விடுதலைக்கான வழி அல்ல. விடுதலைக்கான வழி என்பது விசுவாசத்தை அறிக்கை செய்வது. எப்படியெனில் வேலை செய்யும்போது அறிக்கை செய்யுங்கள், குளிக்கும்போது அறிக்கை செய்யுங்கள், சாப்பிடுவதற்கு முன்பாக அறிக்கை செய்யுங்கள், நடந்து போய்க் கொண்டிருக்கும் போது அறிக்கை செய்யுங்கள், வேலைக்கு போகும் போது அறிக்கை செய்து கொண்டே செல்லுங்கள், எல்லா நேரங்களிலும் தேவனுடைய வார்த்தைகளை நீங்கள் அறிக்கை செய்வீர்களானால் உங்கள் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் ஒரு விடுதலையை நீங்கள் உணர ஆரம்பிப்பீர்கள். உங்கள் வாழ்வு ஆசிர்வாதமாக மாற ஆரம்பிக்கும்.ஆமென், அல்லேலூயா. இந்த மூன்று வாலிபர்களும் இப்படி ராஜாவுக்கு எதிராக சொன்ன உடனே ராஜாவுக்கு மிகவும் கோபம் வந்தது. நேபுகாத்நேச்சார் என்கிற அரசன் கூறினான் நெருப்புச் சூலையை ஏழு மடங்கு அதிகமாக்குங்கள். அதேபோல அதிகமாக்கினார்கள். அந்த மூன்று வாலிபர்களையும் சங்கிலிகளாலே கட்டுங்கள்.ஏனென்றால்,நெருப்பிலே போட்ட உடனே வேதனை தாங்காமல் வெளியே வந்து விடுவார்கள் என்று சங்கிலிகளாலே கட்டினார்கள். மூன்று வாலிபர்களையும் தூக்கிக் கொண்டு நெருப்பு சூலையிலே எறிந்தார்கள். அவர்களை தூக்கிக் கொண்டு போனவர்களை அந்த நெருப்பு விழுங்கி விட்டது. மூன்று வாலிபர்களையும் போட்ட உடனே அவர்கள் தேவனை சந்தோஷமாக துதித்து பாட ஆரம்பித்தார்கள்.ஆமென், அல்லேலூயா. உங்களுக்கு எதிராக இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும் போதெல்லாம் ஆண்டவரை துதியுங்கள், விசுவாசமான வார்த்தைகளை பாடுங்கள், விசுவாசமான வார்த்தைகளை பேசுங்கள் அதுதான் நீங்கள் விடுதலை பெறுவதற்கு வழி. விடுதலை பெற விரும்புவோர் எல்லோரும் இதை செய்யுங்கள். அறிக்கை செய்கிறவர்கள் தான் விடுதலை பெறுவார்கள் என்று வேதத்திலே வாசிக்கிறோம். ஆகையினாலே, இரண்டு குருடர்கள் ஆண்டவரிடத்திலே வந்த பொழுது “நான் இதை உங்களுக்கு செய்ய முடியும் என்று நம்புகிறீர்களா?” என்று கேட்டார். அவர்கள் “நம்புகிறோம்” என்று அறிக்கை செய்த பிறகு தான் சுகமாக்கினார். பல நேரங்களில் ஆண்டவர் இதைத்தான் பார்க்கிறார்.விசுவாசமான வார்த்தைகளை பேசுகிறார்களா? என்று . நம்மையும் கூட இவ்வாறு தான் பார்க்கிறார் நாம் கஷ்டப்படுவது ஆண்டவருக்கு தெரியும். அவருடைய வாக்குறுதியை அவர் மாற்ற முடியாது. அவர் வாக்கு மாறாதவர்.

ஆனால், அவர் உதவி செய்ய வரும்பொழுது நாம் விசுவாசமுள்ள வார்த்தைகளை பேசுகிறவர்களாக இருக்க வேண்டும். வாயார விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும். இந்த மூன்று வாலிபர்கள் நெருப்பு சூலையிலே விழுந்த உடனே தேவனை துதிக்க ஆரம்பித்தார்கள். நெருப்பினுடைய வேதனை மிக அதிகமாகும்போது, பொதுவாக நெருப்பு பட்டவர்கள் அந்த வேதனை தாங்க முடியாமல் கத்தி கதறி வெளியே வருவார்கள். அந்த அரசனும் அதைத்தான் எதிர்பார்த்தான். மூன்று வாலிபர்களும் கத்துவார்கள் கூச்சலிடுவார்கள் என்று எதிர்பார்த்தான். தேவனுடைய பிள்ளைகளிடத்திலே புலம்பல் இல்லை, கூச்சல் இல்லை மாறாக,அவர்கள் தேவனுடைய வல்லமையை புகழ்ந்து பாட ஆரம்பித்தார்கள். ஆமென், அல்லேலுயா. அவர்கள் இவ்வாறு விசுவாசமாக செயல்பட்டதை பார்த்த உடனே ஆண்டவர் அவர்கள் நடுவில் இறங்கி வந்தார். அரசர் உற்றுப் பார்த்தார் சங்கிலிகள் தகர்க்கப்பட்டதையும், அந்த நெருப்பு சூலையிலே மூன்று பேர்கள் நடந்து கொண்டு தேவனை துதிப்பதையும் பார்த்தான். அவன் நன்கு உற்றுப் பார்த்த பொழுது நான்கு பேர் இருப்பதை கண்டான். ஆமென், அல்லேலூயா. பயப்படாதீர்கள், உங்கள் கண்களுக்கு ஆண்டவர் உங்களோடு இருப்பது தெரியாமல் இருக்கலாம். ஆனால், ஆண்டவர் உங்களோடு இருக்கிறார். ஆமென் அல்லேலூயா. ஆனால், நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன?. விசுவாச வார்த்தைகளை அறிக்கையிட வேண்டும். அப்படி அறிக்கை செய்ய செய்ய நாம் சுகமடைவோம். ஒருவேளை நீங்கள் வியாதியோடு இருக்கலாம். 1 பேதுரு 2 ம் அதிகாரம் 24 ஆம் வசனத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால் (சிலுவையின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார் நாம் பாவங்களுக்கு இறந்து நீதிக்காக வாழ்வதற்கு இவ்வாறு செய்தார்) அவருடைய காயங்களால் நீங்கள் சுகமடைந்திருக்கிறீர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை திரும்ப திரும்ப சொல்லுங்கள் இயேசுவின் தழும்புகளால் நான் சுகமாயிருக்கிறேன் என்று திரும்பத் திரும்ப சொல்லுங்கள். நம்முடைய பாப்பரசரும் கூட கொரோனா காலங்களிலே இயேசுவின் இரத்தத்தினால் நான் முத்திரையிடப்பட்டிருக்கிறேன் என்று அடிக்கடி சொல்ல சொன்னார். எனவே கொரோனா வைரஸ் என்னை தாக்காது என்று சொல்ல சொன்னார். இயேசுவின் இரத்தத்தினாலே நான் முத்திரையிடப்பட்டிருக்கிறேன் என்று திரும்பத் திரும்ப சொல்லுங்கள். இந்த வார்த்தைகளை திரும்பத் திரும்ப அறிக்கையிடும் போது சுகம் கிடைக்கிறது. திருப்பாடல் 91 இல் “கொன்றளிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 10வது வசனம் இவ்வாறு சொல்கிறது ஆகவே “தீங்கு உனக்கு நேரிடாது வாதை உன் கூடாரத்தை நெருங்காது” என்று சொல்லப்பட்டிருக்கிறது.ஆமென், அல்லேலுயா. இப்படிப்பட்ட வார்த்தைகளை திரும்பத் திரும்ப நீங்கள் சொல்ல வேண்டும். அப்படி சொல்லும் போது முதலாவது வியாதி உங்களை தாக்காதவாறு நீங்கள்

பாதுகாக்கப்படுவீர்கள். இயேசுவின் தழும்புகளால் நான் குணமானேன், அவர் என் நோய்களை சுமந்து கொண்டார் என்று சொல்ல சொல்ல உங்களுக்குள் இருக்கும் வியாதி உங்களை விட்டு விலகிப் போக ஆரம்பிக்கும். அற்புதமாக நீங்கள் சுகத்தை பெற்றுக்கொள்வீர்கள். ஆமென், அல்லேலுயா. தேவனால் சுகமாக்க முடியாத வியாதி ஒன்றும் இல்லை. சில பேர் உடனே சுகமாகி விடுகிறார்கள். சில பேர் தாமதமாகத்தான் சுகத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஏனென்றால், எதிர்மறையான வார்த்தைகள பேசிக் கொண்டிருக்கிறார்கள் நீங்கள் என்ன செய்ய வேண்டும் திரும்பத் திரும்ப இந்த விசுவாச வார்த்தைகளை வாயாற அறிக்கையிட வேண்டும் இவ்வாறு அறிக்கை செய்து விட்டு நீங்கள் இறைவனிடத்திலே ஜெபிக்கும் பொழுது சுகத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். ஆமென், அல்லேலூயா. பல வருடங்களுக்கு முன்பாக ஒரு ஜெபக்கூட்டமானது ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டிருந்தது. அதை அந்த ஊரில் இருந்த அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது இஸ்லாமிய மதத்தை சார்ந்த ஒரு குடும்பமும் அந்த செய்தியை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த குடும்பத்திலே ஐந்து வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவனுக்கு இரண்டு கால்களும் நடக்க முடியாதவாறு சூம்பி போய் முடியாமல் இருந்தது. அந்த சிறுவன் அந்த வானொலியிலே சொல்லப்பட்ட செய்திகளையும், அங்கே சுகமான சாட்சிகளையும் கேட்டபோது அவனுக்குள்ளே ஒரு விசுவாசம். அவனுக்கு ஐந்து வயது தான் ஆகிறது. அந்த சிறுவன் இவ்வாறு கூறினான் “என்னை அந்த கூட்டத்திற்கு கூட்டிச் செல்லுங்கள் நான் சுகமாகி விடுவேன்” என்று சொன்னான். ஆமென், அல்லேலுயா. அந்த சிறுவன் அவனது தந்தையை திரும்பத் திரும்ப “என்னை அழைத்துச் செல்லுங்கள்” என்று தொந்தரவு செய்ய ஆரம்பித்தான் அவர்களும் இவன் திரும்பத் திரும்ப தொந்தரவு செய்கிறானே என்று அன்று மாலையிலே நடந்த கூட்டத்திற்கு தூக்கி கொண்டு சென்றார்கள் கூட்டம் நடக்கின்ற இடத்திற்கு சென்றவுடன் அந்தச் சிறுவன் எ”ன்னை கீழே இறக்கி விடுங்கள் நான் சுகமாகி விடுவேன்” என்று கூறினான். அவர்களும் இறக்கி விடவே அவனுடைய கால்கள் உடனே சுகமடைந்தது. ஆமென், அல்லேலூயா. காரணமென்ன?. அந்த சிறுவன் இவ்வளவு விசுவாசமாக அறிக்கை செய்கிறானென்றால், தேவனை அறிந்த நாம், அவருடைய வார்த்தைகளை கேட்கிற நாம், எவ்வளவு விசுவாசத்தோடு அறிக்கை செய்ய வேண்டும். சிந்தித்துப்பாருங்கள் உங்களுடைய விசுவாசம் இந்த உலகத்தை ஜெயிக்கும். ஆமென்,அல்லேலூயா. ஒப்புகொடுப்போமா? எதிர்மறையான வார்த்தைகளை அல்லது எதிர்மறையான சிந்தனைகளை நாம் சிந்தித்துக் கொண்டிருப்போமானால் அல்லது பேசிக் கொண்டிருப்போமானால் அதற்காக ஆண்டவரிடத்திலே மன்னிப்பு கேட்போம். ஆண்டவரே இப்படிப்பட்ட அவிசுவாசமான வார்த்தைகளை நான் பேசியிருக்கிறேன்

என்னை மன்னியும். இனி அப்படி பேச மாட்டேன் விசுவாசமான வார்த்தைகளை மட்டுமே பேசுவேன். இந்த நாளிலே ஒப்புக் கொடுப்போம். நீங்கள் ஒருவர் கூட விடுதலை பெறாமல் இருக்க முடியாது. ஒருவர் கூட சுகம் பெறாமல் இருக்க முடியாது. இயேசு கிறிஸ்து நம் அனைவரையும் சுகமாக்க, விடுவிக்க வல்லவராக இருக்கிறார். ஒப்புக் கொடுப்போம் எந்தெந்த நேரங்களில் சூழ்நிலைகள் வித்தியாசமாக மாறும் பொழுது அவிசுவாசமான வார்த்தைகளை பேசினோமோ அந்த நேரங்களுக்காக என்னை மன்னியும் என்று சொல்லுவோம். உள்ளூர நம்புவது தேவனுக்கு உகந்தவர்களாக நம்மை மாற்றுகிறது வாயார அருகே செய்வது மீட்பை விடுதலையை நமக்கு கொண்டு வருகிறது,ஆண்டவரே எங்களை தயவாய் மன்னிப்பீராக. இப்படி பேசின எல்லா பாவங்களுக்காகவும் நாங்கள் மனம் வருந்துகிறோம் மன்னியும். இனி ஒருபோதும் இப்படிப்பட்ட அவிசுவாசமான வார்த்தைகளை எங்கள் வாயிலே வராதபடிக்கு எங்கள் இதயங்களை சுத்திகரியும் எங்கள் உள்ளத்தில் இருக்கிற அந்த விசுவாசமான வார்த்தைகளை மட்டுமே பேசவும், விடுதலை பெறவும் எங்களை ஒப்புக்கொடுக்கிறோம். அவிசுவாசமான வார்த்தைகள், ஒருபோதும் உமக்கு பிரியமாய் இருப்பதில்லை. விசுவாசமான வார்த்தைகளிலே நீர் மகிழ்ச்சி அடைகிறீர் விசுவாசமான வார்த்தைகளிலே நீர் சந்தோஷப்படுகிறர்ன இன்று முதல் எங்கள் வாயிலே விசுவாசமான வார்த்தைகள் இருக்கு கிருபை தாரும் விசுவாசமுள்ள வார்த்தைகளை மட்டுமே நான் பேசுவேன் என்று உறுதியளிக்கிறேன். ஆண்டவர் இயேசு என் நோய்களை சுமந்து கொண்டார் என்று சொல்லுங்கள். உங்களுடைய வியாதி எதுவாக இருந்தாலும் “இயேசு என் நோய்களை சுமந்து கொண்டார்” என்று சொல்லுங்கள் எந்த பலவீனங்கள் இருந்தாலும் சொல்லுங்கள் என் பலவீனங்களை இயேசு சுமந்து கொண்டார். ஒருவேளை பாவம் உங்களை ஆளுகை செய்யுமானால் பாவத்திலிருந்து உங்களை விடுவிக்க இயேசு விலையேறப் பெற்ற ரத்தத்தை விலையாக கொடுத்திருக்கிறார். ஆகையினாலே நான் விடுதலை பெற்று இருக்கிறேன் என்று சொல்லுங்கள். உங்கள் குழந்தைகள் சேட்டை பண்ணுகிறவர்களாக இருந்தாலும் ஆண்டவர் தாமே பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பார் என்று வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது என் பிள்ளைகளுக்கு ஆண்டவர் தாமே கற்றுக் கொடுப்பார் என்று சொல்லுங்கள். என் பிள்ளைகள் ஒளிவுமரக்கன்றுகளைப் போல என்னை சூழ்ந்து இருப்பார்கள் என்று சொல்லுங்கள். நாங்கள் குடும்பமாக ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம் என்று சொல்லுங்கள். என் தேவன் என் குடும்பத்தை மாற்றுவார் என் கணவனை மாற்றுவார் தொடுவார் என் பிள்ளைகளை தொடுவார் எல்லாரையும் மாற்ற அவருக்கு அதிகாரம் உண்டு வல்லமை உண்டு இயேசுவே ஆண்டவர் எல்லா சூழ்நிலைகளில் இருந்தும் விடுதலையாக அவரே வல்லவர் நீயோ கடன் வாங்க மாட்டாய் அனைவருக்கும் கடன்

கொடுப்பாய் என்று வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய வறுமையை இயேசு சுமந்து கொண்டு எனக்காக அவர் ஏழையானார். அதனால், வறுமை என்னை நெருங்க முடியாது என்று சொல்லுங்கள் நீங்கள் சொல்ல சொல்ல தேவனுடைய வல்லமை உங்களுக்குள் இறங்கி வருகிறது.அவர் உங்களை தொடுக்கிறார் இப்பொழுதே உங்களை தொடுவார்.

ஜெபிப்போம்

அன்புள்ள பரலோக பிதாவே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.யார் யார் பயத்தோடு இருக்கிறார்களோ இயேசுவின் நாமத்தினாலே அவர்களை விட்டு பயம் நீங்குவதாக. இயேசுவின் பெயரால் எல்லா பயத்தின் ஆவிகளும் வெளியேறுவதாக. பயம் இன்றோடு முழுவதுமாய் விலகட்டும். ஒரு விடுதலை இன்று உண்டாக்கட்டும். ஒருவர் கூட பயத்தோடு இருப்பது உம்முடைய சித்தம் அல்ல. ஆண்டவரே, பயப்படுகிற கோளை உள்ளத்தை நீர் கொடுக்கவில்லை. மாறாக வல்லமையும் அன்பும் தெளிந்த புத்தியும் உள்ள ஆவியை கொடுத்திருக்கிறீர். அந்த ஆவியானவர் இப்பொழுது உம்முடைய பிள்ளைகளை மூடட்டும். எல்லாவிதமான பயமும் விலகட்டும் அவர்களுடைய உடலில் இருக்கிற ஒவ்வொரு வியாதிகளும் இப்பொழுதே சுகம் அடையட்டும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை தேவனுடைய சுகமாக்குகிற வல்லமை இப்போதே இறங்கட்டும். இயேசுவின் நாமத்தில் இப்போது ஒரு சுகம் உண்டாவதாக. ஆண்டவரே ஒவ்வொரு பிள்ளைகளையும் தொட்டு நீர் விடுதலை தருவீராக. இயேசு கிறிஸ்துவின் பெயரால் பிதாவே ஆமென்.

எரேமியா 15:19 எனவே, ஆண்டவர் கூறுவது இதுவே; "நீ திரும்பி வந்தால் நான் உன்னை முன்னைய நிலைக்குக் கொண்டு வருவேன். என்முன் வந்து நிற்பாய்; பயனில் நீக்கிப் பயனுள பேசின், நீ என் இறைவாக்கினனாக இருப்பாய். அவர்கள் உன்னிடம் திரும்பி வருவார்கள்; நீ அவர்களிடம் திரும்ப வேண்டாம்.

இரண்டு காரியங்களை ஆண்டவர் இங்கு சொல்கிறார் நீ திரும்பி வந்தால் நான் உன்னை முன்னைய நிலைக்கு கொண்டு வருவேன் நீயும் என் முன் வந்து நிற்பாய் இரண்டாவது ஒரு காரியம் சொல்கிறார் ஆண்டவரை விட்டு தூரமாய் வாழ்கிறவர்கள் ஆண்டவர் முன் வந்து நிற்க வேண்டும் ஆண்டவரைநோக்கியே நம் வாழ்வு அமைய

வேண்டும் ஆண்டவரை சுற்றியே நாம் இருக்க வேண்டும் இரண்டாவது ஒரு காரியம் சொல்கிறார் பயனிலை நீக்கி பயனுள்ளவே பேசு தீமையான வார்த்தைகளை விட்டு நன்மையான வார்த்தைகளை எடுத்து பேசுவாயானால் நீ இறைவாக்கினராய் இருப்பாய் அவர்கள் உன்னிடம் திரும்பி வருவார்கள் நீ அவர்களிடம் திரும்ப வேண்டாம் இறைவாக்கினராய் இருப்பாய் என்ற ஆங்கில வார்த்தைக்கு என்னுடைய வாயாய் இருப்பாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது கடவுளுடைய ஒரு வாயைப்போல நீங்கள் இருப்பீர்கள் நிறைய மக்கள் தங்களுடைய வாயினால் கெட்டுப் போகிறார்கள் ஆண்டவர் இங்கே சொல்கிறார் நீங்கள் கடவுளுடைய பிள்ளைகளாய் இருப்பீர்கள் களானால் ஆண்டவரிடத்தில் திரும்பி வருவது என்றால் என்ன ஆண்டவரிடத்தில் திரும்பி வரும்போது பயனில்லாதவைகளை பேசாமல் பயனுள்ள வார்த்தைகளை பேச கற்றுக் கொள்ள வேண்டும் மனிதர்கள் ஆலயத்துக்கு வரும்போது ஒருவிதமாக பேசுகிறார்கள் பவ்யமாக பக்தி உள்ளவர்களாக அருமையான வார்த்தைகளை பேசுவார்கள் அவர்கள் பேசுவதை எல்லாம் பார்க்கும்போது நமக்கே ஆச்சரியமாக இருக்கும் எவ்வளவு ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் எவ்வளவு பக்தி உள்ள வார்த்தை பேசுகிறார்கள் எவ்வளவு விசுவாசமாக பேசுகிறார்கள் என்று எண்ண தோணும் ஆனால் ஆலயத்தை விட்டு வெளியே போன பிறகு அவர்கள் பேசுகிற காரியங்களை எல்லாம் நாம் கவனிப்போமானால் அவ்வளவு தான் நிறைய பேர் இப்படித்தான் இருக்கிறார்கள் உங்களுடைய வாழ்க்கையில் அநேக ஆசீர்வாதங்கள் தடைப்படுவதற்கு இது ஒரு முக்கியமான காரணம் பல வருடங்களுக்கு முன்பாக ஆண்டவர் என்னிடம் பேசும் போது ஒரு காரியத்தை சொன்னார் கடவுள் ஒரு மனிதனை பயன்படுத்தும் போது ஒரு மனிதனுடைய நாவை தான் பயன்படுத்துகிறார் அதேபோல பிசாசு பயன்படுத்த விரும்பும் போது ஒரு மனிதனுடைய நாவை தான் பயன்படுத்துகிறது என்று சொன்னார் எத்தனை ஒரு அதிர்ச்சியான காரியம் இன்று யோசித்துப் பாருங்கள் நம்முடைய நாக்கு யாரால் பயன்படுத்தப்படுகிறது கடவுள் நம்முடன் நாவை பயன்படுத்துகிறாரா அல்லது பிசாசு நம்முடைய நாவை அதிகமாக பயன்படுத்துகிறதா கடவுள் நம்முடைய நாவை பயன்படுத்துவனரால் நாம் கடவுளுடைய ஊழியராக இருக்கிறோம் ஆனால் பிசாசு நம் நாவை பயன்படுத்துமானால் நாம் பிசாசினுடைய ஊழியர்களாகத்தான் இருக்கிறோம் நாம் தேவனுடைய ஊழியர்களாக இருந்தால் மரிக்கும்போது வானதூதர்கள் வந்து நம்மை அழைத்துக் கொண்டு போவார்கள் அதே சமயத்தில் நாம் பிசாசுடைய ஊழியர்களாக இருக்கும் போது நாம் கண்களை மூடும் போது அசுத்த ஆவி வந்து நம்மை அழைத்துக் கொண்டு போகும் நரக நெருப்பை நோக்கி நாம் இழுத்து செல்லப்படுவோம் தேவாதி தேவன் நமக்கு நாவை கொடுத்திருக்கிறார் எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம் அப்படி தான் நாவை கொடுத்து இருக்கிறார் ஆனாலும் நாம் பேசக்கூடிய

வார்த்தைகளில் ஆசீர்வாதங்களும் அடங்கியிருக்கிறது சாபங்களும் அடங்கி இருக்கிறது நன்மையும் அடங்கியிருக்கிறது தீமையும் அடங்கியிருக்கிறது வாழ்வும் அதில் இருக்கிறது சாவும் அதிலே இருக்கிறது நீதிமொழிகள் 18/ 21 வாழ்வதும் நாவாலே, சாவதும் நாவாலே;

எங்கேயோ ஆண்டவர் நம் தேவைகளை அவர் கையில் வைத்திருக்கிறார் என்று நினைக்காதீர்கள் அவர் எல்லாவற்றையும் உங்கள் நாவில் வைத்து விட்டார்

உங்கள் நாவினாலே நாம் வாழ்வை அனுபவிக்க முடியும் சாவையும் அனுபவிக்க முடியும் ஆசீர்வாதத்தையும் அனுபவிக்க முடியும் சாபத்தையும் அனுபவிக்க முடியும் அநேக குடும்பங்கள் சபிக்கப்பட்ட குடும்பங்களாக இருப்பதை நாம் காண்கிறோம் ஏனென்றால் அந்த குடும்பங்களில் அடிக்கடி சண்டைகள் ஒருவர் ஒருவரை சபிப்பதை நாம் பார்க்கிறோம் கணவன் மனைவியை சபிக்கிறார் மனைவி கணவனை சபிக்கிறாள் பெற்றோர் பிள்ளைகளுக்கு சாபம் விடுகிறார்கள் ஏன் இந்த வீட்டில் பிறந்தேன் என்று பிள்ளைகள் ஒரு பக்கம் சபிக்கிறார்கள் ஒட்டு மொத்த குடும்பமே சாபத்துக்கு உள்ளாகிறது இதில் எத்தனை பெண்கள் கணவரை நான் சபித்ததே இல்லை என்று சொல்வீர்கள் எத்தனை ஆண்கள் என் மனைவியை சபித்ததே இல்லை என்று சொல்வீர்கள் எத்தனை பெற்றோர் என் பிள்ளையை நான் சபித்ததே இல்லை என்று சொல்வீர்கள் சர்வ சாதாரணமாக சொல்லிவிடுவீர்கள் நீ எனக்கு பண்றதுக்கு எல்லாம் ஒரு நாள் அனுபவிப்பாய் என்று நீ எனக்கு செய்ததெல்லாம் ஒரு நாள் கணக்கு கொடுப்பாய் ஒருநாள் மாட்டிக் கொள்வார் என்று சொல்வார்கள் நான் போன பிறகு தான் உனக்கு தெரியும் என்று சொல்வீர்கள் பல விதங்களில் சாபங்கள் ஆனால் ஒருவர் கஷ்டப்படும் போது இவர்களே சொல்வார்கள் என்னையா அடிச்ச அடிக்கும்போது கை விளகாமல் போகும் கால் விளக்காமல் போய்விடும் நீ இப்படி ஆகிவிடுவாய் என்று பல விதங்களில் சாபம் விடுகிறார்கள் அதன் பிறகு உடம்பு சரி இல்லை என்றால் முதல் ஆளாக அவர்கள் தான் ஹாஸ்பிடலுக்கு தூக்கிகொண்டு ஓடுவார்கள்

நினைத்துப் பாருங்கள் இதற்கு யார் காரணம் என்று பிறகு ஆலயத்தில் போய் அழுவார்கள் ஆண்டவரே எனக்கு மட்டும் ஏன் இந்த வேதனை என்று கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே நம்முடைய வாழ்வும் நம்முடைய சாபம் நம்முடைய நாவில் தான் இருக்கிறது உங்களுடைய ஆசிர்வாதமும் உங்களுடைய சாபமும் உங்களுடைய நாவில் தான் இருக்கிறது அனேகர் குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்கு பதிலாக சாபமாக இருக்கிறார்கள் அப்படி என்றால் என்ன

இந்த வசனத்தை பாருங்கள் பயனிலாவை நீக்கி பயன்னுள்ளவை நீ பேசினால் நீ என்னுடைய வாயாக இருப்பாய் என்னுடைய இறைவாக்கினராக இருப்பாய் என்று சொல்ல பட்டு இருக்கிறது அப்படி என்றால் என்ன நீ அந்த வீட்டிற்கு ஆசிர்வாதமாக

இருப்பாய் நீ ஒரு வீட்டில் இருந்தால் ஆசிர்வாதமாக இருப்பாய் ஒரு பங்கில் இருந்தால் ஆசிர்வாதமாக இருப்பாய் ஒரு இடத்தில் வேலை செய்தால் அந்த இடத்தில் ஆசீர்வாதமாக இருப்பாய் இதற்கெல்லாம் காரணம் என்ன அப்படி இல்லை என்றால் உனக்குள் இருக்கிற ஆசீர்வாதம் போய் விடும் தேவையில்லாத காரியங்களை பேசிக்கொண்டே இருப்பாய்ஆனால் அங்கு ஆசீர்வாதம் இருக்காது மாறாக சாபம் இட கூடிய ஒருவர் ஒருவரை சபித்து அநேக இடங்களில் சாபமாக இருக்கக்கூடிய இடங்களை பார்க்கிறோம் அநேக அலுவலகங்களில் கீழ் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை சபிக்கிறார்கள் மேலதிகாரிகள் கீழ் இருப்பவர்களை சபிக்கிறார்கள் பள்ளிக்கூடங்களில் கூட பார்க்கிறோம் ஆசிரியர்கள் மாணவர்களை சபிக்கிறார்கள் குடும்பங்களில் கூட பிறந்தவர்கள் ஒருவரை ஒருவர் சபிக்கிறார்கள் எங்கே போனாலும் ஆசீர்வாதமாக இருக்க வேண்டிய

மனிதர்கள் சாபத்தை கொண்டு போகிற மனிதர்களாக மாறி போகிறார்கள் இதையெல்லாம் நான் சொல்லும்போது உங்கள் இருதயங்களை ஆராய்ந்து பாருங்கள் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் நீங்கள் ஆசிர்வாதமாக இருக்கிறீர்களா உங்கள் வாயில் வரக்கூடிய வார்த்தைகள் ஆசீர்வாதங்களாக இருக்கிறதா அல்லது நான் என் குடும்பத்திற்கு சாபமாக இருக்கிறேனா என்று யோசித்துப் பாருங்கள்

இன்று பலருடைய அங்கலாய்ப்பு அதுதான் அய்யோ நான் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன் இந்த வீட்டிலே நான் ஒரு ஆளு தான் கஷ்டப்படுகிறேன் மற்றவர்கள் எல்லோரும் என்னை தனியா விட்டு விட்டார்கள் என்று மார்த்தாலே போலே புலம்புகிறார்கள் இன்று புலம்புகிற பெண்கள் அநேகர் உண்டு சில ஆண்கள் கூட அப்படித்தான் புலம்புகிறார்கள் நான் வேலை செய்வது யாருக்கும் கண் தெரியவில்லை சிலர் வேலை செய்துவிட்டு எல்லோருக்கும் ஒரு நாள் வரும் என்று சொல்வார்கள் அவர்களுக்கு ஏதாவது வந்தால் திரும்பவும் நீங்கள் தான் உட்கார்ந்து வேலை செய்யப் போகிறீர்கள் நீங்கள்தான் வேதனை பட போகிறீர்கள் நாவு பாருங்கள் தேவன் நமக்கு ஆசிர்வாதமாக அந்த நாவை தந்திருக்கிறார் பல நேரங்களில் அவைகளை பயன்படுத்த தெரியாமல் சாபமாக மாற்றி விடுகிறோம

அதனால்தான் ஆண்டவர் சொல்கிறார் பயனில்லாததுகளை நீக்கி பயனுள்ளவைகளை நீ பேசுவாயானால் என்னுடைய வாயாக இருப்பாய் என்று சொல்கிறார் உங்களுடைய வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளாக மதிக்கப்படும் ஆண்டவர் உங்களை பயன்படுத்த ஆரம்பிப்பார் அநேகரை ஆண்டவர் பயன்படுத்தாமல் போவதற்கு காரணம் அவர்களுடைய நாவு சுத்தமாக இல்லை ஒருமுறை ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் இருந்தபோது மனைவி என்னிடத்தில் வந்து முறையிட்டார் என் கணவர் என்னிடுவதில் பேசுவதே இல்லை மற்ற எல்லாரிடத்திலும் நன்றாக பேசுகிறார் என்று நான் அவரை அழைத்து என் பேச

மாட்டேன் என்கிறாய் என்று கேட்டேன் உனக்கென்று இருக்கிறது உன் மனைவி தானே அவள் தானே உன்னை நேசிப்பாள் அவளிடம் கொஞ்ச நேரம் பேசினால் என்ன பிரதர் கொஞ்ச நேரம் பேசினால் உடனே சண்டை வந்துவிடுகிறது கொஞ்சம் நேரம் பேசினால் சண்டை வந்து விடுகிறது என்று சொன்னார் என்ன காரணம் நாவிலே கட்டுப்பாடு இல்லை

எதை பேச வேண்டும் என்று கூட தெரியவில்லை வேதம் தெளிவாக சொல்கிறது பயன் இல்லாதவைகளை நீக்கி பயன் உள்ளவைகளை பேசு என்று நாம் பேசும்போது மற்றவர்களுக்கு நாம் பேசும் வார்த்தை பயனுள்ளதாக இருக்குமா இருக்காதா என்று பார்த்து எண்ணி பேச வேண்டும் இன்று அநேக குடும்பங்களில் தேவையில்லாத பல காரியங்களை பேசுகிறார்கள் பக்தி உள்ளவர்கள் கூட மணிக்கணக்காக உட்கார்ந்து கதை பேசுகிறார்கள் பழங்காலத்தில் இருந்து இந்த காலம் உள்ளவரை எல்லா கதைகளையும் பேசுவார்கள் ஒரு பிரயோஜனமும் இருக்காது யாருக்கும் எந்த பிரயோஜனமும் இருக்காது பேசி பேசி பெருமையடித்துக் கொள்வார்கள் தங்களைக் குறித்தே பெருமை பேசிக்கொள்வார்கள் நான் தான் அப்படி நான்தான் எல்லாவற்றையும் செய்தேன் என் குடும்பம் தான் மேலான குடும்பம் அது கொஞ்ச நேரத்தில் சண்டையில் போய் விட்டு விடும் ஒரு நாள் சிரித்து விட்டு வருவார்கள் இரண்டாம் நாள் சண்டை போட்டு விடுவார்கள் ஒரு வாரம் உட்கார்ந்து கும்மாளம் அடிப்பார்கள் அதன் பிறகு பார்த்தால் இரண்டு மாதம் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து பேச மாட்டார்கள் வார்த்தைகள் பேசக்கூடிய வார்த்தைகள் பைபிள் என்ன சொல்கிறது? பயன் இல்லாதவைகளை நீக்கி பிரயோஜனமான வார்த்தையை பேசுங்கள் என்று பயன்தரக்கூடிய வார்த்தையை களை பேசுங்கள்

அப்படி பேசுவீர்கள் என்றால் நீங்கள் ஆசீர்வாதமாக இருப்பீர்கள் உங்களுடைய வார்த்தையை கேட்க விரும்புவார்கள் அனேகர் வயதான பின்பு அவர்களை யாரும் மதிப்பதில்லை பேசுவதில்லை என்று அங்கலாய்க்கிறார்கள் அதற்கு என்ன காரணம் இதுதான் காரணம் உங்கள் வாழ் நாட்களில் நாவடக்கம் இல்லாமல் பேசி பழகுகிறீர்கள் எப்படி பேசவேண்டும் எதை பேசக்கூடாது என்று அறியாமல் பேசுகிறீர்கள் தேவை இல்லாத பல கதைகளை பேசுகிறீர்கள் மற்றவர்களைப் பற்றி குறைகள் நிறைய பேசுகிறீர்கள் அதனால் நீங்கள் வயதான பிறகு உங்கள் பேச்சைக் கேட்க யாரும் விரும்புவதில்லை நீங்கள் ஆசிர்வாதமாக இருப்பதில்லை நீங்கள் ஆசீர்வாதமாக இருக்க விரும்பினால் நீங்கள் தேவனுக்குள் வாழ்ந்து ஒரு மனிதன் தேவனுக்குள் வாழ்ந்து ஆசீர்வாதமாக இருப்பான் ஆனால் உங்களுக்கு வயதே கிடையாது முதுமையான வயதிலும் கனி கொடுப்பார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம் முதிர்வயதிலும்

90 வயது ஆனாலும் கனி கொடுப்பார்கள் எப்படி கனி கொடுப்பார்கள் அவர்கள் பேசுகிற வார்த்தைகள் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் தேவனுடைய வார்த்தைகளாக மதிக்கப்படும் அப்படி என்றால் நாம் நம்முடைய நாவை நன்மைகளை பேசுவதற்கு அறிந்திருக்க வேண்டும் நிறைய கிறிஸ்தவர்கள் அதை அறிந்து கொள்ளவில்லை ஒருமுறை ஒரு மனிதர் எப்பொழுதும் ஆலயத்திலே இருப்பார் ஜெபம் செய்து கொண்டே இருப்பார் காலையில் திருப்பலிக்கு போய் விட்டால் ஒரு மணி நேரம் இரண்டு மணி இருப்பார் திருப்பவும் 3 மணி நேரம் ஆலயத்தில் இருந்து விட்டு தான் வீட்டுக்கு வருவார் மீண்டும் சாயங்காலம் ஆலயத்துக்கு வந்து விடுவாராம் இப்படி இருந்ததை பார்த்துவிட்டு குருவானவர் அவர் மனைவியிடம் உங்கள் கணவர் ரொம்ப தங்கமானவர் இவரைப்போல ஒரு நாள் கூட இப்படி கட்டடிக்காமல் ஆலயத்துக்கு வந்ததே கிடையாது யாரும் இப்படிப்பட்ட கணவர் உங்களுக்கு கிடைப்பதற்கு நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று சொன்னார் அதற்கு அவரின் மனைவி நல்லது பாதர் இங்கேயே ஒரு கட்டில் போட்டு விடுகிறேன் அவரை அங்கே படுத்திருக்க சொல்லுங்கள் என்று சொன்னாராம் அந்தக் குருவானருக்கு தூக்கி வாரி போட்டது அதற்கு அந்த மனைவி பாதர் கோயில் இருக்கும்போது என் கணவர் சம்மானசு போல இருப்பார் வீட்டிற்கு வந்தார். அதற்கு நேர் மாறாக இருப்பார் என்று சொன்னாராம் அவர் பேசுகிற வார்த்தையை காது கொடுத்து கேட்க முடியாது என்று சொன்னார்கள் கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே ஆலயத்தில் இருக்கக்கூடிய கொஞ்ச நேரம் மட்டும் பக்தியாகும் பரவசமாக இருக்கிறவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் அங்கே நாவடக்கத்தோடு இருப்பார்கள் அப்படியே பேசினாலும் ஒரு வார்த்தை கூட வித்தியாசம் இல்லாமல் பேசுவார்கள் யாராவது கூட்டத்தில் அவர்கள் காலை மிதித்து விட்டார்கள் கூட பொறுமையாக போய்விடுவார்கள் ஆனால் அதே மனிதர்கள் வீட்டிற்கு வந்தால் அவர்கள் பேசுகிற வார்த்தையை பார்த்தால் ஆலயத்தில் இருந்த அந்தால்தானா இவர் என்று நாம் யோசிக்க வேண்டியது வரும் நான் யோசிக்கிற அளவுக்கு அவர்கள் பேச்சு மாறிவிடும் இன்றைக்கு நாம் எப்படி இருக்கிறோம் யோசித்துப் பாருங்கள் ஆண்டவர் சொல்கிறார் பயனுள்ளதா வார்த்தைகளை நீக்கி பயன் தர கூடிய வார்த்தைகளை நீங்கள் பேசுவீர்களா னால் என்னுடைய வாயாய் இருப்பாய் கடவுளுடைய இறைவாக்கினர்களாய் இருப்பீர்கள் உங்கள் வீட்டில் நீங்கள் இருப்பதே ஒரு ஆசிர்வாதம் எப்பொழுது தெரியுமா? பயனில்லாதவர்களை நீக்கிவிட்டு பயனுள்ள வார்த்தைகளை பேசும்போது நீங்கள் இருப்பதே பெரிய ஆசீர்வாதம்

பலர் இன்று ஆசிர்வாதமாக இல்லை அதுதான் உண்மை உங்கள் குடும்பங்களில் நடக்கிற பல தீமைகளுக்கு காரணம் ஆசிர்வாதமாக இருக்க வேண்டியவர்கள் ஆசிர்வாதமாக இல்லை பலர் தங்கள் வீடுகளில் சாபமாக தான்

இருக்கிறார்கள் அவர்கள் வாயை திறந்து விட்டால் போதும் பெரிய சப்தம் உண்டாகிவிடும் பிரச்சனை ஆகிவிடும் கொஞ்ச நேரம் வீட்டில் அமைதியாக இருந்து பாருங்களேன் அந்த வீடு எவ்வளவு அமைதியாக மாறிவிடுகிறது என்று பாருங்கள் சில பேருக்கு அமைதியாகவே இருக்க முடியாது எதையாவது ஒன்றை இழுத்து வம்பாளந்து பேசாமல் இருக்க முடியாது சில பேருடன் கொஞ்ச நேரம் பேசினால் போதும் எப்படியாவது சுற்றி வளைத்து சண்டைக்கு வந்து விடுவார்கள் பிரச்சனை களை கொண்டு வந்து விடுவார்கள் இன்று அநேக வீடுகளில் ஒரு மனம் இல்லை சமாதானம் இல்லை ஆளுக்கு ஒரு திசையில் இருக்கிறார்கள் இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா நாவு சரியில்லாத தான் காரணம் தேவையில்லாதவைகளை பேசாமல் தீயவைகளை பேசாமல் இருந்தால் அந்த வீட்டில் ஒரு மனம் உண்டாகும் நல்லதை மட்டும் பேசினால் அந்த குடும்பத்தில் ஒரு மனம் உண்டாகும் பங்கிலே ஒரு மனம் உண்டாகும் அந்த தெருவிலே ஒரு மனம் உண்டாகும் அந்தச் ஜெப குழுவிலேயே ஒரு மனம் உண்டாகும் அந்த பக்த சபையிலே ஒரு மனம் உண்டாகும் ஆலயத்துள்ள பாடகர் குழுவில் ஒரு மனம் உண்டாகும் ஆனால் இன்று நாம் காண்பது என்ன ஒரு மனம் இல்லை ஜெப குழுக்களில் ஜெபிக்கிறார்கள் ஆனால் ஆனால் நாவடக்கத்தை கற்றுக் கொள்ள வில்லை எதைப் பேச வேண்டும் எதை பேச கூடாது என்று அறியாதவர்களாக இருக்கிறார்கள் பல ஊழியர்கள் கூட இந்த விஷயத்தில் தவறு செய்கிறது பார்க்கிறோம் ஊழியர்களாக இருக்கிறார்கள் பிரசங்கம் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள் ஆனால் அவர்கள் கூட பயன்தராதவைகளான வார்த்தைகளை கடுமையான வார்த்தைகளை சண்டை இழுக்க கூடிய வார்த்தைகளை பேசாமல் இருப்பதில்லை பேசி விடுகிறார்கள் பயனுள்ள வார்த்தைகளை பேசுவதை அறியாமல் இருக்கிறார்கள் அதனாலே அவர்கள் ஆசீர்வாதமாக இருக்கவில்லை தேவன் உங்களை பயன்படுத்த வேண்டும் ஆண்டவர் உங்கள் வீடுகளில் ஆண்டவர் உங்களை பயன்படுத்த விரும்பினால் ஆசிர்வாதமான அந்த வீடு எப்படி பட்ட ஆசீர்வதமான வீடாக இருக்கும் எண்ணிப் பாருங்கள் ஆண்டவர் நம்மை பயன்படுத்த முடியாமல் இருப்பதற்கு காரணம் இதுதான் ஆண்டவர் என்னிடம் கூறியது அதுதான் தேவன் ஒரு மனிதனை பயன்படுத்த விரும்பினால் நாவை தான் பயன்படுத்துவார் பிசாசு ஒரு மனிதனை பயன்படுத்தினால் அது நாவை தான் பயன்படுத்தும் கடவுள் ஒரு மனிதனை பயன்படுத்தும் போது பரலோகத்தில் இருந்து ஒரு நெருப்பு அந்த நாவில் வருகிறது அப்போது தான் அவன் பேசிய வார்த்தை கடவுள் பேசியது போல இருதயத்தை தொடவும் அதேபோல பிசாசு ஒரு மனிதனை பயன்படுத்தி தான் நரகத்திலிருந்து நெருப்பு அந்த நாவுக்கு வரும் இது அநேகம் பேர் அறியாமல் இருக்கிறார்கள் நரகத்திலிருந்து ஒரு நெருப்பு நாவுக்கு வருகிறதே நான் ஒரு முறை

பார்த்திருக்கிறேன் அதன் பிறகு அவர்கள் தீமை செய்பவர்களாக மாறிவிடுகிறார்கள் அது அவர்களுக்கு தெரியாது ஏன் அப்படி பேசினார் கள் என்பது கூட அவர்களுக்கு தெரியாது நரகத்தில் இருந்து ஒரு நெருப்பு அவர்கள் நாவில் வந்ததது கூட அவர்களுக்கு தெரியாது

நாவும் தீயைப் போன்றதுதான். நெறிகெட்ட உலகின் உருவே அது. நம்முடைய உறுப்புகளுள் ஒன்றாக அமைந்திருக்கும் இந்த நா நம் உடல் முழுவதையும் கறைப்படுத்துகிறது. அது நம் வாழ்க்கைச் சக்கரம் முழுவதையும் எரித்துவிடுகிறது; எரிப்பதற்கான நெருப்பை நரகத்திலிருந்தே பெறுகிறது. யாக்கோபு 3:6

ஒரு பிச்சைக்காரன் ஒரு அழகான பாத்திரத்தை பயன்படுத்திக் கொண்டு வருகிறான் ஒரு நாள் உங்கள் வீட்டின் வாசலில்

வைத்துவிட்டு அவன் மறித்து போய் விட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள் எத்தனை பேர் அந்த பாத்திரத்தை எடுத்து பயன்படுத்துவீர்கள் நீங்கள் சொல்வீர்கள் ஐயோ அந்த பாத்திரம் எனக்கு வேண்டாம் என்று ஒரு பிச்சைக்காரன் பயன்படுத்திய பாத்திரத்தையே உங்களுக்கு பயன்படுத்த விருப்பம் இல்லை என்கிறீர்களே பிசாசு பயன்படுத்திக் கொண்டிருக்கிற ஒரு பாத்திரத்தை தேவன் எப்படி பயன்படுத்துவார்? யோசித்துப் பாருங்கள் பிள்ளைகள் இடத்திலேயே தேவன் பெற்றோரை பயன்படுத்த விரும்புகிறார். ஆனால் பெற்றோர்கள் அநேக நேரத்தில் பிசாசால் பயன்படுத்துகிறார்கள் பிள்ளைகள் மத்தியில் தேவன் பெற்றோரே பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது இந்த நாவு சரியில்லாததால் பயன்னில்லாதவைகளை பேசி பேசி அநேக குடும்பங்களில் சண்டை சச்சரவுகள் சண்டைகள் ஓயாத குடும்பங்கள் எத்தனை பல குடும்பங்களில் இன்றைக்கு ஓயாத சண்டை ஒரு மாதம் இந்த மாதத்தில் எத்தனை பேர் சண்டை போடாதவர்கள்

எத்தனை பேரால் சொல்ல முடியும் இந்த மாதம் முழுவதும் நான் சண்டை போடவில்லை யாரிடம் பிரச்சினை பண்ண வில்லை என்று அதற்குக் காரணம் என்ன வார்த்தைகள் தவறான கடினமான வார்த்தைகள் பெற்றோர்கள் இப்படி கடினமான தாறுமான வார்த்தைகள் பேசும் போது பிள்ளைகள் கேட்டுக் கொண்டே இருக்கும் கொஞ்சம் வயதான பிறகு அதே வார்த்தைகளை உங்களிடம் பேசும் அப்போது அநேக பெற்றோர்கள் அழுகிறார்கள் ஐயோ என் பையன் இப்படி பேசி விட்டான் என்று என் மகள் என்னை இப்படி பேசி விட்டாள் என்று இதற்கெல்லாம் யார் காரணம் இந்த வார்த்தைகள் எல்லாம் பேச வேண்டும் என்று கற்றுக் கொடுத்தது யார் நல்ல வார்த்தைகளை கற்றுக் கொடுங்கள் நல்ல வார்த்தைகளை வீட்டில் பேசுங்கள்

விவிலியம் சொல்கிறது பயனில்லாத வார்த்தைகளை நீக்கி பயனுள்ள வார்த்தைகளை பேசுங்கள் என்று ஆண்டவரே இயேசு கிறிஸ்து இந்த பூமியில் இருந்த போது

பிசாசு அவரை சோதிப்பதற்கு செய்த முக்கியமான காரணம் பரிசேய்கள் எல்லாம் சேர்ந்து என்ன செய்வார்கள் தெரியுமா

பரிசேயர் இயேசுவை அவருடைய பேச்சில் சிக்கவைக்க ஏரோதியர் சிலரை அவரிடம் அனுப்பி வைத்தனர். மாற்கு 12:13

பரிசேயர்கள் இயேசுவை அவருடைய பேச்சில் சிக்க வைக்க ஏரோவதியர் சிலரை அவரிடம் அனுப்பினார் எதற்காக அனுப்பினார்கள் இயேசுவே சிக்க வைப்பதற்கு எதிலை சிக்க வைப்பதற்கு அவருடைய பேச்சிலே சிக்க வைப்பதற்கு அவரை சோதிப்பதற்கவே அவரிடம் பல கேள்விகளை கேட்டார்கள் எப்படியாவது அவர் பேசிய மாட்டிக்கொள்ள வேண்டும் ஆனால் அவர்கள் பேசும்போது இயேசு உடனே பதில் சொல்வதில்லை அவர்கள் திரும்பத் திரும்ப கேட்பார்கள் செசாருக்கு இருக்கு வரி செலுத்துவது முறையா என்று கேட்பார்கள் அவர் உடனடியாக பதில் சொல்ல மாட்டார் திரும்பத் திரும்ப கேட்பார்கள் ஆனால் அவர் பரிசுத்த ஆவியார் கொடுக்கிற ஒரு வார்த்தையை பேசுவார் அந்த நாணந்தினுடைய எழுத்தும் உருவமும் யாருடையது என்று கேட்பார்கள் அவர்கள் செசாருடையது என்பார்கள் அப்போது இயேசு செசாருடையது செசாருக்குஇருக்கு கடவுளுக்குரியது கடவுளுக்கும் கொடுங்கள் என்பார் விபச்சாரத்தில் கையும் களவுமாக பிடிபட்ட பெண்ணை கொண்டு வந்து மோசே அந்த

பெண்ணை கல்லால் எரிய வேண்டும் என்று சொல்வார் நீர் என்ன சொல்கிறீர் என்று சொன்னார் கள் எப்படியாவது அவரை சிக்க வைக்க வேண்டும் என்று கொஞ்சம் அவரை எப்படி அது வீணான வார்த்தைகள் பேச வைத்து விட வேண்டும் பல நேரங்களில் இப்படி அவரை சோதிக்கிறார்கள் நீங்களும் கூட சில நேரங்களில் அமைதியாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் போது சோதிக்கக் கூடிய அநேகர் உண்டு

சோதனைகள் மத்தியில் நான் அமைதி காக்க கற்றுக்கொள்ள தேவையான வார்த்தைகளை பேச கற்றுக் கொள்ள வேண்டும்

இந்த வார்த்தையினால் எத்தனை குடும்பங்கள் சமாதானம் இல்லை உறவுகளில் விரிசல் பிரச்சனைகள் அநேக உறவுகள் இதனால் உடைந்து போகிறது ஒருவரை ஒருவர் எதிர்க்கிறவர்கள் அல்ல வார்த்தைகள் பேசத்தெரியாத வார்த்தைகள் அந்த வார்த்தைகளினால் அநேக குடும்பங்கள் சிதறி போயிருக்கின்றன இந்த வார்த்தையினால் எத்தனையோ பேர் சாப்பிடாமல் கிடைக்கின்றனர் கடினமான வார்த்தை நாள் எத்தனையோ பேர் இரவு நேரங்களில்

தூங்க முடியாமல் கிடக்கிறார்கள் ஆகையால் ஆண்டவர் சொல்லுகிறார் பயனில்லாதவைகளை நீக்கி பயனுள்ளவை பேசினால் என்னுடைய வாயாக இருப்பாய்என்று உங்கள் வாய் தேவனுடைய வாயாக மாறி விடும் அவர் உங்கள் வாயை பயன்படுத்தி பேச ஆரம்பிப்பார்கள் அது அநேக மக்களுக்கு ஆசீர்வாதமாக மாறும் முதலாவது உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறும்

பரத்தைமை, அனைத்து ஒழுக்கக்கேடுகள், பேராசை ஆகியவற்றின் பெயர் கூட உங்களிடையே சொல்லப்படலாகாது. இதுவே இறைமக்களுக்கு ஏற்ற நடத்தை. அவ்வாறே, வெட்கங்கெட்ட செயல், மடத்தனமான பேச்சு, பகடி பண்ணுதல் ஆகியவை தகாதவை; நன்றி சொல்லுதலே தகும். எபேசியர் 5:3-4

கடவுளுடைய பிள்ளைகள் எப்படி பேசுவது அதைத்தான் வேதம் சொல்கிறது திருபாடலில் என்ன சொல்கிறது ஆவிக்குரிய பாடல்கள் நிறை வார்த்தைகள் இவைகளைக் கொண்டு ஒருவருக்கொருவர் உரையாடுங்கள் ஆவிக்குரிய உரையாடல்கள் நன்றி சொல்லுவது தேவ பிள்ளைகளுக்கு தகும் குறிப்பாக உன்னுடன் பேச்சில் எது இடம் பெறணுமாம் தெரு பாடல்கள் இடம் பெறணுமாம் கடவுளுடைய வார்த்தைகள் இடம்பெறனுமாம் இல்லாதவர்களை நீக்க இப்படிப்பட்ட பாவங்களின் பெயர் கூட உங்கள் கிடை சொல்லக்கூடாது இதுவே இறை மக்களுக்கு ஏற்ற நடத்தை தேவ பிள்ளைகளுக்கு கடவுளுடைய பிள்ளைகளுக்கு ஏற்ற நடத்தை என்ன நம்முடைய வாயில் வரக்கூடாது மடத்தனமான விவாதங்கள் இன்று குடும்பங்கள் இடையே அவர் சொல்கிறார் நான்கு பேர் சேர்ந்து விட்டால் ஒருவரை மன நோகிற அளவுக்கு பேசுறது பகடி பண்றது ஆகியவை தகாதவை தேவபிள்ளைகளுக்கு அது தகாதவை நன்றி சொல்வதிலே தகும்

[பைபிளில் இதை சொல்லி இருக்கிறது என்று சொல்லுங்கள் திருப்பாடலில் இப்படி சொல்லி இருக்கிறது என்று சொல்லுங்கள் இன்றைய வார்த்தையை கொண்டு ஒருவருக்கொருவர் பேசுங்கள் அப்படி பேசுவீர்கள் ஆனால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்பீர்கள் உங்கள் வார்த்தையை கேட்கிறவர்களும் ஆசிர்வதிக்கப்படுவார்கள் இந்த வார்த்தைகளால் எவ்வளவு தவறு செய்து இருக்கிறோம் என்று யோசித்துப் பாருங்கள் இன்று இன்று மன வருத்தங்கள் மன்னிப்பு கேளுங்கள் கடவுள் ஒவ்வொருத்தரையும் பயன்படுத்த விரும்புகிறார். ஆனால் நல்ல வார்த்தைகளை பேசணும் தீமையான வார்த்தைகளை பேசாமல் இருப்பவர்களை ஆண்டவர் பயன்படுத்த செய்கிறார் அவர்களைத்தான் இந்த பூமியில் ஆசீர்வாதமாக வைப்பார் ஆண்டவர் சொன்னதும் அதுதான் அதை செய்து கொண்டு வருபவரும் அவர்தான் யார் தன்னுடைய வார்த்தைகளை தூய்மையாக

இருக்கிறார்களோ அவர்களை தான் ஆண்டவர் பயன்படுத்துவார் நிறைய பேர் அதை கண்டுபிடிக்கவும் இல்லை கடைபிடிக்கவும் இல்லை அதனால் தேவனால் பயன்படுத்த முடியாமல் போகிறது பொதுநிலையினராய் இருந்தாலும் சரி குருக்களாய் இருந்தாலும் சரி தன்னுடைய வார்த்தைகளுக்கு கீழ்படியாமல் இருப்பவர்களை கடவுள் பயன்படுத்துவதில்லை இன்று உங்களை ஆராய்ந்து பாருங்கள் உங்களுடைய வார்த்தைகள் தேவனுக்கு உகந்ததாய் இருக்கிறதா அல்லது வேறு விதமாக இருப்பதா இருந்தால் இன்றைக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் பல வார்த்தைகளை பேசிக்கொண்டே இருக்கலாம் என்ன பிரயோஜனம் ஒருவருக்கொருவர் பக்தி விருத்தியா இருங்கள் ஒருவருக்கொருவர் விசுவாசத்தை கொண்டு வாருங்கள் ஒருவருக்கு ஊக்கப்படுத்துவதாயிருக்கும் ஆண்டவருடைய நாள் நெருங்கி வருவதால் ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்துங்கள் இந்த வேலையை செய்யாமல் அநேக நேரம் சண்டை சச்சரவுகளை கொண்டு வருவதாக இருந்தால் மனம் மாறுவோம் இன்றாவது ஒரு ஆசிர்வதமான வாழ்க்கைக்குள் நுழைவோம்.

இயேசு தீர்ப்பிடவில்லை

தேவனுக்கு மகிமை உண்டாவதாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் உங்களுக்கு வாழ்த்துக்கள். இங்கு நாம் தியானிக்க இருக்கும் பகுதி யோவான் அதிகாரம் 8 இறை வார்த்தைகள் 1 முதல் 11 வரை (இயேசு ஒலிவ மலைக்குச் சென்றார். பொழுது விடிந்ததும் அவர் மீண்டும் கோவிலுக்கு வந்தார்.அப்போது மக்கள் அனைவரும் அவரிடம் வந்தனர் அவரும் அங்கு அமர்ந்து அவர்களுக்குக் கற்பித்தார்.மறைநூல் அறிஞரும் பரிசேயரும் விபச்சாரத்தில் பிடிப்பட்ட ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து நடுவில் நிறுத்தி “போதகரே இப்பெண் விபச்சாரத்தில் கையும் நெய்யுமாக பிடிபட்டவள் இப்படிப்பட்டவர்களை கல்லால் எரிந்து கொள்ள வேண்டும் என்பது மோசே நமக்கு கொடுத்த திருச்சட்டத்தில் உள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்?” என்று கேட்டனர்.அவர் மேல் குற்றம் சுமத்த ஏதாவது வேண்டும் என்பதற்காக அவர்கள் இவ்வாறு கேட்டு சோதித்தார்கள். இயேசு குனிந்து விரலால் தரையில் எழுதிக் கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் அவரை விடாமல் கேட்டுக் கொண்டிருந்ததால் அவர் நிமிர்ந்து பார்த்து “உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்” என்று அவர்களிடம் கூறினார் மீண்டும் குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார். அவர் சொன்னதைக் கேட்டதும் முதியோர் தொடங்கி ஒருவர் பின் ஒருவராக அவர்கள் யாவரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். இறுதியாக இயேசு மட்டும் அங்கு இருந்தார் அப்பென்னும் அங்கேயே

நின்று கொண்டிருந்தார். இயேசு நிமிர்ந்து பார்த்து “அம்மா அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா?”என்று கேட்டார். அவர் இல்லை ஐயா என்றார். இயேசு அவரிடம் “நானும் தீர்ப்பு அளிக்கவில்லை நீர் போகலாம் இனிப்பாவம் செய்யாதீர்” என்றார். இங்கு 7வது வசனத்தை நாம் வாசிக்கும் போது அவர்கள் அவரை விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அவர் நிமிர்ந்து பார்த்து “உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எரியட்டும்” என்று சொன்னார். 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஆண்டவர் இயேசு இந்த வார்த்தையை சொல்லிவிட்டார் “உங்களுள் பாவம் இல்லாதவர் முதலிலே கல்யட்டும்” என்று. அநேக நேரங்களிலே மற்றவர்களை குற்றப்படுத்தி, மற்றவர்களின் குறைகளை பேசி நாம் பழகிப் போனோம் ஆனால் இப்படி பேசுகிறவர்களுக்குத்தான் ஆண்டவர் சொல்லுகிறார் முதலில் “உங்களில் பாவம் இல்லாதவன் அந்த முதல் கல்லை எறியட்டும்”. அடுத்தவர்களை குற்றம் தீர்க்க, பேச நாம் பல காரியங்களை கண்டுபிடிக்கிறோம் ஆனால் நம்முடைய வாழ்க்கையிலே இருக்கக்கூடிய குறைகளையோ,பாவங்களையோ கண்டுபிடிக்கவும் பேசவும் மறுத்துவிடுகிறோம். இதுதான் நிறைய பேர் செய்யக்கூடிய தவறுகள் உங்கள் வீட்டில் கூட இருக்கிறவர்கள் மனைவி அல்லது கணவன் அல்லது பிள்ளைகள் அல்லது உறவினர்கள் அவர்களிடத்திலே ஒரு குற்றத்தை பார்த்து வாயாலே அதை பேசுவதற்கு முன்பாக நம்மிடத்திலே குற்றம் இல்லையா?என்று யோசிக்க ஆரம்பித்து விட்டோமென்றால் மற்றவர்களுடைய குற்றத்தை நாம் பெரிதுபடுத்தி பேச மாட்டோம்.இங்கே இந்த பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் இயேசுவை ஏதாவது குற்றத்தில் அகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு வந்தார்கள். மோசேயினுடைய சட்டம் அவளை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்று சொல்கிறது. நீர் என்ன சொல்கிறீர்? என்று கேட்டார்கள். ஆண்டவர் இயேசு ஒருவேளை எறிய வேண்டும் என்று சொல்லிவிட்டால், இவர் அன்பு அன்பு என்று சொல்கிறாரே, மற்றவர்களை மன்னிக்க வேண்டும் என்று சொல்கிறாரே அப்புறம் எப்படி கல்லால் எறிய சொல்கிறார்? என்று கேட்பார்கள். வேண்டாம் என்று சொல்லிவிட்டால் மோசேயினுடைய கட்டளையை அவர் மீறிவிட்டார் என்று பழி சுமத்துவார்கள். இப்படி பழி சுமத்துவதற்காகவேத்தான் அந்தப் பெண்ணை அவர்கள் அழைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். இயேசுவை விடாமல் இந்த கேள்வியை கேட்டுக் கொண்டே இருந்தார்கள். ஆனால் ஆண்டவர் இயேசுவோ உங்களுள் பாவம் இல்லாதவன் முதல் கல்லை எறியட்டும் என்றார். இந்த வார்த்தைகளை கேட்ட பரிசேயர் மற்றும் மறைநூல் அறிஞர்களுக்குள்ளும் இந்த வார்த்தை அவர்களுக்குள்ளே திரும்பத் திரும்ப ஒலிக்க ஆரம்பித்தது. தங்களுடைய வாழ்வை யோசித்துப் பார்த்தார்கள் நம்மிடத்தில் பாவங்கள் இல்லையா? என்று அவர்கள்

கேள்வி கேட்க கேட்க அவர்களுடைய பாவங்கள் அனைத்தும் அவர்கள் கண்களுக்கு முன்பாக வந்தது. ஆகையினால் பெரியவர் முதல் சிறியோர் வரை அனைவரும் கற்களை கீழே போட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்று விட்டார்கள். இந்த வார்த்தையை கேட்டவுடன் என்ன நடந்தது?. இந்த கல்லை எறிய நான் தகுதியற்றவன் என்று அவர்களுடைய உள்ளத்திலே அந்த வார்த்தை உணர்த்தியது. இறை வார்த்தைகள் எப்பொழுதுமே நம்முடைய தகுதியற்ற நிலைமையை, நம்முடைய தவறுகளை சுட்டிக் காண்பிக்க கூடியதாக இருக்கிறது. அவர்கள் தங்களுடைய உள்ளம் குத்தப்பட்டவர்களாக இந்தக் கல்லை தூக்குவதற்கு நான் தகுதியற்றவன் என்று எண்ணி அந்த கல்லை கீழே போட்டு விட்டார்கள் . ஆனால் இன்றைக்கும் நிறைய பேர் 2000ம் ஆண்டுகள் ஆனால் கூட அந்த கல்லை கீழே போடாமல் வைத்துக் கொண்டிருக்கிற நிறைய பேர் நம்மிடையே இருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே தேவன் அதை விரும்பவில்லை மற்றவர்களை குறை பேசுகின்ற அந்த பழக்கத்தை கடவுள் விரும்பவில்லை இதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் குறை சொல்லிக் கொண்டே வாழ்வதை ஆண்டவர் விரும்பவில்லை. குறைகள் மற்றவர்களிடத்திலேயே காணப்படுமானால் ஆண்டவருடைய சமூகத்திலே சென்று ஜெபியுங்கள். அதை தான் நாம் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு நாம் குறை சொல்பவர்களாக இருக்கக் கூடாது. ஈசாக்கின் மனைவி ரெபேக்காளுக்கு குழந்தை இல்லை ஈசாக்கு என்ன செய்தார் ஆண்டவருடைய சமூகத்திலே சென்று ஜெபம் செய்தார். அப்படி ஜெபம் செய்த உடனே ரெபேக்காள் கர்ப்பவதியானாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தது. அந்தக் குழந்தைகள் தாயின் கருவிலேயே ஒருவருக்கொருவர் முட்டி மோதி சண்டை போட்டுக் கொண்டது. ரெபேக்காள் என்ன செய்கிறாள் இந்த காரியத்தை திரும்பவும் தேவனிடத்திலே கொண்டு போகிறாள். அப்போது ஆண்டவர் இந்த பிள்ளைகளுடைய எதிர்காலத்தை குறித்து ரெபேக்காளிடத்திலே பேசினார். தேவனுக்கே மகிமை அல்லேலூயா குறைகள் இல்லாத மனிதர்கள் இல்லை. எல்லாரிடத்திலும் குறைகள் உண்டு ஆனால் எந்த குறைகளையும் நிறைவாக்கக்கூடிய ஒருவர் உண்டு. அவர்தான் ஆண்டவராகிய இயேசு அவரிடத்தில் தான் நாம் பிரச்சனைகளை கொண்டு செல்ல வேண்டுமே தவிர மற்றவர்களை குறை சொல்லியே நாம் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடாது. மற்றவர்களை நாம் குறை சொல்வதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால் நம்முடைய குறைகளை நாம் சரியாக இன்னும் அறிந்து கொள்ளவில்லை. இங்கு நாம் பார்க்கிறோம் பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் அந்தப் பெண்ணை குற்றம் சுமத்தி கொள்ள வேண்டும் என்று கற்களை கையிலே எடுத்து நின்றார்கள். அவளை தீர்ப்பிடுவதற்கு தயாராக இருந்தார்கள் ஆனால் தங்களிடத்திலே இருக்கின்ற குறைகளை, குற்றங்களை அவர்கள் பார்க்கவே

இல்லை. இதே போன்று தான் இன்று நிறைய பேர் இருக்கிறோம் ஏன் அடுத்தவர்களுடைய குற்றங்களை நாம் பெரிதுபடுத்தி பேசிக் கொண்டிருக்கிறோமென்றால் நம்முடைய குறைகளை இன்னும் நாம் அறிந்து கொள்ளவில்லை ஆகையால்தான் நாம் மற்றவர்களுடைய குறைகளை பேசிக் கொண்டிருக்கிறோம். அப்படியே மற்றவர்களுடைய குறைகளை பேசுகிறவர்கள் இன்னும் தேவ சமூகத்திற்குள் நுழையவில்லை. தேவ சமூகத்திலே நுழையும் போது மற்றவர்களுடைய குறைகள் நம்முடைய கண்களுக்கு தெரியாது. நம்முடைய குறைகள் மாத்திரம் நமக்கு தெரியும். ஆண்டவருடைய சமூகத்தை விட்டும் அவருடைய பிரசன்னத்தை விட்டும் நாம் வெளியே வந்து விட்டோமென்றால் மற்றவர்களுடைய குறைகள் எல்லாம் நமக்கு பெரிதாக தெரிய ஆரம்பிக்கும். இன்று உங்கள் கண்களுக்கு மற்றவர்களின் குறைகள் அனைத்தும் தெரிகிறதென்றால் அதன் அர்த்தம் என்ன? சில மனிதருடன் நாம் பேசும் பொழுது எல்லா மனிதர்களையும் அவர்கள் குறை சொல்லுவார்கள். அப்படி சொல்கிறார்கள் என்றால் அவர்களுடைய மனம் சரியில்லை என்று பொருள். புதிய ஏற்பாட்டில் தீத்து 1 ம் அதிகாரத்தில் 15 வது வசனத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். (தூய்மையானவர்களுக்கு எல்லாம் தூய்மையை மாசு படிந்தமனதிற்கும் நம்பிக்கை கொண்டிடாதோருக்கும் எதுவுமே தூய்மையாய் இராது அவர்கள் மனமும் மனசான்றும்கூட மாசு படிந்தவை) கடவுளை அறிந்திருப்பதாக அவர்கள் அறிக்கை இடுகிறார்கள் ஆனால் அவர்களுடைய செயல்கள் அவரை மறுதலிக்கின்றன. அவர்கள் அருவருக்கத்தக்கவர்கள் கீழ்ப்படியாதவர்கள் எந்த நற்செயலையும் செய்ய தகுதியற்றவர்கள் என்று சொல்லப்படுகிறது. தூய்மையானவர்களுக்கு எல்லாம் தூய்மையே நம்முடைய மனம் தூய்மையாக இருந்தால் நம்முடைய பார்வையும் தூய்மையாக இருக்கும். மற்றவர்களை நாம் பார்க்கும் போது நல்ல சிந்தனையுடன் பார்ப்போம். தூய்மையானவர்களுக்கு எல்லாம் தூய்மையே, மாசு படிந்த மனதினருக்கும் விசுவாசத்தை இழந்தவர்களுக்கும் எதுவுமே தூய்மையாக இருக்காது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்களை நாம் அதிகமாக குறை பேசுகிறோம் என்றால் நம்முடைய மனதிலே மாசு படிந்திருக்கிறது. மற்றவர்களுடைய குறைகளையே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமென்றால் நம்முடைய மனதிலே மாசு படிந்து இருக்கிறது என்று பொருள். ஆகையினாலே மத்தேயு 7ம் அதிகாரம் 1 முதல் 3வசனங்களை வாசிக்கும் பொழுது மற்றவர்களை குற்றவாளி என்று கேட்கின்ற நீ அதே தீர்ப்புக்கு உள்ளாவாய் என்று சொல்கிறார். உன் கண்களில்இருக்கிற விட்டத்தை கவனிக்காமல் உன் சகோதரன் கண்களில் இருக்கிற துரும்பை கவனிக்கிறதென்ன? என்று அந்த வேத வசனம் கேட்கிறது நம்மை நாமே முதலில் தீர்ப்பிட்டு பார்க்க வேண்டும். நமக்குள் என்னென்ன குறைகள் இருக்கிறது என்று

பார்க்க வேண்டும். இதைத்தான் தூய ஆவியானவர் செய்கிறார் தூய ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் வரும் பொழுது அவர் மற்றவர்களுடைய பாவங்களை, அல்ல நம்முடைய பாவங்களை நமக்கு எடுத்துக்காட்டுகிறார். நம் வாழ்க்கையிலே நமக்குள்ள என்னென்ன பாவங்கள் இருக்கிறது, நாம் சரி செய்ய வேண்டிய பாவங்கள் எத்தனை இருக்கிறது என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறார். ஆனால் அசுத்த ஆவிகள் மற்றவர்களுடைய பாவங்கள் அனைத்தையும் நமக்கு சொல்லிக் காண்பித்துக் கொண்டிருக்கிறது. இதுதான் தூய ஆவிக்கும் அசுத்த ஆவிக்கும் உள்ள வித்தியாசம் தேவ சமூகத்திலே நாம் நுழையும் போது நம்முடைய குறைகள் அனைத்தும் நம் கண்களுக்கு தெரிய ஆரம்பிக்கிறது. சின்ன சின்ன குறைகள் கூட தெரிய ஆரம்பிக்கிறது. அவைகளை நாம் சரி செய்ய வேண்டும். பேதுருவை பாருங்கள் மிக பரிசுத்தமானவராக வாழ்ந்தார். மீட்பரை எதிர்பார்த்து காத்திருந்தார். ஒரு நாள் ஆண்டவர் இயேசு அவரை சந்திக்கிறார், இரவு முழுவதும் பாடுபட்டு மீன் ஒன்றும் கிடைக்காத நிலையில் ஆண்டவர் பேதுருவை சந்திக்கிறார். அப்பொழுது ஆண்டவர் ஆழத்திலே கொண்டு வலையை போடு என்று சொன்னவுடனே கீழ்ப்படிந்து போகிறார். பின்னர் பேதுரு இரவு முழுவதும் நான் பாடுபட்டு வலைகளை வீசினேன் ஆனாலும் ஒரு மீன் கூட அகப்படவில்லை, இப்பொழுது உம்முடைய வார்த்தையை நம்பி செல்கிறேன் என்று சொல்லி ஆழத்திலே வலைகளை வீசியவுடன் வலைகள் கிழிகின்ற அளவுக்கு மீன்கள் கிடைத்தது. பேதுருவாலே ஒன்று முடியவில்லை.பின்னர் அவர் ஆண்டவரின் பிரசன்னத்தை கண்டார். இயேசு சாதாரணமானவர் அல்ல, அவர் கடவுளின் மகனாக இருக்கிறார், மெசியாவாக இருக்கிறார், வரப் போகின்ற மீட்பராக இருக்கிறார், அவர் மிக தூய்மை உள்ளவராக இருக்கிறார் என்பதை கண்ட உடனே பேதுரு என்ன செய்தாரென்றால் இயேசுவின் காலடியில் விழுந்து ஆண்டவரே நான் பாவி என்னை விட்டு அகன்று விடும் என்று கூறினார்.நான் உம்மோடு இருக்க தகுதி இல்லாதவன் என்றார். பேதுரு இறை பிரசன்னத்தை உணர்ந்த உடனே அவருக்கு தன்னுடைய குறைகள்தான் பெரிதாக தெரிந்தது. அதுவரைக்கும் பேதுரு மற்றவர்கள் சரி இல்லை என்று சொல்லி இருந்திருப்பார். ஆனால் தேவப்பிரசன்னத்திற்குள் நுழைந்த உடனே மற்றவர்களின் பாவங்கள் நம் கண்களுக்கு முன்பாக வருவதில்லை நம்முடைய குறைகள் நம்முடைய தவறுகள் நம்முடைய கண்களுக்கு முன்பாக வந்து நிற்க ஆரம்பிக்கும். இதுதான் ஆண்டவரின் பிரசன்னத்தில் இருக்கிறவர்களுக்கும் அவருடைய பிரசன்னத்திற்கு வெளியிலே வாழ்கிறவர்களுக்கும் உள்ள வேறுபாடு. நீங்கள் உண்மையிலேயே பக்தி உள்ளவர்களாக இருப்பீர்களானால், இறை பிரசன்னத்திலே வாழக்கூடியவர்களாக இருப்பீர்களானால்முதலாவது உங்களுடைய குறைகள் உங்களுக்கு தெளிவாக தெரிய ஆரம்பிக்கும். அவ்வளவு எளிதாக மற்றவர்களை குறித்து குறை பேசிக்

கொண்டிருக்கமாட்டீர்கள். அது உங்களுக்கு முக்கியமான ஒன்றாக தெரியாது. உங்கள் குறைகள் தான் உங்கள் கண்களுக்கு முன்பாக மிகப்பெரியதாக தெரிய ஆரம்பிக்கும். ஆகையால் அதை சரி செய்வதற்காக தேவ சமூகத்திலே நின்று போராடுவீர்கள். ஆண்டவருடைய சமூகத்தை விட்டு வெளியே வாழ்கிறவர்களுக்கு தங்களுடைய குறைகள் ஒருபோதும் தெரிவதில்லை . அங்கே இயேசு கிறிஸ்துவுக்குள் வந்த பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் கற்களை தூக்கிக்கொண்டு வந்தாலும் கூட ஆண்டவர் இயேசு கூறிய அந்த ஒரு வார்த்தையினாலே அவர்கள் குத்தப்பட்டார்கள். அவர்களுடைய குறைகள் எல்லாம் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக வர ஆரம்பித்தது. அதுதான் இறை பிரசன்னம்,தேவப்பிரசன்னத்திற்குள் நுழைய நுழைய நம்முடைய குறைகள், நாம் எவ்வளவு நன்றி கெட்டவர்கள், நாம் எவ்வளவு தேவனுக்கு முன்பாக உண்மையற்றவர்களாக இருக்கிறோம், எவ்வளவு பொறுமை இழந்து போகிறோம் ,எவ்வளவு கோபப்படுகிறோம் , எவ்வளவு எளிதாக பாவத்திற்கு இலக்காகி விடுகிறோம் என்பதை இறை சமூகத்திற்குள் நுழைய நுழைய நாம் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறோம். அதுதான் நம்முடைய வாழ்க்கையை மாற்ற ஆரம்பிக்கிறது அப்படி இல்லை என்றால் நம்முடைய குறைகள் ஒன்றுமே நம்முடைய கண்களுக்கு தெரியாது. மற்றவர்கள் செய்கிற குறைகளை பார்த்துக்கொண்டு, பேசிக்கொண்டு நம்முடைய நாட்களை கழித்து விடுவோம். ஆனால் ஒரு நாள் நாம் தேவனை சந்திக்கும் பொழுது அது மிகக் கடினமாக, பரிதாபமாக நமக்கு முடிந்துவிடும். ஏசாயா என்கிற இறைவாக்கினர் கூட தேவ சமூகத்தை ஒரு நாள் சந்தித்தார். உயர்ந்த அரியணையில் ஆண்டவர் வீற்றிருப்பதை கண்டார். அந்த இறை பிரசன்னத்திற்குள்ளே நுழைந்தவுடன் அவருடைய குறைகள் அவருடைய கண்களுக்கு முன்பாக தெரிய ஆரம்பித்தது அவர் மற்றவர்களோடு பேசிய பொல்லாத வார்த்தைகள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. ஐயோ நான் அசுத்த உதடுள்ள மனிதன் என்று ஏசாயா இறைவாக்கினர் புலம்ப ஆரம்பிக்கிறார் . அதுதான் உண்மை தேவ சமூகத்திலே நாம் நெருங்கும் போது தான் நம்முடைய குறைகள் நமக்கு நன்றாக தெரிய ஆரம்பிக்கும். மற்றவர்களுடைய குறைகளை பேசி பேசி நமக்கு என்ன பலன்? இந்த குறைகளை திருத்துவதற்கு நாம் முயற்சி செய்கிறவர்களாக இருந்தால் நல்லது. அன்பினாலே திருத்துவதற்கு முயற்சி செய்வோம். அதை விட்டுவிட்டு ஒருவரின் பெயரைக் கெடுப்பதற்காக மற்றவர்களிடத்தில் குறை சொல்வது நல்லதல்ல. அநேக பெண்கள் தங்களின் கணவரை குறித்து குறையாக பேசுகிறார்கள்; உங்களோடு வாழ்ந்த கணவனையோ மனைவியையோ மன்னிக்க முடியாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்திலே நீங்கள் எப்படி நுழைய முடியும்? சிந்தித்துப் பாருங்கள். குறைகள் இருந்தாலும் கூட அந்த குறைகளையே பார்த்துக் கொண்டிருப்பீர்களானால் ஒரு

போதும் நீங்கள் நிம்மதியான வாழ்க்கை வாழ முடியாது. நாம் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமானால், தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டுமானால் மற்றவர்களை குறை சொல்லுகிற அந்த பாவத்திலிருந்து வெளியே வர வேண்டும். இது ஒரு வியாதியைப் போல அநேகரை பிடித்துக் கொள்கிறது. சில மனிதர்கள் அனைவரையும் குறை கூறுவார்கள். ஜெபிக்க கூடிய நீங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் மற்றவர்களை குறை சொல்லக்கூடாது என்ற தீர்மானத்தை நாம் எடுக்க வேண்டும். ஊழியக்காரர் ஒருவரிடம் ஒரு சகோதரி தன்னுடைய கணவரை பற்றி குறைகளை பேசினார். அந்த ஊழியக்காரரிடம் என் கணவர் ஆண்டவரிடத்தில் வருவதில்லை அவர் அப்படி செய்கிறார் இப்படி செய்கிறார் என்று கூறினார். நீங்கள் வந்து ஒருமுறை என் கணவரிடம் பேசுங்கள் என்று அந்த ஊழியக்காரரிடம் கூறினார். அந்த ஊழியக்காரரும் அவருடைய கணவரிடம் சென்று பேச ஆரம்பித்தார்; அந்த ஊழியக்காரர் அவரிடம் பேசும் பொழுது அவர் ஆண்டவரைவிட்டு வெகு தொலைவில் இல்லை ஆண்டவருடைய பிள்ளையாகத்தான் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டார். உண்மை என்னவென்றால் தன் கணவனை குறித்து குறைகளை பேசிய அந்தப் பெண்தான் மிக மோசமாக நடந்து கொள்பவளாக இருந்தாள். இப்படித்தான் இன்று நிறைய பேர் இருக்கிறார்கள் தங்கள் மேல் நிறைய குறைகளை வைத்துக்கொண்டு மற்றவர்களை குறை சொல்லுகிற பழக்கம் அதுவும் ஜெபிக்கிறவர்களிடத்திலே வந்து குறை சொல்கிற பழக்கம் மிக அதிகமாகி போய்விட்டது. அன்று அந்த ஊழியக்காரர் தெரிந்து கொண்டார் குடும்பத்தில் உள்ளவர்களை அன்பில்லாமல் அவர்களுடைய குறைகளை வெளியே சொல்லுகின்றவர்கள் வீட்டிலேயே எவ்வளவு மோசமாக நடக்கின்றார்கள் என்பதை புரிந்து கொண்டார். எனவேதான் ஆண்டவர் கூறுகிறார் உங்களுள் பாவம் இல்லாதவர் முதல் கல்லை எறியட்டும். குறை சொல்வதற்கு யாருக்கு தகுதி இருக்கிறது சிந்தித்துப் பாருங்கள் ஆண்டவர் ஒருவருக்கு தான் அந்த தகுதி இருக்கிறது. வேறு யாரும் குறை சொல்வதற்கு தகுதியுடையவர்கள் அல்ல உரோமையர் 3ம் அதிகாரம் 23ஆம் வசனத்தை நாம் வாசிக்கும் பொழுது (அனைவரும் பாவம் செய்து கடவுளுடைய மகிமையை இழந்து போனார்கள் என்று எழுதி இருக்கிறது நீதிமான் ஒருவர் கூட இல்லை) இப்படி இருக்கும் பொழுது யார் மற்றவர்களை குறை சொல்ல இயலும்? யார் மற்றவர்களை திருப்பிட முடியும்?ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டும்தான் மற்றவர்களை தீர்ப்பிட முடியும். அவர் ஒருவர் தான் நீதிமான், அவர் ஒருவர் தான் பாவமே அறியாதவர், அவர் மட்டும்தான் மனிதர்களை தீர்ப்பிட அதிகாரம் உள்ளவர். ஆனால் அவர் என்ன சொல்கிறார் “நானும் உன்னை தீர்ப்பிட மாட்டேன் இனி பாவம் செய்யாதே”என்று சொல்லி அனுப்புகிறார். தீர்ப்பிட அதிகாரம் உள்ளவர் கூட தீர்ப்பிட விரும்பவில்லை

மாறாக இனி பாவம் செய்யாதே என்று சொல்லி அனுப்புகிறார் ஆனால் நாம் மற்றவர்களை தீர்ப்பிடுகிறோம், குறை பேசி விடுகிறோம், மற்றவர்களுடைய நல்ல பெயரை கெடுத்து விடுகிறோம் இது கடவுளுக்கு உகந்த காரியம் அல்ல. சிந்தித்துப் பாருங்கள் எவ்வளவு குறைகளை நாம் பேசி இருப்போம். கொரோனா ஊரடங்கில் நாம் எவ்வளவு குறைகளை பேசி இருப்போம் என்று சிந்தித்துப் பாருங்கள். குறைகள் இல்லை என்று சொல்லவில்லை குறைகள் இருக்கிறதுதான் ஆனால் அதைக் குறித்து நாம் எவ்வளவு பேசுகிறோம், எவ்வளவு ஜெபிக்கிறோம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். ஒரு மனிதரிடத்திலே ஒரு குறையை காணும் பொழுது அந்தக் குறைகளை மாற்றக் கூடியவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துமட்டும்தான். ஆமென், அல்லேலூயா. ஒருவரிடத்தில்குறைகளை காணும் போது நாம் என்ன செய்ய வேண்டும் நாம் ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். 1 சாமுவேல் 15 வது அதிகாரத்தில் சாமுவேல் என்கிற இறைவாக்கினர் இருந்தார். ஜனங்கள் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டும் என்று கேட்டதினாலே சவுலை இஸ்ரவேல் தேசத்திற்கு ஆண்டவர் அரசன் ஆக்கினார். சவுல் அரசனை ஆண்டவர் சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலமாக சொல்லி அனுப்பினார் அமலேக்ககியரை அழித்துவிடு அங்கு பாவம் மிகுதியாகிவிட்டது, அதிலுள்ள எதையும் எடுக்காதீர்கள் என்று சொல்லி அனுப்பினார். ஆனால் சவுல் அரசனோ ஆண்டவருடைய கட்டளைக்கு முழுவதும் கீழ்ப்படியாமல் ஆடு மாடுகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு வந்து விட்டார். அன்று இரவு ஆண்டவர் சாமுவேல் இறைவாக்கினரிடத்தில் “சவுலை நான் அரசனாக்கியதற்காக வருந்துகிறேன்;ஏனென்றால் என் விருப்பப்படி அவன் செய்யவில்லை” என்று கூறினார். நம்மிடத்தில் இப்படி கூறியிருந்தால் ஆண்டவரே இவ்வாறு கூறிவிட்டார் அவர் மிகவும் மோசம் என்று சொல்லி இருப்போம். ஆனால் இந்த சாமுவேல் இறைவாக்கினர் என்ன செய்தாரென்றால் இரவு முழுவதும் சவுலை மன்னிக்க வேண்டும் என்று ஆண்டவருடைய சமூகத்திலே மன்றாடினார். சாமுவேலை ஆண்டவர் தீர்க்கதரிசியாக வைத்திருந்ததற்கு காரணமும் இதுதான். சிந்தித்துப் பாருங்கள் நம்முடைய குடும்பத்திலே சில மனிதர்களிடத்தில் நாம் குறைகளை காண்போமேயானால் தேவ சமூகத்தில் நில்லுங்கள். மற்றவர்களிடத்திலும் கூட நாம் குறைகளை காண்போமானால் ஆண்டவரே இந்த பாவங்களை மன்னியும் என்று சொல்லி அவரிடத்திலே ஜெபிக்கிறவர்களாக இருங்கள். நாம் அவர்களை திருத்துவதற்கு முயற்சி செய்யலாம்; அது நல்லது தான் ஆனால் மற்றவர்களை குறை பேசுவது என்பது அன்பில்லாமல், திருத்துவதற்கு முகாந்திரமில்லாமல் நாம் குறைகளைப் பேசிக் கொண்டிருப்போமேயானால் அது கடவுளுக்கு உகந்ததல்ல. திருத்துவதற்காக அல்லது திருத்தப்படுவதற்காக ஒரு சில குறைகளை நாம் கூறலாம். ஆனாலும் அதைவிட மேன்மையானது தேவ சமூகத்திலே அவர்களுக்காக ஜெபிப்பது.

பாவம் கடவுளுக்கும், அவர்களுக்கும் இடையே ஒரு பிளவை உண்டாக்குகிறது. அப்படிப்பட்ட காரியங்களை செய்யக்கூடியவர்களுக்காக நாம் தேவ சமூகத்திலே ஜெபிக்க வேண்டும், ஆண்டவருடைய மன்னிப்பை அவர்களுக்காக கேட்க வேண்டும், சூழ்நிலைகள் மாறும் படி நாம் ஜெபிக்க வேண்டும். பாவத்திலிருந்து அவர்கள் விடுதலை பெற வேண்டும், அவர்களுடைய உண்மையான ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட வேண்டும், அவர்களுடைய தவறை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும். அதுதான் மிகச் சிறந்தது அப்படி செய்யும் பொழுது கடவுளுடைய ஆசீர்வாதம் நம்முடைய வாழ்க்கையிலே வரும் அதுதான் நாம் அவர்களை மன்னித்திருக்கிறோம் என்பதன் அடையாளம். மன்னிக்காதவர்கள் குறைகளை பேசிக் கொண்டிருப்பார்கள், மன்னித்தவர்கள் அதை விட்டுவிடுவார்கள் அதன் பிறகு அதைக் குறித்து அவர்கள் பேசுவதில்லை முடிந்தால் அவர்கள் திருந்துவதற்கு என்ன வழி என்று சிந்திப்பார்கள். மன்னிக்கும் போது தான் தேவனுடைய ஆசிர்வாதங்களை நாம் நிறைவாக பெற முடியும். நான் அனைவரிடமும் பேசிக்கொள்வேன் என்று நிறைய பேர் கூறுவார்கள் அவர்கள் இருக்கும்போது நன்றாக பேசுவார்கள், ஆனால் அவர்கள் இல்லாத நேரத்தில் அவர்களைப் பற்றி ஏராளமாக குறை கூறுவார்கள் இப்படித்தான் மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத்தான் ஆண்டவர் சொல்கிறார்" உங்களுள் பாவம் இல்லாதவன் முதல் கல்லை எறியட்டும்". நம்முடைய உள்ளத்தை இன்றைக்கு ஆராய்ந்து பார்ப்போம். ஆண்டவருடைய சமூகத்திலே நம்மை ஒப்புக் கொடுப்போம் இனி வரும் நாட்களில் குறை பேசாமல் இருக்க வேண்டும் என்று நாம் ஒப்புக்கொடுப்போம். பாப்பரசர் கூட லெந்து நாட்கள் தொடங்கும் முன்பாக இதைத்தான் கூறினார். இந்த லெந்து நாட்கள் முழுவதும் யாரையும் குறை பேசக்கூடாது என்று. அதற்கு அவர் ஒரு வழியை கூட கூறினார் என்னவென்றால் யாரையாவது உங்களுக்கு குறை பேச வேண்டுமென்று தோன்றினால் அவர்களுக்காக ஜெபியுங்கள் அதுதான் நல்லது அதையும் மீறி குறை பேசினால் நறுக்கென்று உங்கள் நாக்கை கடித்து விடுங்கள். இது மிகவும் பயன்தரக்கூடியது இவ்வாறு கடித்து விட்டோமென்றால் குறைகளை பேச மாட்டோம். நாம் இவ்வாறெல்லாம் செய்ய வேண்டாம் ஆனாலும் நம்முடைய நாவை கட்டுப்படுத்தி குறை பேசுவதை மாற்றிக் கொள்ளலாம். அதன் மூலமாக நிறைய ஆசிர்வாதங்கள் நமக்கும், நம் குடும்பங்களுக்கும் கிடைக்கும். இந்த நாளிலே நாவடக்கத்திற்காக ஒப்புக்கொடுப்போம். ஆண்டவரே நானே தகுதி இல்லாதவன் ஆனால் அநேக நேரங்களில் மற்றவர்களை குறை பேசிவிடுகிறேன், அதற்கு நான் தகுதியானவன் அல்ல என்னை மன்னியும் இனி நான் அப்படி பேச மாட்டேன் என்று ஒப்புக் கொடுப்போம்.

ஆண்டவரிடத்திலே நம்மை ஒப்புக் கொடுப்போம், நம்முடைய தவறுகளை ஒப்புக்கொடுப்போம். “உங்களில் பாவம் செய்யாதவன் முதல் கல்லை எறியட்டும்”என்று ஆண்டவர் இன்றும் கூறுகிறார்.

ஜெபிப்போம்

அன்புள்ள பரலோக பிதாவே அநேக நேரங்களில் உம்முடைய வார்த்தைகளை மறந்து, எங்களுடைய குற்றங்களையும்,குறைகளையும் மறந்து துணிகரமாய் மற்றவர்களை குறை பேசி விடுகிறோம். இந்த பாவங்களுக்காக எங்களை மன்னியும். எத்தனையோ முறை மற்றவர்களை குறை பேசி, மற்றவர்களை நியாயம் தீர்த்துவிடுகிறோம். தயவாய் எங்களை மன்னியும். உமக்கு முன்பாக நாங்கள் உண்மையுள்ளவர்களாக இருந்திருந்தால் நீர் எங்களை ஆசீர்வதித்திருப்பீர். நாங்கள் இருக்குமிடத்தில் புனிதர்கள் இருந்திருந்தால் வீட்டில் அனைவருமே மனம் திரும்பி இருப்பார்களே அந்த அளவிற்கு நாங்கள் இன்னும் வளரவில்லை எத்தனையோ குறைகளை எங்களிடத்தில் வைத்துக்கொண்டு மற்றவர்களை குறை கூறிய இந்த பாவங்களுக்காக எங்களை மன்னியும் இனி எங்களால் முடிந்த வரைக்கும் குறை பேசக்கூடாது என்று ஒப்புக்கொடுக்கிறோம். எங்கள் நாவை சுத்திகரியும், என்னை ஆட்கொள்ளும்.
இவ்வாறு நாம் ஜெபிப்போமானால் தேவனுடைய ஆசிர்வாதங்களை பெற்றுக் கொள்வோம் அதை விட்டுவிட்டு பிறருடைய குறைகளையே நாம் பேசுவோமென்றால் ஆசிர்வாதங்களை பெறுவதற்கு பல நேரங்களில் அது தடையாக இருந்து விடும் கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே நீங்கள் அனைவரும் ஆண்டவரிடம் ஒப்புக்கொடுங்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

யாரையும் தீர்ப்பிடாதீர்கள்

மத்தேயு 7ம் அதிகாரம் 1 முதல் 5 வசனங்கள் வரை (“பிறர் குற்றவாளிகள் என தீர்ப்பு அளிக்காதீர்கள்: அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். 2 நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும். 3. உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்? 4 அல்லது அவரிடம், “உங்கள் கண்ணிலிருந்து துரும்பை எடுக்கட்டுமா?”என்று எப்படி

கேட்கலாம்? இதோ! உங்கள் கண்ணில்தான் மரக்கட்டை இருக்கிறதே! 5 வெளிவேடக்காரரே,முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள். அதன்பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்குக் தெளிவாய்க் கண் தெரியும்.) பிரியமான சகோதர சகோதரிகளே பிறர் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்காதீர்கள். அப்பொழுதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். பல காரியங்கள் நாம் பார்ப்பதற்கு தவறானவைகள் போல தோற்றமளிக்கிறது. நம்முடைய பார்வையிலே தவறாய் தோன்றுகின்ற பல காரியங்கள் தேவனுடைய பார்வையிலே நேர்மையானதாக தோற்றமளிக்கிறது. மனிதனுடைய பார்வையிலே நேர்மையானதாய் தோற்றமளிக்கிற பல காரியங்கள் கடவுளுடைய பார்வையிலே தவறானவைகளாக தோற்றமளிக்கிறது. இதைத்தான் மாயை என்று சொல்லுகிறோம். நாம் பார்க்கும் போது ஒரு விதமாக இருக்கும். ஆனால், தேவன் பார்க்கும் விதத்திலே அது நியாயமானதாக இருக்கும். அல்லது, அதை பண்ணுகிறவர்கள் வேறு ஏதாவது ஒரு நோக்கத்திற்காக செய்திருக்கலாம். நாம் நினைத்தபடி அவர்கள் தவறாக செய்யாமல் நல்ல நோக்கத்தில் செய்திருக்கலாம். நம்முடைய பார்வைகள் தெளிவாக இல்லை. ஒரு மனிதனுடைய உள்ளம் தூய்மையாக இருந்தால் அவர் பார்க்கின்ற பார்வை தூய்மை உள்ளதாக இருக்கும். உள்ளம் பரிசுத்தமற்றதாக இருந்தால் பார்வையும் தூய்மை உள்ளதாக இருக்கிறது. ஒரு திருடன் உங்களை பார்க்கிறான் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் ஒரு வீட்டிற்கு போய்விட்டு வந்தால் அந்த திருடனுடைய பார்வை எப்படி இருக்கும்? நீங்கள் அந்த வீட்டிற்கு உதவி செய்ய சென்றிருக்கலாம். ஆனால், திருடனுடைய பார்வை இவன் அந்த வீட்டிலே எவ்வளவு திருட போகிறான்? என்று யோசிப்பான். உள்ளம் தூய்மையாக இல்லாவிட்டால் அந்த பார்வை தூய்மையாக இருக்காது. இங்கே ஆண்டவர் கூறுகிறார் பிறர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்காதீர்கள். ஒரு உதவி செய்யப் போனவர்களை கூட திருடன் எப்படி பார்க்கிறான், தீர்ப்பளிக்கிறான், அவர்களையும் திருடனை போல தான் தீர்ப்பளிக்கிறான். அவர்கள் என்ன நோக்கத்திலே சென்றார்கள் என்று அவனுக்கு தெரியாது. ஆனாலும் அவன் தன்னைப் போலவே திருடதான் போயிருப்பான் என்றுதான் தவறான கண்ணோட்டத்துடன் தீர்ப்பளிக்கிறான். ஆகையினாலே இந்த வேத வசனம் இவ்வாறு கூறுகிறது மற்றவர்களை குற்றவாளிகள் என தீர்ப்பு அளிக்காதீர்கள். அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். எந்த அளவையால் நீங்கள் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கு அழைக்கப்படும்.புனித அந்தோனியாருடைய வாழ்க்கையிலே நடந்த ஒரு சம்பவத்தை குறித்து இங்கு பார்ப்போம். அவர்

கப்புச்சியின் சபையிலே துறவியாக இருந்தார். அவர் துறவியாக இருக்கும்போது அவருடைய பக்கத்து அறைகளிலே பல துறவிகள் இருந்தார்கள். ஒரு நாள் இரவு அவருடைய அறையில் இருந்து ஒரு பெண்ணுடைய சத்தம் கேட்டது. பக்கத்தில் இருக்கிற துறவிகளுக்கு ஒரே அதிர்ச்சி. ஏனென்றால், அந்தோனியாரை ஒரு புனிதராக அனைவரும் நினைத்தார்கள். அவர் மூலமாக ஆண்டவர் அனேக அற்புதங்களை செய்தார். அவருடைய பிரசங்கத்தை கேட்பதற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி வந்தார்கள், எத்தனையோ பாவிகள் அவருடைய பிரசங்கத்தின் மூலமாக மனம் மாறினார்கள்.அப்பேர்ப்பட்ட புனிதரின் அறையிலே இரவு நேரத்திலே ஒரு பெண்ணுடைய குரல் கேட்கிறதே சிரித்துப் பேசுவதைப் போல அந்த குரல் கேட்கிறதே என்று சுத்தி இருந்த மற்ற புனிதர்களுக்கு சந்தேகம். என்ன நடக்கிறது இங்கே ஒரு துறவற சபையிலே இப்படி எவ்வாறு நடக்கலாம் என்று சந்தேகத்தின் பேரிலே ஒருவர் ஓடி சென்று அந்தோனியாரின் அறை கதவு சாவி துவாரத்தின் வழியாக உற்றுப் பார்க்கிறார். உற்றுப் பார்க்கும்போது தான் அந்தோணியார் தன்னுடைய அறையிலே ஒரு மேஜையின் மேலே வேதாகம புத்தகத்தை வைத்து வாசித்து தியானித்துக் கொண்டிருந்தார் . அப்போது குழந்தை இயேசு அந்த புத்தகத்தின் மேல் நின்று அவரோடு பேசிக் கொண்டிருந்தார். அந்த இடமே பிரகாசமாக இருந்தது. ஆமென், அல்லேலூயா. அந்த ஒளிப்பட்டவுடனே அந்த துறவி கீழே விழுந்தார். அவர் கீழே விழுந்த சத்தத்தை கேட்ட உடனே அந்தோனியார் தனது கதவை திறந்து பார்த்தார். கீழே விழுந்து கிடந்த இந்த துறவியை பார்த்து நீங்கள் இங்கே பார்த்த இந்த காட்சியை நான் இறக்கும் வரைக்கும் எவரிடமும் சொல்லக்கூடாது என்று கூறினார். கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே அவர் போய் அதை பார்க்காவிட்டால் அங்கே என்ன சொல்லி இருப்பார் என்று நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். அந்த ஓட்டையின் வழியே உற்றுப் பார்த்தது ஒரு விதத்தில் நல்லது தான் . ஒருவேளை அவர் பார்க்காமல் இருந்திருந்தால் எல்லோரிடத்திலும் என்ன சொல்லி இருப்பார் ஒரு பெரிய புனிதருடைய பெயரை எவ்வளவு கலங்கப்படுத்த முடியுமோ அவ்வளவு களங்கப்படுத்தி இருப்பார். இதுதான் இன்றைக்கு அநேக இடங்களிலே நடக்கிறது மற்றவர்களை தீர்ப்பிடுபவதற்கு நாம் யார்?. நமக்கு என்ன தெரியும். அவர்கள் எந்த நோக்கத்திலே அதை செய்கிறார்கள் அல்லது என்ன செய்கிறார்கள் என்று நமக்கு எப்படி தெரியும். ஒன்றுமே தெரியாத நாம் ஏதோ ஒரு சத்தத்தை கேட்டு விட்டு அல்லது ஏதோ ஒன்றைக் கண்டுவிட்டு அதற்கு கை, கால், மூக்கு எல்லாம் வைத்து பலவிதமாக பேசி விடுகிறோம். இதை புறணி என்றும் சொல்லுகிறோம். அநேகர் இப்படி செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ஆண்டவர் ஒரு வார்த்தையை கொடுத்து நம்மை எச்சரிக்கிறார். என்ன எச்சரிக்கை கொடுக்கிறார் தீர்ப்பிடாதீர்கள். நீங்கள் எப்படி தீர்ப்பிடுகிறீர்களோ அதே

போலத்தான் மற்றவர்களும் உங்களை தீர்ப்பிடுவார்கள். நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாவீர்கள். நீங்கள் அளக்கிற அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும். ஆகையினாலே எவரையும் தீர்ப்பிடாதீர்கள். குற்றவாளிகள் என எவரையும் தீர்ப்பிடாதீர்கள் ஒரு மனிதன் குற்றவாளி என எப்படி தெரியும். தவறு செய்தவர்களை கூட தீர்ப்பிடுவதற்கு நாம் யார்?. ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களில் கையும் களவுமாக ஒரு பெண்ணை பிடித்துக் கொண்டு அவருக்கு முன்பாக நிறுத்தினார்கள். அந்தப் பெண் தவறு செய்துவிட்டால் என்பதினாலே அல்ல, இயேசுவை எப்படி சிக்க வைக்கலாம் என்பதற்காகவே அந்த பெண்ணை பிடித்துக் கொண்டு போய் அவருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவள் விபச்சாரத்தில் கையும் களவுமாக பிடிபட்டவள். மோசேயினுடைய சட்டப்படி இவளை கல்லால் எரிந்து கொள்ள வேண்டும். நீர் என்ன சொல்லுகிறீர்? என்று கேட்டார்கள். திரும்பத் திரும்ப இதே வார்த்தைகளை கேட்டுக் கொண்டே இருந்தாலும் கூட ஆண்டவர் இயேசு அவளை தீர்ப்பிடவில்லை அவர் தரையிலே குனிந்து எழுதிக் கொண்டிருந்தார். விடாமல் அவர்கள் அவரை கேட்டுகொண்டே இருந்ததால் அவர் உங்களுள் பாவமில்லாதவன் முதலில் கல்லை எறியட்டும் என்று சொல்லிவிட்டு திரும்பவும் குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார். அந்த பெண்ணை தீர்ப்பிட வந்தவர்கள் அத்தனை பேரும் அந்த கல்லை அப்படியே கீழே போட்டுவிட்டு ஒருவர் பின் ஒருவராக சென்று விட்டார்கள். பாவம் செய்கிற நாம் அல்லது பாவம் செய்து,கொண்டிருந்த நாம் எப்படி மற்றவர்களை திருப்பிட முடியும்? ஏதோ ஒரு காரியத்தை பார்த்து விட்ட உடனே அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள் அல்லது இப்படித்தான் இருப்பார்கள் என்று நம்மை அறியாமலே தீர்ப்பிட்டு விடுகிறோம். ஆனால் ஆண்டவர் சொல்லுகிறார் யாரையும் குற்றவாளிகள் என தீர்ப்பிடாதீர்கள். நீங்கள் அளிக்கிற தீர்ப்பையே நீங்களும் பெற்றுக் கொள்வீர்கள். மற்றவர்களை தீர்ப்பிடுவதற்கு நாம் யார்? சில காரியங்கள் நம்முடைய பார்வையிலே தவறானதாக தோன்றலாம் ஆனால் தீர்ப்பிடகூடிய ஒருவர் உண்டென்றால் அவர் தான் இயேசு கிறிஸ்து. அவர் பார்வை தான் சரியான பார்வை, அவர்தான் நீதி நேர்மையோடு தீர்ப்பிடுகிறவர். ஆகையினாலே, அப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் அவருடைய தீர்ப்புக்கு விட்டு விடுவோம், நாம் தீர்ப்பிடாமல் இருப்போம். ஒருவர் பின் ஒருவராக சென்ற உடனே ஆண்டவர் அந்தப் பெண்ணை பார்த்து “யாரும் உனக்கு தீர்ப்பிடவில்லையா”என்று கேட்டார். அவள் இல்லை ஐயா என்று கூறினார் அதற்கு இயேசு நானும் உன்னை தீர்ப்பிடவில்லை. தீர்ப்பிடக் கூடிய அதிகாரம் உள்ளவரே நான் தீர்ப்பிட மாட்டேன் என்று கூறுகிறார். கையும் களவுமாக பிடித்த பிறகும் கூட நான் தீர்ப்பிட மாட்டேன் என்று சொல்லுகிறார். அவருடைய பிள்ளைகளாகிய நாம் அநேக நேரங்களில் மற்றவர்களை எளிதாக தீர்ப்பிட்டு விடுகிறோம். ஆனால், ஆண்டவர் இதை ஒரு

எச்சரிக்கையாக நமக்கு கொடுக்கிறார்.மற்றவர்களை குற்றவாளிகள் என்று நீங்கள் தீர்ப்பிடாதீர்கள். இன்றைக்கு எத்தனை பேரை நாம் குற்றவாளிகளாக தீர்ப்பிட்டிருக்கிறோம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். ஒரே வீட்டில் இருப்போம் நம்முடைய குற்றங்களை நாம் உணர்ந்து கொள்ளவே மாட்டோம். மற்றவர்களைத்தான் நாம் குற்றவாளிகளாக அடிக்கடி தீர்மானித்துக் கொண்டே இருப்போம். குடும்பங்களிலே இதுதான் நடக்கிறது, துறவற சபைகளிலும் இதுதான் நடக்கிறது எங்கே சென்றாலும் இவ்வாறு தான் நடக்கிறது. ஆண்டவர் இதை தெளிவாக சொல்லுகிறார் நீங்கள் தீர்ப்பிடுவதற்கு முன்பாக ஒரு வார்த்தையை ஆண்டவர் நினைவுகூறுகிறார். உங்கள் கண்ணில் இருக்கிற ஒரு மரக்கட்டையை பார்க்காமல் உங்கள் சகோதரருடைய கண்ணிலே இருக்கிற துரும்பை நீங்கள் பார்க்கிறதென்ன?. உன் கண்ணில் தான் மரக்கட்டை இருக்கிறது முதலில் அந்த மரக்கட்டையை எடுத்து எரிந்து விடு அதன் பிறகு உன் சகோதரனுடைய கண்ணில் இருக்கிற துரும்பை எடுத்து போட உனக்கு பார்வை தெரியும் என்று கூறுகிறார். நம்முடைய கண்களில் இருக்கிற கட்டையை எடுத்துப் போடாமல் மற்றவர்களுடைய கண்களில் இருக்கிற துரும்பை எடுத்து போட முடியாது. இதை புரிந்து கொள்ளுங்கள் மற்றவர்கள் மனம் திரும்ப வேண்டுமென்று நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்களென்றால் ஒரு நல்ல காரியத்தை செய்கிறீர்கள்.ஆனால் அதற்கு முன்பாக ஒரு காரியம் இருக்கிறது உங்கள் கண்ணில் இருக்கிற அந்த மரக்கட்டை போக வேண்டும். அது போன பிறகுதான் மற்றவர்களுடைய கண்ணில் இருக்கும் துரும்பை குறித்து நீங்கள் யோசிக்க வேண்டும். உங்கள் கண்ணில் இருக்கிற அந்த கட்டையை அப்புறப்படுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். நாம் சுத்திகரிக்கப்படாமல் மற்றவர்களை சுத்திகரிக்க முடியாது . நம்முடைய கண்களில் இருக்கிற பெரிய மரக்கட்டையை தூக்கி எறிந்த பிறகு மற்றவர்களுடைய கண்களில் இருக்கிற துரும்பை எடுக்க எளிதாக வழி தெரியும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆகையினால் யாரையுமே அவசரப்பட்டு குற்றவாளிகள் என்று தீர்ப்பிடாதீர்கள்.ஷ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கேத்ரின் குல்மா என்ற ஒரு பெண் இருந்தார். அவர் கிறிஸ்துவுக்கு முழுமையாக தன்னை அர்ப்பணித்து ஊழியம் செய்து வந்தார். அவரது ஊழியத்தில் நடக்காத அற்புதங்களே இல்லை.அவரை பலர் மிராக்கிள் லேடி (miracle lady) என்று தான் கூறுவார்கள். அற்புதப் பெண் என்று தான் அவரை கூறுவார்கள். அவருடைய கூட்டத்திலேயே கலந்து கொள்வதற்கு 11 மணிக்கு ஆலயம் திறக்கப்படுமென்றால் அதிகாலை 2 மணிக்கெல்லாம் அந்த ஆலயத்தினுடைய வாசலில் ஆட்கள் காத்துக் கிடப்பார்கள். எப்படியாவது சுகம் பெற வேண்டும். அவ்வளவு வல்லமையோடு ஆண்டவர் அவர்களை பயன்படுத்தி இருந்தார். அவருடைய வாழ்க்கையிலே பல வருஷங்களுக்கு முன்பாக நடந்த சில காரியங்களை

பத்திரிகைகள் மிக கேவலமாக எழுதியிருந்தது. அதில் முக்கியமான ஒரு காரியம் என்னவென்றால் அவர்கள் முழு நீளமான அழகான ஒரு ஆடையை அணிந்து கொண்டு அந்த ஆலயத்திற்கு வருவார்.கால்களை மறைத்துக் கொண்டிருக்க கூடிய ஒரு ஆடையை அணிந்து கொண்டிருப்பார். விலை உயர்ந்த அந்த ஆடையை அணிந்து கொண்டு தான் அந்த ஆலயத்திலே ஆராதனை நடத்துவார். இதுவே பலருக்கு விமர்சனமாகிவிட்டது. ஊழியம் செய்கிறார்கள், இவ்வளவு அதிகமான விலைக்கு ஆடையை அணிந்து இவர்கள் ஊழியம் செய்ய வேண்டுமா? என்று விமர்சனம் செய்தார்கள். ஆனால் அந்த சகோதரியும் அந்த விமர்சனங்களை கண்டு ஒரு வார்த்தை கூட சொல்ல மாட்டார். அவர்கள் சொல்லுவார்கள் அவைகளை எல்லாம் நான் காது கொடுத்து கேட்டால் என்னால் உயிர் வாழவே முடியாது என்று சொல்லுவார்கள். அதை காதிலே வாங்க மாட்டார்கள் ஆனால் அவருடைய மரணத்திற்கு பிறகு அவரோடு ஊழியத்தில் இருந்த ஒரு சகோதர் ஊடகங்களுக்கு ஒரு பேட்டி அளித்தார். கேத்ரின் குல்மானுடைய ஊழிய தொடக்க காலத்தில் இருந்தே அவருக்கு ஒரு இருதய வியாதி இருந்தது. எத்தனையோ மனிதர்கள் அவர்களுடைய கூட்டத்திலே சுகமானார்கள்,அற்புத சுகத்தை பெற்றார்கள், வளைந்து போயிருந்த கால்கள் கூட ஒரு நொடியிலே நேராகிவிடும், கேன்சர் கட்டிகள் எல்லாம் மறைந்துவிடும், மருத்துவமனையில் ஆபரேஷன் செய்து விட்டு நேராக இந்த கூட்டத்திற்கு நோயாளிகளை அழைத்து வந்திருப்பார்கள் அந்த தையலும் ஆபரேஷன் பண்ணின தழும்பும் கூட இல்லாமல் மறைந்து விடும். அவ்வளவு அற்புதங்கள் அவர்களுடைய வாழ்க்கையில நடந்தாலும் அவர்களுடைய இருதய வியாதி அவருக்கு இருக்கத்தான் செய்தது. அவர் சொன்னார் இந்த இருதயம் துடிப்பது அப்படியே வெளியே தெரியுமென்று.அவர்களுடைய இருதயமானது வீங்கி போயிருந்தது அவ்வளவு வேதனைகளை அனுபவித்து கொண்டு தான் அந்த ஊழியத்தை செய்து வந்தார். அப்படி இருதயம் வீங்கி போனதினாலே கால் கணுக்கள்கள் எல்லாம் வீங்கி போனது தனக்கு இப்படி வீங்கி இருப்பதை மக்கள் பார்த்து விட வேண்டாம் என்றுதான் அவர் அந்த நீளமான ஆடையை அணிந்து கொண்டு பிரசங்கம் செய்வார் என்று கூறினார். ஒரு மனிதனுடைய இதயத்திலே என்ன இருக்கிறது என்று அனேக நேரங்களில் நாம் புரிந்து கொள்ள முடிவதில்லை. புரிந்து கொள்ளாமல் நாம் பல விதங்களில் குறை சொல்லுகிறவர்களாக அல்லது தீர்ப்பிடுகிறவர்களாக இருக்கிறோம். இதைத்தான் ஆண்டவர் கூறுகிறார் “பிறர் குற்றவாளி என்று தீர்ப்பிடாதீர்கள்” வெளித் தோற்றத்தை பார்த்து தீர்ப்பிடாதீர்கள். தேவன் இருதயத்தை பார்க்கிறார் மனிதன் முகத்தை பார்க்கிறார் கடவுளோ ஒரு மனிதனுடைய இதயத்தை பார்க்கிறார். தீர்பிடுவது நம்முடைய வேலை அல்ல ஏதாவது ஒரு காரியங்களை நாம் கேள்விபடவோ அல்லது பார்ப்பதாகவோ இருந்தால் கூட உடனே ஒரு முடிவுக்கு வந்து

விடக்கூடாது. சிலர் தவறான வாழ்க்கையிலே ஈடுபட்டு இருக்கிறார்கள் என்றாலும் கூட அதற்கு அவர்கள் மட்டும் காரணம் என்று நாம் கூற முடியாது. பல காரணங்கள் இருக்கிறது சிலர் சில பாவங்களுக்கு அடிமையாகி போனதற்கு அவர்கள் மட்டுமே காரணம் என்று நாம் சொல்ல முடியாது. சில சூழ்நிலைகள், சில பாவ சூழ்நிலைகள், அவருடைய வாழ்க்கையிலே இருந்த வளர்ப்பு முறைகள் இவையெல்லாம் சேர்ந்து அவர்களை பாதித்து அந்த சூழ்நிலைகளுக்கு தள்ளி இருக்கலாம். நாம் ஒரு நல்ல சூழ்நிலையிலே வளர்ந்து இருக்கிறோம். ஆண்டவர் நம்மை ஒருவேளை இப்படிப்பட்ட பாவங்களில் வைத்திருக்காமல் இருந்ததற்காக பிறரை தீர்ப்பளிக்காதீர்கள். தவறு செய்த உடனே அவர்களை குற்றவாளிகள் என தீர்ப்பளிக்காதீர்கள். ஆமென்,அல்லேலூயா. ஒரு ஒரு மனிதன் மணியாட்டி கொண்டு பிறரிடத்திலே யாசகம் கேட்டு தன்னுடைய வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார். அப்படி போய்க் கொண்டிருக்கும்போது கிறிஸ்தவர்களை கண்டாலே அவருக்கு பிடிக்காது என்று கூறுவார். அங்கு இருப்பவர்கள் கேட்டார்கள் “ஏன் உனக்கு பிடிக்காது?” என்று. ஏனென்றால் கிறிஸ்தவர்கள் வீடுகள் பக்கம் நான் சென்றாலே போ பிசாசே தூர என்று என்னை விரட்டி விடுவார்கள். எனவே கிறிஸ்தவர்களை பிடிக்காது ஒரு நாள் இவ்வாறாக ஒரு கிறிஸ்தவ வீட்டிலே அவர் மணி அடித்தார். இவர் மணியோசை கேட்டவுடன் அந்த வீட்டிலே விளக்கு எரிந்தது. விளக்கு போட்ட உடனே அந்த மனிதன் நினைத்தாராம் நம்முடைய மணியோசைக்கு மதிப்பு கொடுத்து இருக்கிறார்கள் என்று. எனவே அடுத்த நாள் அந்த மனிதர் அதே வீட்டிற்கு சென்றார்.ஸ அங்கே சென்றவுடன் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அவர் அறிந்து கொண்டார். முதலில் அவர் தயங்கினார் ஏனென்றால் அவர்கள் விரட்டி விடுவார்கள் என்று ஒரு பயம். ஆனால் அங்கே இருந்த சகோதரி அவரை அன்போடு வரவேற்று அவருக்கு தேநீர் கொடுத்து ஆண்டவர் இயேசுவின் அன்பை பற்றி அவருக்கு தெரிவித்தார்கள். ஆமென், அல்லேலூயா. அப்பொழுது அந்த மனிதர் கூறுகிறார் என்னைப் போன்ற மக்கள் உங்களைத் தேடி வந்தால் அவர்களை விரட்டி விடாதீர்கள் அவர்கள் மேல் அன்பு காட்டி ஆண்டவர் இயேசுவைப் பற்றி கூறுங்கள் என்று சொன்னார். ஆமென், அல்லேலூயா. பல நேரங்களிலே நாம் எப்படி தீர்ப்பிடுகிறோம், நம்முடைய மனநிலை எப்படி இருக்கிறது என்று பாருங்கள்.ஸ ஆகையினாலே ஆண்டவர் கூறுகிறார் “யாரையும் தீர்ப்பிடாதீர்கள்”. ஒருவருடைய உள்ளத்திலே இருக்கிறது என்ன என்று நமக்கு தெரியாது அவர்கள் செய்கிற தொழிலை வைத்து அல்லது அவர்கள் செய்யக்கூடிய தவறை வைத்தோ தீர்ப்பிடாதீர்கள். ஒரு முடிவிற்கு வந்து விடாதீர்கள். தீர்ப்பு என்பது நம்முடைய வேலை அல்ல. மோசேயை பாருங்கள், இஸ்ரவேல் ஜனங்கள் எத்தனை முறை மோசேக்கு எதிராக முறுமுறுத்தார்கள் என்று நமக்கு தெரியும். ஆண்டவர் அதை கணக்கெடுத்திருக்கிறார். அவர் இந்த இஸ்ரேல் மக்கள்

பத்து முறை எனக்கு எதிராக முனுமுனுத்தார்கள் என்று கூறினார். ஆண்டவருக்கு கூட இந்த ஜனங்களுடைய முணுமுணுப்பு எரிச்சலை கொண்டு வந்தது. ஆனால் மோசே இந்த ஜனங்களுக்கு நன்மை செய்யும்படியாக போனார். இந்த ஜனங்களை எப்படியாவது அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி கானான் தேசத்திற்குள்ளே பாலும் தேனும் ஓடுகின்ற தேசத்திற்குள்ளே அழைத்துச் செல்ல வேண்டும் என்று ஒரே நோக்கத்திலே தீர்மானித்து சென்றார். ஆனால் இந்த ஜனங்கள் மோசே அற்புதங்களை செய்யும்போதெல்லாம் கைதட்டினார்கள், தேவனை துதித்தார்கள், மகிழ்ச்சி அடைந்தார்கள் ஆனால் கொஞ்சம் அவர்களுக்கு சிரமம் வந்துவிட்டால் உடனே மோசேக்கு விரோதமாகத்தான் பேசினார்கள். ஆனால் மோசயோ அந்த மக்கள் பேசின எதையும் மனதில் வைக்காமல் வழிநடத்திக் கொண்டு வந்தார். இறுதியாக மோசேயை ஆண்டவரால் எடுத்துக் கொள்ளப்படக்கூடிய நேரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் கூப்பிட்டு அவர்களுக்கு சில ஆலோசனைகளை சொல்லுகிறார். இணைச் சட்டம் 29 வது அதிகாரத்தில் 2 முதல் 4 வது வசனத்தில் நாம் அதை வாசிக்கிறோம் மோசே இஸ்ரவேலர் அனைவரையும் வரவழைத்து கூறியது **எகிப்து நாட்டில் பார்வோனுக்கும், அவன் அலுவலர்கள் அனைவருக்கும், அவன் நாடு முழுமைக்கும் உங்கள் கண் முன்பாக ஆண்டவர் செய்தவற்றை நீங்கள் கண்டீர்கள். கொடிய சோதனைகளையும் அடையாளங்களையும் அருள் செயல்களையும் வியத்தாக செயல்களையும் அங்கே உங்கள் கண்களால் கண்டீர்கள்.** இங்கு இந்த மக்கள் செங்கடல் இரண்டாய்பிளந்ததையும் பார்வனுடைய படைகளை கடலிலே மூழ்கடித்ததையும், பாலை நிலத்திலே மன்னாவை பொழிந்து அவர்களை போஷித்ததையும் பார்த்தீர்கள், காடைகளை வரவழைத்து உணவு கொடுத்ததையும், பார்த்தீர்கள். இப்படி அனுதினமும் ஆண்டவருடைய அற்புதங்களை சுவைத்தீர்கள் என்று மோசே இவ்வாறு கூறுகிறார். **ஆயினும் புரிந்து கொள்ளும் உள்ளத்தையும், காண்கிற கண்களையும், கேட்கிற செவிகளையும் இந்நாள் வரை ஆண்டவர் உங்களுக்கு தரவில்லை** என்று கூறுகிறார். இதை எல்லாம் பார்த்தும் கூட உணரக்கூடிய மனதையும், காணக்கூடிய கண்களையும்,தேவனுடைய குரலை கேட்கிற செவிகளையும் இதுவரைக்கும் ஆண்டவர் உங்களுக்கு தரவில்லை. 40 ஆண்டுகள் உங்களை பாலை நிலத்திலே கூட்டி வந்தார். உங்கள் மேல் உள்ள ஆடைகள் நனைந்து போகவில்லை, உங்கள் காலில் உள்ள காலடிகள் பழுதடைந்து போகவும் இல்லை, இதனால் நானே கடவுளாகிய ஆண்டவர் என்று நீங்கள் உணர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்று மோசே கூறினார்.இவ்வளவு அற்புதங்களை ஆண்டவர் செய்தும் கூட புரிந்து கொள்ளக்கூடிய ஒரு இருதயம், காண்கின்ற கண்கள், கேட்கின்ற செவிகள் இவைகளை இதுவரைக்கும் ஆண்டவர் அவர்களுக்கு கொடுக்கவில்லை.

ஆனால் இந்த சூழ்நிலையிலும் கூட மோசே அந்த மக்களை குறை சொல்லவே இல்லை.ஸ அந்த மக்களை தீர்ப்பிடவும் இல்லை. ஒருவேளை மோசேக்கு பதிலாக நாம் அங்கே இருந்திருந்தால் என்ன செய்திருப்போம் சிந்தித்துப் பாருங்கள். எவ்வளவு அற்புதங்கள் நடந்தாலும் இந்த ஜனங்கள் அதை கண்டுணர்வதில்லை ஆண்டவரே இவ்வாறு கூறிவிட்டார் இந்த ஜனங்கள் வணங்கா கழுத்து உள்ள மக்கள் என்று. இவ்வாறு தான் நாம் கூறியிருப்போம். ஆனால் மோசேயோ அவர்களை தீர்ப்பிடவில்லை. மாறாக ஆண்டவருடைய கிருபை இன்னும் உங்களை வந்தடையவில்லை என்று கூறினார். கிறிஸ்துவுக்குள் மிகவும் வளர்ந்தவர்கள், புனிதர்கள், எல்லோரும் இப்படித்தான் இருந்திருக்கிறார்கள். ஆனால் தலைமுறை தலைமுறையாக இருக்கிற நாம், நம்முடைய கண்களிலே கட்டைகளை வைத்திருக்கிற நாம் தான் அனேக நேரங்களிலே பிறருடைய துரும்புகளை பார்த்து பார்த்து தீர்ப்பிடக் கூடியவர்களாக இருக்கிறோம். ஆனால் ஆண்டவர் இன்றைக்கு கூறுகிறார் “பிறரை குற்றவாளிகள் என்று தீர்ப்பிடாதீர்கள்” ஒருவேளை இவ்வாறு தீர்ப்பளித்தீர்கள் என்றால் இந்த நாளிலே மனம் மாறுங்கள். அது ஒரு வேலை உங்கள் ஆசிர்வாதத்திற்கு தடையாக இருக்கலாம், நீங்கள் சுகம் அடைவதற்கு ஒரு தடையாக இருக்கலாம். மற்றவர்களுடைய குற்றங்களையே பார்த்துக் கொண்டு உங்கள் குறைகளை பார்க்க முடியாதவாறு உங்கள் கண்கள் மறைக்கப்பட்டு போயிருக்கலாம். அது நீங்கள் சுகமடைவதற்கு உங்கள் வாழ்க்கையில் ஒரு தடையாக வந்து கொண்டிருக்கலாம். இந்த நேரத்திலே யாரையும் நான் குற்றவாளிகள் என்று தீர்ப்பிட மாட்டேன் என்று இறைவனிடம் ஒப்புக்கொடுங்கள். தேவன் உங்களை தொடுவார், அவர் உங்கள் வாழ்வை மாற்றுவார், அவர் உங்களை உயர்த்துவார். ஒப்புக் கொடுப்போமா மற்றவர்களுடைய குறைகளையே பார்த்து பார்த்து தீர்ப்பிட்டுக் கொண்டிருக்கிற சகோதரனே சகோதரியே, மற்றவர்களுடைய பாவங்களை பார்ப்பதற்கும் தீர்ப்பதற்கும் நம்மை தேவன் உண்டாக்கவில்லை.;என்னுடைய குறைகளை பார்த்து நான் சரி செய்வதற்கும், திருந்துவதற்கும் தான் ஆண்டவர் என்னோடு கூட இருக்கிறார். என்னுடைய குற்றத்தை நான் கண்டுபிடிக்க, என் தவறுகளை கண்டுபிடித்து நான் அதிலிருந்து வெளியே வருவதற்காகத்தான் ஆண்டவர் என்னை அழைத்திருக்கிறார்.ஸ எத்தனை எத்தனை முறை அநியாயமாக மற்றவர்களை நாம் தீர்ப்பிட்டு விடுகிறோம், அவர்கள் மிக மிக மோசம் என்று பேசி விடுகிறோம். இவர்களோடு யாரும் வாழ முடியாது என்று கூறி விடுகிறோம், ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். இந்த வேலையில் நாம் ஒப்புக்கொடுப்போம். இனி ஒருபோதும் மற்றவர்களை தீர்ப்பிட மாட்டேன். ஆண்டவரே அவர்களுக்கு அந்த கிருபை அளிக்கப்படவில்லை எனக்கு அந்த கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது நான் இன்னும் தகுதியுள்ளவனாக மாற முடியும். எனக்குள் இருக்கிற குறைகளை

சுட்டிக்காட்டும் என்று கேட்போம். அப்போது ஆண்டவர் விவிலியத்தில் அந்த பணக்கார வாலிபனுக்கு சுட்டிக்காட்டியது போல நமக்கும் சுட்டிக்காட்டுவார். நம்முடைய வாழ்வு மாறும் நம்முடைய வாழ்வு உயர்த்தப்படும்.

ஜெபிப்போம்

அன்புள்ள பரலோக பிதாவே நீர் இந்த வார்த்தைகள் மூலமாக எங்களோடு பேசியதற்கு நன்றி. எங்கள் எல்லோருடைய இதயத்தையும் நீர் அறிவீர் நாங்கள் எத்தனையோ முறை அறியாமல் தீர்பிட்டு விடுகிறோம் அதற்காக எங்களை மன்னியும். எங்கள் குறைகளை மட்டுமே நாங்கள் பார்க்கவும் மற்றவர்களுடைய குறைகளை தீர்ப்பிடாமல் இருக்கவும் ஒரு நல்ல இருதயத்தை எங்களுக்கு தருவீராக. வெளிவேடக்காரரை போல நாங்கள் வாழாமல், எங்களை ஆராய்ந்து சுத்திகரிக்க கூடிய இதயத்தை தாரும். அனேக நேரங்களிலே நாங்கள் இந்த சோதனைகளிலே விழுந்து போகிறோம், இதில் விழுந்ததினாலே எத்தனையோ பேர்களை நாங்கள் தீர்ப்பிடுகிறோம். ஒரு கசப்பையும், ஒரு வெறுப்பையும் அல்லது அன்பு செய்ய முடியாத அளவுக்கு எங்கள் உள்ளம் கடினப்பட்டு போயிருக்கிறதை நாங்கள் காண்கிறோம். இந்த வேளையிலே எங்களை மன்னியும், எங்களை சுத்திகரியும் எங்களை மாற்றும். எங்கள் உள்ளத்தில் இருக்கிற அன்பு தெய்வமே இன்று எங்களை தொடுவீராக. எங்கள் கடின இருதயம் உடைக்கப்படுவதாக. எங்கள் தவறுகளை நாங்கள் உணர்ந்து கொண்டு இன்னும் அதிகமாய் உமக்குள் நெருங்கி சேர எங்களை பலப்படுத்துவீராக. எங்கள் பலத்தினால் அல்ல எங்களை வலுவூட்டுகிற உம்மால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என நாங்கள் நம்புகிறோம். எங்கள் வாழ்க்கை சுத்திகரிக்கப்படட்டும் உமக்கு உகந்த ஜீவியமாக மாறட்டும். இன்று முதல் எங்கள் கண்கள் பார்க்கிற கண்களாகவும் எங்கள் செவிகள் கேட்கிற செவிகளாகவும் எங்கள் இருதயம் உம்முடைய சத்தியத்தை புரிந்து செயல்படுகிற இதயமாக மாற எங்களை தொடுவீராக. எங்களுடைய புரிந்து கொள்ளுதலை நீர் தொடுவீராக, எங்கள் உள்ளத்தை திறப்பீராக, உம்முடைய வார்த்தைக்கு நேராக எங்களுடைய இருதயங்கள் திரும்பட்டும். இன்று உம்முடைய கரங்களினாலே எங்களைத் தொடும் ஆசீர்வதியும் ஒவ்வொரு பிள்ளைகளும் சுகம் அடையும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். இந்த வார்த்தைகளை கேட்டு ஒப்புக்கொடுக்கிற ஒவ்வொரு பிள்ளைகளையும் உம்முடைய கரம் தொடுவதாக. இன்றே இப்பொழுது நீர் தொட வல்லவர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். இங்கு இருக்கிற ஒவ்வொருவரையும் தொட நீர் வல்லவர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் உம்முடைய வல்லமை அதைவிட அதிகமான தூரம் செல்லக்கூடியது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆண்டவரே இப்போது உம்முடைய வல்லமை அவர்கள்

இருக்கிற இடத்திலே இறங்கி வரட்டும். ஒவ்வொரு பிள்ளைகளின் மேல் இறங்கி வரட்டும். தடுமாற்றங்களில் இருக்கிறவர்கள், என்ன செய்வதென்று அறியாமல் இருக்கிறவர்கள், செத்துவிடலாமா என்று நினைக்கிறவர்கள் அனைவரையும் நீர்த்தொடும். அந்த எண்ணங்கள் அனைத்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் விலகட்டும். ஆமென்.